Regd. No. M. 2569

12-32

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 7

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 11

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1355 ஷஃபான்மீ 1936ஆ நவம்பர்மீ

1.	அல்குர்ஆன் ...	313
2.	நாயக வாக்கியம் ...	315
3.	ஒற்றுமைக்கு வழி ...	317
4.	ஐரோப்பியர் இஸ்லாத்தைத் தழுவுவதேன்?	319
5.	சுயமரியாதைக் குழுக்கள் சாதித்ததென்ன?	326
6.	சக்தி எங்கே இருக்கிறது? ...	328
7.	பத்திரிகைகளும் சமூக துவேஷமும் ...	330
8.	உலக சமாதானத்திற்கு ஆபத்தா? ...	332
9.	பர்தாவின்மையின் பயன் ...	336
10.	மௌலானா வித்தீகி ...	341
11.	காதியானிகளும் சுன்னத்து ஜமாஅத்தும் ...	349
12.	"முஸ்லிம் யூத்"தின் அறியாமை ...	351

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

208350
208350

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1355 ஷஃபான் ௴ 1936 ௵ நவம்பர் ௴	இதழ் 11

அல் குர்ஆன்

(மானிடர்காள் !) உங்களுக்கு ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களில் அழகிய முன்மாதிரி உண்டாயிருக்கிறது.

திருகுர்ஆன்.

சோதரீர்! நபிகள் பெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களது தூய்மை பொருந்திய மேலானவாழ்க்கையானது மானிட வர்க்கத்தினர் நேர்வழி பெறுவதற்குள்ள தீண்டாமணி விளக்காக இலங்கிக்கொண்டிருக்கிறதென்பதும், மனிதவாழ்க்கையின் ஒவ்வொரு பிரிவும் பெருமானார் (ஸல்,) அவர்களினது அடிச்சுவட்டை முன்மாதிரியாகக் கொண்டிருக்கிறதென்பதும் மகான்களாய மேதாவிகளின் முடிவான தீர்மானமாகும். எனவே, சாதாரண மனிதனொருவன் அவ்வுத்தமரைப் பின்பற்றி நடப்பது கொண்டு ஒரே நேரத்தில் இகபர சாதனங்கள் இரண்டையும் பெற்றுய்ய முடியுமென்பது நமது துணிவான முடிபாகும். இதனால்தான் தூய்மைபொருந்திய அவ்வாழ்க்கை எவ்விதத்திலும் பரிபூரணமற்றதாக விருக்கிறதென்று எவராலும் கூறமுடியாது.

பொருமை, தாழ்மை, கிருபை, அன்பு, ஞாயம், ஒழுங்கு, பேணுதல் முதலிய பரலோக முன்னேற்றத்தைக் கொடுப்பதாய நற்குணங்களை கவனித்தோமாயின் நம்பெருமானார் (ஸல்.) அவர்கள் இக்குணங்களில் சிறந்துவிளங்கியதைத் தெரிந்துகொள்வோம். தாங்கள் ஓர் பெரும் வழிகாட்டியாகிய மார்க்கத்தலைவராகயிருந்ததுடன் சற்குணம்ததும்பும் சத்திய சீலராகவும், தாழ்மையே பூஷணமாகக் கொண்ட மகானாகவும் சிறந்து விளங்கியதால் வெளிரங்கமான ஆடம்பரத்தையும் மேதைமரியாதைகளையும் மிகமிக வெறுப்பவர்களாகவே விருந்தார்கள்.

நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கிருபை தயாளம் முதலிய உத்தம குணங்களில் முதன்மை பெற்றிருந்தார்களாதலின் தங்களது உயிருக்கே ஆபத்தாகவிருந்த கொடும்பகைவர்களிடம்கூட, பழிவாங்க வேண்டுமென விருப்பங்கொண்டார்களில்லை. விருந்துபசாரம் புரிவதிலோவெனின், கஷ்டப்பட்டுவரும் எவரும் வெறுங்கையாக திரும்பியது கிடையாது. ஒருக்

கால் தங்களிடம் அதிகமில்லாது ஏதாகிலும் இரண்டொரு காசு இருக்குமாயினும் அதையும் தருமஞ்செய்து விடுவார்கள். பேணுதலிலோ, தங்கள் ஜன்மப் பகைவருங்கூட, எவ்வித சந்தேகமுங்கொள்ளக் கிடையாது. தங்கள்மீது கடும் குரோதம் கொண்டிருந்தவன் கூட, தாங்கள் நிகரற்ற பேணுதலுடையவர்களென்று மனதாரக் கூறிக்கொண்டிருந்தான்.

நமது சத்தியத்தூதர் (ஸல்,) அவர்கள் ஒழுங்கு சத்தியத்தை முன்வைத்து ஒவ்வொரு காரியங்களையும் செய்துவந்தார்கள். மிதமிஞ்சிய பகைமை குரோதம் கொண்டவர்களிடமும் ஞாயம் ஒழுங்கு என்னும் முந்தாணியை சற்றும் சோரவிட்டார்களில்லை. இது ஆத்மார்த்த முன்னேற்றத்தினது அழகிய முன்மாதிரியின் நமூனுவாகும்.

இனி உலக முன்னேற்றத்திற்குரிய குணங்களாய கஷ்டமெடுத்தல், யோசனைபுரிதல், மனோ உறுதி, தைரியம், தியாகம், வீரியம் முதலியவைகளை ஆராய்ந்து பார்ப்போமாயின் இக்குணங்களில் நமது சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் அழகிய நிறப்பமான முறையில் தலைசிறந்து விளங்கினார்களென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். நம்பெருமானார் (ஸல்.) அவர்கள் சூர்ய உதய முதல் அஸ்தமனம் வரையிலும் இன்னும் இரவின் மிகுதநேரத்தையும் அல்லாஹ்வை வணக்கம் புரிவதிலும் மக்கட்கு நேர்வழி காண்பிப்பதிலும் செலவிடுவார்கள். காலஜீவினத்தின் கடமையையும் நிறைவேற்றுவார்கள். உலகிலுள்ள மற்றெவரும் இவ்வாறான ஆழ்ந்த சிந்தனை ஒருக்காலும் புரியமுடியாது. இத்தியாதி சற்குணங்கள் பூண்டொழுகியதன் காரணமாகவே காட்டுமிராண்டியர்களான அறபிகளை பரிபூர்ண மக்களாய்த் திகழும்படி செய்துவிட்டார்கள்.

பல நூற்றுக்கணக்கான வருடங்கள் வரை துளிர்விட்டெறிந்து கொண்டிருந்த பல வழிகேடுகள் தூய்மை பொருந்திய தங்களது சத்போதனையால் சில நிமிடங்களில் அழிந்து நாசமாய்ப்போயிற்று. ஒவ்வொரு கெடுதிக்கும் தலைமை ஸ்தலமாகவிருந்த அந்த அரப் தேசத்தின் பூமி சீதேவித்தனமுடைய பாகமாக மாறிவிட்டது. மனோ உறுதி தைரியம் இவைகளுக்கு தாங்கள் அரசராக விருந்ததால் பலவாறான கடின எதிர்ப்புகளிடையே சீர்திருத்தம் நேர்வழியின் காரியங்களை இனிய முறையில் நிறைவேற்றல் இவைகளிற் சிறந்து விளங்கினார்கள். திடுக்கிட செய்யும் பற்பல கஷ்டங்களுக்கிடையே உறுதியினுடைய மலையை நிலைநாட்டினார்கள். சக்திபொருந்திய வல்லமைகளுக்கு முன் தங்களுடைய இயலாமையை வெளிப்படுத்தாது நிகரற்ற அறிவாற்றலின் காரணமாக பகைவர்களை மிகைத்துவந்தார்கள்.

தங்களின் கடும் விரோதிகளுங்கூட தாங்கள் நேர்வழிகாண்பிப்பதற்கு வயப்பட்டு தங்களுக்காக உயிர் தியாகஞ்செய்யும் உத்தமர்களாக மாறிவிடுகின்றார்கள். உதாரணமாக, பாரூக அஃலம் ஹஸ்ரத் உமரிப்னுகத்தாப் (ரலி.) அவர்களது விஷயம் யாவருக்கும் தெரியாததன்று. இஸ்லாத்தின் ஆரம்பத்தில் இவர்கள் நம் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களுக்கு பெரும்விரோதியாக விருந்தார்கள். ஆனால் சில காலத்திற்குப்பின் இன்னுயிரை இன்பமுடன் தியாகஞ்செய்யும் இனிய குணமுடையவர்களாயும் இஸ்லாத்தின் நிகரற்ற நண்பராயுமாறிவிட்டார்கள். ஹஸ்ரத் காலிதிப்னு வலீத் அவர்கள் நம்பெருமான் (ஸல்.) அவர்களின் கடும்பகைவராகயிருந்ததுடன் உஹத் யுத்தத்தில் பகைவர்களுடன் சேர்ந்துகொண்டு இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் அளவற்ற கெடுதிசெய்து வந்தது இன்றுவரை சரித்திரங்களில் காணக்கிடக்கின்றது. இவ்வாறான காலித் (ரலி.) அவர்கள் ஒருநாள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்காக உயிர்தியாகஞ்செய்யும் உத்தம ஊழியராக மாறிவிட்டார்கள். பல ஆண்டுகள்வரை இஸ்லாத்தின் பகைவராகவிருந்து ஏழை முஸ்லிம்களை வதைத்து தொந்திரவு செய்துகொண்டு வந்த அம்றுப்னுஆஸ் ஒரேநாளில் இஸ்லாத்திற்காக இன்னுயிரை தியாகஞ்செய்யும் இனிய உபதேசியாக மாறிவிட்டார். சரித்திரப் புத்தகங்களை நோட்டமிட்டுப் பார்ப்போமாகில் இவ்வாறான பற்பல சந்தர்ப்பங்கள் மிளிர்ந்திலங்கிக் கொண்டிருப்பதைக் காண்போம். முடிவாகக் கூறுமிடத்து, நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது தூய்மை பொருந்தியவாழ்க்கையானது நம்மவர் ஈடேற்றம் பெறுவதற்கான தீபம்போல் இலங்கிக்கொண்டிருக்கிறதென்பது வெள்ளிடை. ஒரு பரிபூர்ண முஸ்லிமுக்குள்ள அம்சங்கள் யாவற்றையும் அல்லாஹ்தஆலா நம்பெருமானார் (ஸல்.) அவர்களில் அமைத்திருந்ததால் அவைகள் யாவையும்தக்க முறையில் பிரயோகஞ்செய்து மானிட உலகத்திற்கு அழகிய ஓர் முன்மாதிரியை ஸ்தாபித்து வைத்தார்கள். ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக

நாம் அம்முன்மாதிரியைப் பின்பற்றி யொழுகுவதை விட்டு வெகுதூரத்தில் போய்க்கிடக்கிறோம். நாம் சற்று அறிவென்னும் தீபத்தை கையிலேந்திப் பார்ப்போமாகில் நம்முடைய வீடு கல்வி அறிவு என்னும் சிறந்த குணங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும் நிலைமையில் நாம் வழிகேடு என்னும் அந்தகாரத்தில் மூழ்கியிருக்கும் துர் அதிர்ஷ்டவாதிகளாகயிருப்பதைக் கண்டுகொள்வோம். உலகின் சிறந்த மனிதருடைய அழகிய முன்மாதிரி நம்மிடமிருக்கும்போது நாம் அதனை மறந்து வழிகேடு என்னும் காட்டில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே, அருமை நேசர்காள்! நாம் நம்மில் காணப்படும் பலவாறான துர்குணங்களையும், நம்மை கெடுதியின் பக்கல் கொண்டுபோகும் வழிகேடுகளையும் விட்டகன்று நம்பெருமானார் நபியுல்கரீம் (ஸல்.) அவர்களின் அழகிய முன்மாதிரியை நமக்கு வழிகாட்டியாகக் கொண்டு நடக்கவேண்டியது நம்மீதுள்ள முக்கியக்கடமையாகும். எனவே, நாம் இக்காலை நமது ரஸூல் (ஸல்.) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்போமாகில் நமது துர்நடத்தைக்கு ஓர் முடிவு ஏற்பட்டுவிடும்; நாம் ஏற்கனவே அடைந்திருந்த உச்சஸ்தானத்தை அடைந்து மேலோங்கி சிறப்புற்று விளங்குவோம். இதனால் தான் அல்லாஹ் தஆலா நம்மை ரஸூல் (ஸல்.) அவர்களது அழகிய முன்மாதிரியைப்பற்றி நடக்குமாறு மகுடத்தில் கண்ட திருவாக்கியத்தின் மூலம் அறிவிக்கிறான். அல்லாஹ் தஆலா நம்மனைவர்களையும் உண்மையாகவே அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி நடந்து ஈடேற்றம் பெற்றவர்களாய்ச் சிறந்து விளங்கிய சீதேவிகளின் கூட்டத்திலாக்கி வைப்பானாக.

நாயக வாக்கியம்

(1) மானிடன் எவ்வாறு உண்மை பற்றுடன் தனது நாயன்முன் அடிமைத் தனத்தைக் காட்டிக் கொள்கிறானோ அவ்வாறே அடியார்களுடனும் அன்பு பிரீதியுடன் முன்னேக்க வேண்டியதும், இவ்விஷயத்தில் தாழ்ந்தோன் உயர்ந்தோன் என்னும் பாகுபாடின்றி சமத்துவக் கொள்கையை அனுஷ்டிக்க வேண்டியதும் மானிடத் தன்மையின் பிரதான அம்சமாக இருக்கிறது.

இஸ்லாம் வெளியாவதற்குமுன் எங்கெங்கெல்லாம் பற்பலவாறான கெடுதிகளும் துர் எண்ணங்களும் பரவியிருந்ததோ ஆங்கெல்லாம் மனிதர்களின் சங்கை மரியாதைக்கு உலைவைக்கப்பட்டு பயங்கர நிலைமை தாண்டவமாடிக்கொண்டிருந்தது. மூர்க்க குணம்படைத்த முரடர்கள் சமத்துவம் சுயேச்சை என்னும் கொள்கையை அறவே இல்லாது ஒழித்துவிடகங்கணம்கட்ட முற்பட்டுவிட்டனர். உலகலம் தற்புகழ்ச்சி, தான்என்னும் கெர்வம், அகம்பாவம் என்னும் முஸீபத்தில் சிக்கிக்கொண்டுளது. ஊரின் அதிபதிகளும் வகுப்புத் தலைவர்களும் சங்கை மரியாதை செய்யப்படுவதற்கு பாத்தியஸ்தர்களென்றும், ஏழை வரிமையுடையோர் அத்தலைவர்களுக்குத் தொண்டுபுரியப்படுவதற்காகப் படைக்கப்பட்டிருப்பவர்களென்றும் கருதப்பட்டுவந்தது. ஏழைகளிடம் பணமில்லாததால் அன்னோர் சகலவிதமான சங்கை மரியாதைக்கும் பாத்தியஸ்தராக விருக்கவில்லை. தனவந்தவர்களிடம் அவர்கள் உட்காருவது விலக்கப்பட்டதாகவும் முகமலர்ச்சியோடு சிரித்துப் பேசுவது பாபமாகவும் சமத்துவக் கொள்கையைப் பிரசாரம் செய்வது அன்னோர் கொல்லப்படுவதற்கு காரணமாகவு மிருந்தது.

உலகம் இப்பரிதாபகரமான நிலைமையை அடைந்து அநீதி அதிக்கிரமம் தாண்டவமாடிக் கொண்டிருக்குங்காலை உலகரட்சகர் செய்யிதுல் முர்ஸலீன் (ஸல்.) அவர்கள் இப்பூ உலகின்கண் ஜனனமாகி, சமத்துவம் ஏழைகளை ஆதரித்தல் என்னும் தூய்மை பொருந்திய கொள்கையை உலகினுக்குக் கற்பித்து "ஆண்டவா! என்னை ஏழ்மை மிஸ்கீன்தனத்தில் உயிர்வாழும்படிசெய்வாயாக! இன்னும் அவ்வேழைத்தன்மையிலேயே என்வாழ்க்கையை முடிவுக்குக்கொண்டு வருவாயாக! இன்னும் மறுமை நாளையில் அவ்

வேழைகளின் கூட்டத்தில் என்னை எழுப்புவாயாக! எனக் கூறிக்கொண்டிருப்பார்கள்.

தூய்மை பொருந்திய இவ்வரும் வாக்கியங்களானது மூர்க்ககுணமுடைய முரடர்களின் முரட்டுத்தனத்தை அடக்கி ஒடுக்கி பொதுவாக உலகில் சமாதானம் ஏழைமக்களை உபசரிப்பது முதலிய சற்குணங்களின் உணர்ச்சி தானே ஏற்பட ஆரம்பித்தது.

(2) எந்த நிலைமையிலும் எவ்வாறான கஷ்ட நஷ்ட சங்கடங்கள் நேர்ந்தபோதிலும் மானிடன் உண்மையை வெளியாக்குவதை தனக்கு பெருமை கொடுக்கக்கூடியதாகவும் தனது சிரேஷ்டத் தனத்திற்குக் காரணமாகவும் கருத வேண்டும். இந்நிலைமையில் எம்மனிதன் இதரர்களுக்கு பயப்படுவதைவிட்டு அச்சந்தீர்ந்து உண்மையை வெளியாக்குவதற்கு முன்வருகின்றானோ அன்னோனை நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள், உண்மையான சன்மார்க்க வழியிற்செல்பவனென்று அழைத்திருக்கிறார்கள். "மனிதன் எந்த சக்திக்கும் பயப்படாது,உண்மையை மறைக்காது கூறுவது மாபெரும் தியாகமாகும்" என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியதாக ஹஸ்ரத் அபூஹுரைரு (ரலி.) அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

துர் அதிர்ஷ்டவசமாக நாம் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் இவ்வுலகின்கண் ஜனிக்காமல் போய்விட்டோமே. அவ்வாறு ஜனித்திருந்தால் பெருமானார் (ஸல்.) அவர்களுடனிருந்த சிரப்பைப் பெற்று அல்லாவின் விரோதிகளான பகைவர்களை எதிர்த்து மார்க்க யுத்தம் செய்திருப்போமே. என்று கூறிக்கொண்டிருப்பவர்கள் மேலே கூறப்பட்டுள்ள நாயகவாக்கியத்தைப் படித்துப்பார்த்து தங்களது உண்மையான உணர்ச்சியை வெளிப்படுத்தலாகாதா? தற்கால மானிடன் வீரியத்தனத்தைக் காண்பிப்பதற்குள்ள ஆயுதம் வாள் அல்ல; நாவும் பேனாவுமாகும் என்பதை மானிடன் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அத்தியாவசியமாகும். ஆகவே உண்மையிலேயே சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்னும் உணர்ச்சி மானிடனது மனதிலேற்பட்டு விடுமாயின் அவன் ஒவ்வொரு விஷயத்திலும் உண்மையை வெளியாக்குவதைத் தனது பிரதானக் கடமை எனக்கருதி நடைமுறையில் அதனை அனுஷ்டித்துக் காட்டவேண்டியது மிக மிக அவசியமாகும்.

(3) மானிடன் முயற்சிக்கும் அநேக காரியங்களில் அவன் வெற்றி பெற்று போவதற்கு, அவன் கோரிச் செய்யும் காரியங்களை துயர்படியாய் விடாமுயற்சியுடன் செய்யாததே காரணமாகுமென்பது மகான்களான மேதாவிகளின் ஏகோபித்த அபிப்பிராயமாகும். எனவே, ஒரு காரியம் முற்றுபெறுவதற்கு, அக்காரியத்தைத் துயர்படியாகவும் பிரயாசையுடனும் செய்வதே பிரதானமாகும். ஆகவே, மானிடன் தன் காரியத்தை முற்றுபெறச் செய்ய நாடுவானாகில் அவன், நமது வள்ளல் ரஸூல் (ஸல்.) அவர்கள் அனுஷ்டித்து முற்றுபெற்ற அனுபவ அனுஷ்டானங்களைப் பின்பற்றுவது அத்தியாவசியமாகும். எனவே மானிடன் அதிகாலையிலெழுந்து தான் கோரிய காரியத்தின்மீது கண்ணும் கருத்தாகவு மிருப்பானாகில் அல்லாஹ்வின் கிருபையால் அவன் கோரியகாரியத்தில் வெற்றிபெறுவான். இதுதான் மானிடன் கோரிச்செல்லும் காரியம் முற்றுபெறுவதற்குள்ள மார்க்கமாகும்.

ரஸூலுல்லாஹ் (ஸல்.) அவர்களுக்கு எக்காரியம் திருப்தி அளிக்கக் கூடியதாக விருந்ததென உம்முல்முமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேழ்க்கப்பட்டபோது, நேமமாகச் செய்யக்கூடிய காரியம் மிகமிக திருப்தி அளிக்கக்கூடியதாக விருந்தது, என நாயகி அவர்கள் பதிலளித்ததாக மஸ்ரூக் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

பினங் சந்தா நேயர்கட்கு

அவ்விடத்திய பிரபல்ய வியாபாரியும் பொது நலப் பிரியரும் மார்க்க பக்தருமான ஆலீஜனாப் N. K. முகம்மது கௌஸ் சாஹப் (113-A சோலியா ஸ்டீட்) அவர்கள் நமது மாசிகையின் அபிவிர்த்தியை முன்னிட்டு நமது ஏஜண்டாக அன்புடன் ஏற்றுக்கொண் டிருப்பதால் ஆங்குள்ள சந்தாதார்களாகிய நண்பர்கள் அவர்களிடம் சந்தா செலுத்துமாறு கோருகிறோம்.



ஒற்றுமைக்கு வழி

இந்தியாவில் வாழும் பற்பல வகுப்பினரிடையே ஒற்றுமை ஐக்கியம் வேண்டும் என்பதை எல்லா சமூகத் தலைவர்களும் நன்குணர்ந்திருக்கின்றனர். இவ்வொற்றுமையின் ஆவசியகத்தைப் பற்றிப் பிரசங்கங்கள் புரியப்படுகின்றன; வியாசங்களெழுதப்படுகின்றன; ஒற்றுமை மகாநாடுகள் கூட்டப்படுகின்றன. இதற்காக ஒரு கோஷ்டியினர் உண்மையுடனுழைத்தும் வருகின்றனர். ஆனால், அவர்களது இவ்வுழைப்பு எம்மட்டும் வெற்றிபெற்றிருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கப் புகின் அதனை பூஜ்யம் என்று சொல்வதைத் தவிர வேறு வழியின்று. இந்நிலைமை ஏற்பட்டிருப்பதைக் கண்டு உண்மை இந்தியனெவனும் வருந்தாமலிரான். ஆனால், இவ்வாறு முயற்சி வியர்த்தமாகிவிடுவதற்குக் காரணம் யாது என்பதை இப்பெரியார்கள் உணர்ந்திருக்கிறார்களாவென்றால், அவர்களிற் பலர் இதனை உணரவில்லை என்றே கூறவேண்டும். இந்தியரிடை ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் பிற சமயத்தாரின் மத உணர்ச்சியைப் புண்படுத்தும் தொழிலை நம்மவர் அடியுடன் நிறுத்திய ஞான்றே இந்தியரிடையே ஒற்றுமை ஏற்பட்டுவிட்டதாகக் கூறிவிடலாம்.

முஸ்லிம்கள் பிற மதத்தாரின் உணர்ச்சியை வலுவில் புண்படுத்தியதாக ருஜூப்பிக்க முடியாது. ஏனெனில், பிற மதத்தாரின் மத உணர்ச்சியைப் புண்படுத்தலாகாதென்பது இஸ்லாமியச் சட்டமாகும். இச்சட்டத்திற்கேற்ப முஸ்லிம்கள் வலுவில் இம்முயற்சியைச் செய்ய மாட்டார்கள். ஆனால், பிறசமயத்தார் அவ்வாறு நடந்துகொள்வதில்லை. இஸ்லாம் மதத்தைத் தாக்குவது ஒன்றே அவர்கள் தங்கள் சமூகத்திற்குச் செய்யும் அரும்பெரும் தொண்டென மதித்திருக்கின்றார்கள் என்று எண்ணவேண்டியதிருக்கிறது. உதாரணமாக, கிறிஸ்துவ சமூகத்தாரை எடுத்துக்கொள்வோம்: அவர்கள் தங்களது மதத்தைப் பிரசாரம் செய்யப் பூரண உரிமை பெற்றிருக்கிறார்கள். அதனைத் தடை செய்ய எவரும் தயாராகவுமில்லை. முஸ்லிம்களும் அவர்களை வழி மறிப்பதில்லை. அப்படி இருந்தும் கிறிஸ்தவர்களால் தனிப்பட்ட முறையிலும், கிறிஸ்துவ சபைகளாலும் பிரசுரிக்கப்படும் பல நூல்களில் இஸ்லாத்தைப்பற்றி உண்மைக்கு மாறான விஷயங்கள் பல மல்கிக் கிடக்கின்றன. இதற்கு ஆதாரமாக இஸ்லாம், இஸ்லாமிய கிறிஸ்து, குரான் என்ற பெயருள்ள புத்தகங்களை நாம் கூற முடியும். இவைகளில் கூறப்பட்டுள்ள விஷயங்களைப் படிக்கும் முஸ்லிம்கள் இவைகளுக்குப் பதில் எழுத வேண்டுமென எண்ணமவிரான் என்று நாம் உறுதியாகக் கூற முடியும். ஏனெனில், அவைகளில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் இஸ்லாம் மதக் கொள்கைகளைத் திரித்துக்கூறுவனவாக இருக்கின்றன. மேலும் சில பாதிரிமார்கள் மனதைப் புண்படுத்தும் தோரணையிலும் எழுதிவிடுகின்றனர். இதனால் நாட்டில் அனாவசியமான உணர்ச்சி கிளப்பிவிடப்படுகிறது. இப்பாதிரிமார்கள் இஸ்

லாம் மதத்தைப்பற்றி இத்துணை முயற்சி
எடுத்துக்கொள்வதுபோல் வேறு மதங்
களைப்பற்றிக் குண தோஷங் கூறத்
துணிவதில்லை. இதற்குக் காரணம் இதர
மதங்களை அவர்கள் அலக்ஷியம் செய்த
தாக இருக்கலாம்; அல்லது அம்மதத்தவ
ரைப்பற்றிய பயமாக, அல்லது இஸ்லாம்
நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரனைப்
போல் பெருகி வருவதைப் பார்த்துப்
பொறாமை கொண்டதாக இருக்கலாம்.
எவ்வாறாயினும், இஸ்லாம் மதத்தைப்
பற்றி எவ்வளவு கவலை எடுத்துக்கொள்
கிறார்களோ அவ்வளவு கவலை இதர மதங்
களைப்பற்றி அவர்கள் எடுத்துக்கொள்வ
தில்லை. இனி ஹிந்து சகோதரர்களை
எடுத்துக்கொள்வோம். இவர்களும் இஸ்
லாம் மதத்தைப்பற்றித்தான் அதிக
மாகக் கவலை கொண்டிருப்பதாக அவர்
களது போக்கிலிருந்து தெரியவருகிறது.
இவர்களிலுள்ள ஆரிய சமாஜிகளும்,
அவர்களபிமானிகளும் செய்யும் பிரசங்
கங்களும், பிரசாரங்களும் இஸ்லாம் மதத்
தைத் தாக்கியேதான் என்றுகூடக் கூறி
விடலாம். இதர மதங்களைப்பற்றி அவர்
களும் அதிகமாகச் சிந்திப்பதில்லை.
இதற்குக் காரணம் யாதாயிருப்பினும்,
இந்தியாவினது பொது லக்ஷியத்திற்கு
இவைகளெல்லாம் தடைகளாக இருக்
கின்றன என்பதை எவரும் மறுக்க முடி
யாது. இவ்வாறு இஸ்லாத்தைப்பற்றிக்
குறைகூறியும், உண்மைக்கு மாறாகவும்,
புண்படுத்தத்தக்கவாறாகவும் எழுதுவ
தைப்பற்றிக் கண்டனம் செய்தாலும்,
கிளர்ச்சி செய்தாலும் தாங்கள் ஆங்கில
நூலிலிருந்தோ அல்லது வேறு நூலி
லிருந்தோ பார்த்துத்தான் எழுதினோம்
என்றும், மதத்தைப்பற்றி ஆராய்ச்சி
செய்வதைத் தடை செய்யலாமா என்
றும் நாஸுக்காக பதில் எழுதிவிடுகின்ற
னர். அல்லது பதிற் சொல்லி விடுகின்ற
னர். விவாதத்திற்காக இவ்வாறு பதி
லளித்துவிட்டால், இதன் மூலம் புண்
பட்ட உணர்ச்சி ஆறிவிடுமா என்பதை
இவர்கள் சிந்திப்பதே இல்லை. இதனால்
தான் கொதிப்படைந்த முஸ்லிம்களிற்
சிலர் பலாத்காரத்தைச் செய்து தூக்கு
மேடைக்குச் செல்லவும், தூக்கிலிடப்
பட்டபின் பொது ஜனங்கள் கூட்டம்
போடவும், அக்கூட்டத்தைக் கலைக்க அர
சாங்கம் தலையிட்டு துப்பாக்கிப் பிரயோ
கம் செய்யவும் வகுப்புக் கலகம் தோன்ற
வும் ஆரம்பமாகி விடுகின்றது. நமது
காருண்ய கவர்ன்மெண்டார் மத
உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடா
தெனச் சட்டமியற்றி இருக்கிறார்களாயி
னும், அச்சட்டப்படி நடவடிக்கை எடுத்
துக்கொள்வது மிகவும் சுருக்கமாகவே
இருக்கிறது. ஆதலின், இங்கு அரசாங்
கத்தாரும், பிறசமயத்தாரும் கவனிக்கும்
பொருட்டு சீனாவில் நிகழ்ந்த ஒரு சம்ப
வத்தைக் கீழே தருகிறோம் :—

“சீன அறிஞரொருவர் ஆங்கில பாஷையி
லிருந்து மொழிபெயர்த்து ஒரு புத்தகத்தைத்
தமது சுதேச பாஷையில் பிரசுரித்தார். அப்
புத்தகத்தில் எம்பெருமான் நபிகள் நாயகம்
(ஸல்.) அவர்களைப்பற்றி உண்மைக்கு மாறான
தும், புண்படுத்தக்கூடியதுமான விஷயங்கள்
பல எழுதப்பட்டிருந்தன. இதன்பேரில் சீன
முஸ்லிம்கள் வருத்தமடைந்து ஆங்காங்கு கண்
டனக் கூட்டங்களைக் கூட்டியதுடன் சீன அர
சாங்கம் முஸ்லிம்களை அலக்ஷியம் செய்கிறது
என்பதாகவும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.
இதன்பயனாக, சீன அரசாங்கத்தின் பிரசுர
இலாக்கா தமக்கு இவ்விஷயம் தெரியாதென்
றும், முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்டும்,
பத்திரிகைகளில் வெளியிட்டதுமல்லாமல், அப்
புத்தகத்தை விற்பனை செய்வதையும் தடை
செய்துவிட்டது. தவிரவும், மேற்படி புத்தகங்க
ளனைத்தையும் பறிமுதல் செய்து முஸ்லிம்க
ளிடம் ஒப்புவித்ததுடன், அதிலுள்ள தவறு
களைத் திருத்தித் தரவேண்டும் என்றும் முஸ்
லிம்களைக் கேட்டுக்கொண்டது. மேலும், சீனாவி
லுள்ள கமர்ஷியல் பிரஸில் இதுவரை வெளி
யான புத்தகங்களின் பிரதிகளை முஸ்லிம்க
ளிடம் ஒப்புவித்து அவைகளில் தவறுதல்க
ளிருக்கின்றனவா என்று பரிசீலனை செய்யும்
படியும் வேண்டிக்கொண்டதுடன், இதர பிரஸ்
களில் இனிமேல் இவ்விதமான கிரந்தங்களைச்

சிடப்படுமாயின், அவைகளைப் பிரசுரிப்ப தற்குமுன் சீனுவிலுள்ள மஜ்லிஸுல் உலமாவுக்கு அதனை அனுப்பி அங்கீகாரம் பெற வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்திருக்கிறது.''

சீன அரசாங்கம் இவ்விதமான தக்க ஏற்பாட்டை முற்கூட்டியே செய்துவிட்டதால் புண்பட்ட முஸ்லிம்களது ஹிருதயம் ஆறுதலடைந்ததுடன் முஸ்லிம்களது ஆதரவையும் ஒத்துழைப்பையுங்கூடப் பெற்றுக்கொண்டது. அங்கு வகுப்புச் சண்டையோ கலகமோ மதத்தைப் பொறுத்து நிகழுவதில்லை. பாலும் சர்க்கரையும் போல் ஐக்கியமாக இருந்து வாழ்கின்றனர். இவ்விதமாக இந்தியாவில் நடைபெறுமாயின் அரசாங்கமோ, புறமதத்தாரோ இத்துணை பெருந்தன்மையுடன் நடந்துகொள்வதில்லை. இதுவன்றி சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படிச் செய்ய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டாலும், காலாகாலத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. காலதாமதம் செய்து, அழுத பிள்ளைக்குக் கண்ணீர் துடைக்கும் முறையிலேயே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. பிறசமயத்தார் முஸ்லிம்களது கிளர்ச்சியைப் பார்த்த பின்னர், பொது ஜனங்களிடம் மன வெறுப்பு உண்டாய பின்னர்தான் மன்னிப்புக் கேட்பார்களேயன்றி, தவறுதலாகப் பிரசுரமான அந்நூலை விற்பனை செய்வதை நிறுத்தி, தவறைத் திருத்திக் கொள்ளவோ, விற்பனை செய்த புத்தகங்களைத் திரும்பவும் வாங்கித் திருத்திய புத்தகத்தைக் கொடுக்கவோ முன் வருவதில்லை. இதனைக் குறித்துக் கேட்டால் ஏதேனும் ஸால்ஜாப்பு சொல்லப்படுமேயன்றி திரிகரண சுத்தியாக நடந்து கொள்ள முன் வருவதில்லை. எனவே, இந்தியரிடை ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் இந்தியர் சகோதரர்களாக வாழ வேண்டுமாயின் முதல் முதலாகச் செய்யும் வேலை மத உணர்ச்சியைப் புண்படுத்தாதிருப்பதேயாகும். ஒற்றுமை வேண்டுமாயின் ஒவ்வொருவரும் தங்கள் செல்வாக்கை உபயோகித்து இவ்வாறான கிரந்தங்களில் வரையப்பெற்றுள்ள உண்மைக்கு மாறானதும், மனத்தைப் புண்படுத்தக்கூடியதுமான சமாச்சாரங்களை அகற்றவும், பாடப் புத்தகக் கமிட்டியாரும் இவ்விஷயங்களில் அதிகம் சிரத்தை காண்பித்து இவ்வாறான கிரந்தங்களைப் பாட புத்தகமாக அங்கீகரிக்காமலுமிருப்பார்களாக.

ஐரோப்பியர் இஸ்லாத்தைத் தழுவுவதேன்?

பிரபல அறிஞரும் நூலாசிரியருமான மிஸ்டர் ஜார்ஜ் பர்னுடுஷா என்னும் ஆங்கிலேயர் சில வருஷங்களுக்கு முன் ஒரு நூல் எழுதிப் பிரசுரித்திருந்தார். அதில் அவர் உலகிலுள்ள பல மதங்களைப்பற்றி ஆராய்ந்து கணிப்புரை எழுதியதுடன், தற்போது உலகம் மதத்தைக் கைவிட்டு வருவதாகவும், மதத்தில் மனிதன் அடைய முயலும் சாந்தி இதர மதங்களிலில்லை யென்றும், தற்காலத்தைய மக்களுக்குப் போதுமான சாந்தியளிக்கக்கூடிய போதனைகள் இஸ்லாம் மதத்தில்தானிருப்பதாகவும், வரப்போகும் நாகரீக உலகில் ஒரு மதம் இருக்கும்பக்ஷத்தில் அது இஸ்லாம் மதமாக அல்லது இஸ்லாத்தைப் போன்ற மதமாகவே இருக்கும் என்பது தமதபிப்பிராயம் என்றும் கூறி இருந்தார்.

மிஸ்டர் பர்னுடுஷாவின் இவ்வபிப்பிராயம் ஐரோப்பா முழுவதிலும் ஒரு திடுக்கத்தையுண்டாக்கிவிட்டது. அவரது இம்முன்னறிவிப்பிற்கேற்ப ஐரோப்பியரின் பெரும்பால

ருடைய கவனம் இப்பொழுது இஸ்லாத்தின் தின்பால் சென்றுகொண்டிருக்கிறது. ஆகவே, இஸ்லாம் மதத்தைத் தழுவிய ஐரோப்பிய அறிஞர்களிற் சிலரது அபிப்பிராயங்களை நாம் கீழே தருகிறோம். எனவே, நவநாகரீகத்தில் மோகங் கொண்டு இஸ்லாம் மதத்தை அற்பமாக மதிக்கத் துணிந்திருக்கும் இளவல்களுக்கு இவ்வபிப்பிராயங்கள் நேரான புத்தியை யளிக்குமென நம்புகிறோம். (ப-ர்.)

புரோபஸர் கிர்மானூஸ்

இவர் ஹங்கேரி தேசத்திலுள்ள பிரபல ஆசிரியர். கீழ்நாட்டுக் கலைகளை யுணர்ந்த மேதாவி. இந்தியாவில் டாக்டர் தாகூர் அவர்களது சாந்திநிகேதனத்திலும் ஆசிரியராக இருந்தவர். டில்லியில் இஸ்லாம் மதத்தைத் தழுவினார். இஸ்லாத்தைப்பற்றி அவர் கூறிய அபிப்பிராயம் வருமாறு :—

எனது இருதயத்திற்கு சாந்தி யளிக்கக்கூடிய மதம் யாது என்பதைப்பற்றி நான் பல்லாண்டுகளாக ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தேன். பூரணமாக இருபது வருஷங்கள்வரை பல மதங்களையும் ஆராய்ந்ததிலிருந்து இஸ்லாம் தான் மனச் சாந்தி யளிக்கவல்ல மதம் என்ற அபிப்பிராயத்திற்கு வந்தேன். வணக்கம்புரிய வேண்டும் என்ற உணர்ச்சியை இறைவனது அடியார்களில் உண்டாக்குவதும், சிருஷ்டிப் பொருள்களுக்குள் சமத்துவம், அன்பு ஆகியவைகளை யுண்டுபண்ணி ஒழுக்கத்தைத் திருத்துவதும், மதத்தின் முக்கிய லக்ஷியங்களில் ஒன்ருக இருக்கவேண்டும். இவ்வம்சங்களனைத்தும் இஸ்லாத்தினுள் பூரணமாக நிறம்பி இருக்கின்றன. இஸ்லாத்தினுள் வணக்கம், சமத்துவம், பொதுஜன ஊழியம் ஆகியவைகளிருப்பதுடன் சோஷியல் திட்டமும் இருக்கிறது. மனிதன் மதத்துடன் உலகத்தையும் அடையத்தக்க விதமாக இருக்கிற மதம் இஸ்லாம் மதம் ஒன்றேயாகும். இஸ்லாத்தில் சந்நியாசமில்லை, துறவு இல்லை. இஸ்லாம் பரிபூரணமான வாழ்க்கையைப் போதிக்கும் திட்டமாக இருக்கிறது. இதன் போதனையைக் கடைப்பிடித்தொழுகும் மனிதன் மிகவும் உன்னதமான முன்னேற்றத்தை அடைந்துவிட முடியும். இஸ்லாம் மதம் மனித சமூகத்திற்கு மிகவும் சிறந்த பெரும் பாக்கியமாகும் என்பதும், இஸ்லாத்தின் போதனைகளை உணர்ந்து கடைப்பிடியாதவர்கள் மனிதத்தன்மையையே அடையாதவராக இருக்கிறார்கள் என்பதும் எனதபிப்பிராயமாகும்.

மாடம் ஷரோதி

யானொரு கிறிஸ்து ஸ்திரீ, சரியான மங்கைப் பருவத்தில் விவாக விலக்குச் செய்யப்பட்டவள். கிறிஸ்து மதச் சட்டப்படி நான் வேறு விவாகம் செய்துகொள்ள முடியாதவளாக இருந்தேன். கிறிஸ்துவ மதம் ஸ்திரீகளுக்கு நீதி வழங்கவில்லை என்பது விவாக விலக்குக்குப் பின்னர்தான் தெரியவந்தது. பிறகு, நான் இஸ்லாமிய கிரந்தங்களைப் படித்தபோது, இஸ்லாம் ஆடவர்களுக்கு அளித்திருப்பதுபோல் பூரணமான சுயேச்சையை ஸ்திரீகளுக்கும் அளித்திருக்கிறது என்பது தெரியவந்தது. ஆகவே, யான் இஸ்லாமிய கிரந்தங்களை அக்கரையுடன் படிக்கத் தொடங்கி இறுதியாக இஸ்லாத்தைத் தழுவி விட்டேன். இஸ்லாம்தான் உண்மை மதம் என்பதும், மனித வர்க்கத்தைச் சீர் திருத்த வல்லது என்பதும் எனது நம்பிக்கையாகும். இஸ்லாத்தை உண்மையாகப் பின்பற்றுபவருக்கு ஆத்மசாந்தியுடன், உலக இன்பங்களும் கிடைக்கின்றன. ஸ்திரீகளைத் தாழ்ந்த அந்தஸ்திலிருந்து உயர்த்திய முதல் மதம் இஸ்லாம்தான் என்று நான் உறுதியாகக் கூறமுடியும். இஸ்லாத்திற்குமுன் ஸ்திரீகள் மிருகங்களைப்போல் பாவிக்கப்பட்டனர். இஸ்லாம் ஸ்திரீகளுக்கு ஆடவர்களை மரியாதை செலுத்தும்படிச் செய்துவிட்டது. இந்தக் காலத்திலும்கூட இதர மதங்கள் ஸ்திரீகளை நேர்மையாக நடத்தவில்லை. புருஷன் சொத்தில் மனைவிக்குப் பாகமில்லை. பெற்றோர் சொத்தில் புத்திரிக்குப் பங்கில்லை. ஆனால் இஸ்லாம் ஸ்திரீயின் உரிமையை ஒப்புக்கொண்டிருக்கிறது. கணவன், தந்தை, ஆகியவர்கள் சொத்தில் ஸ்திரீக்கு வாரிசுரிமையை ஏற்படுத்தி இருக்கிறது. இது இஸ்லாம் மதத்தில் தவிர வேறெந்த மதத்திலுமில்லை. இஸ்லாம் ஸ்திரீ புருஷர் இருவருக்குமே க்ஷேமத்தைக் கொடுக்கும் மதமாக இருக்கிறது.

மிஸ்டர் நார்மன் மேக்போர்ட்

இவர் அயர்லாந்து தேசத்திலுள்ள பிரபல இஞ்ஜினீர். சமீபகாலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர். இவர் கூறும் அபிப்பிராயம் வருமாறு :—

உலகில் விக்கிரக ஆராதனை பெருகியது போல அரசாதிபத்தியத்தை வணங்குவதும்

பரவி இருந்தது. இஸ்லாம் விக்கிரக ஆராதனையைத் தடுத்தது போலவே, ரத்தமும் சதையும் கூடிய பிண்டத்தை அதாவது அரசர்களை வணங்குவதையும் தடுத்து விட்டது. இஸ்லாம் குடியரசுக் கொள்கையையும் சுதந்திரத்தையும் பலமாக வற்புறுத்துகிறது. இஸ்லாம் தான் முதல் முதலாக உலகுக்குக் குடியரசுக் கொள்கையைப் போதித்தது. உலகம் முழுவதிலும் அரசாதிபத்திய வணக்கம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் அறபி தேசத்தில் ஒரு வழிகாட்டி பிறந்தார். அரசாங்கம், குறிப்பிட்ட ஒரு சமூகத்தாருக்கும் வம்சத்தினருக்கும் மட்டிலும் சொந்தமில்லை என்ற உண்மையை அவர் உலகினுக்குப் போதித்தார். பிரஜைகள் விரும்புபவர்தான் அரசாங்கம் செலுத்தத் தக்கவர் என்பதை உணர்த்தினர் ஆகவே, இஸ்லாத்தில் கிலாபத் ஆட்சி ஏற்பட்டது. இது வெகுகாலத்திற்கு நிற்க முடியவில்லை யென்றாலும் மனிதருள்ளத்தில் சுதந்திரத்தின் உண்மை யுணர்ச்சி ஊன்றி விட்டது. சமத்துவத்தைப் பற்றிய இஸ்லாமிய போதனை என்னை இஸ்லாத்தைத் தழுவும்படி நிர்ப்பந்தித்து விட்டது. இப்பொழுது நான் உலகில் மிகச் சிறந்த மதத்தைப் பின்பற்றுபவனாக இருக்கிறேன் என்பதைப்பற்றி பெருமை கொள்வதுடன், அதன் சட்டப்படி நடக்க இறைவன் எனக்கருள் புரியவேண்டும் என்பதாகவும் பிரார்த்திக்கிறேன்.

அமேரிக்க கோடீஸ்வரர் மானீர் பவுல்

அமெரிக்காவிலுள்ள மிகப்பெரிய தனவந்தரும் கோடீஸ்வரருமான மானீர் பவுல் என்பவர் மத ஆராய்ச்சியில் அதிகம் பிரியமுள்ளவர். சிலகாலத்திற்குமுன் அமெரிக்காவில் சர்வ மதக் கான்பரன்ஸ் ஒன்று நடைபெற்றது. அதில் மிஸ்டர் பவுல் பிரசங்கம் செய்தபோது இஸ்லாத்தைப் பற்றிக் கூறிய அபிப்பிராயம் வருமாறு:—

நான் கிறிஸ்துவ மதத்துடன் சம்பந்தமுள்ளவனாகவும், அம்மதத்தை மிகவும் போற்றுபவனாகவும் இருந்த போதினும் இச்சந்தர்ப்பத்தில் இஸ்லாத்தின் சிறப்புகளைப் பற்றியும் கூற விரும்புகிறேன். தற்காலத்திற்கேற்ற மதம் என ஒன்றிருக்குமாயின் அது இஸ்லாமாகத் தானிருக்க முடியும் என்பது எனதபிப்பிராயம். நான் வெகுகாலமாக இஸ்லாமிய நூல்களைப் படித்து வருகிறேனாதலால் லௌகிகத்தையும் வைதீகத்தையும் ஒன்று சேர்த்த மதம் இஸ்லாம்தான் என்ற முடிவுக்கு வந்துளேன். இறை வணக்கம் செய்யும்படி இஸ்லாம் போதிப்பதுடன் உலக முன்னேற்றத்திற்கான பாட்டைகளையும் அது காண்பிக்கிறது. நம்முடைய கிறிஸ்துவ மதம் நம்மை மூலையில் உட்கார்ந்து கொள்ளும்படியும் உலகத்தை மறந்துவிடும்படியும் போதிக்கிறது. ஆனால், இஸ்லாம் மதம் உலகில் வாழுங்கள்; இறைவனையும் மறக்காதீர்கள் என்று கூறுகிறது. நான் எனது மதத்தைப் பின்பற்றி நடந்திருப்பேனாயின் ஒரு மடத்தில் இருக்கும் சந்நியாசிக்கு மேல் அதிகம் முன்னேற்றமடைந்திருக்க மாட்டேன். ஆனால், இஸ்லாத்தின் போதனைகளை நான் பின்பற்றி உலகில் இருந்துகொண்டே மதத்தையும் விடாமலிருக்கிறேன். இஸ்லாத்தின் போதனைகள் எனக்கு விசேஷ உறுதியையும், முன்னேற்ற உணர்ச்சியையும் உண்டாக்கின. இதன் பலனாகவே நான் இன்று அமெரிக்காவின் மிகப் பெரிய பணக்காரனாக இருந்து வருகிறேன். எனது நண்பர்கள் உண்மையாகவே மதபக்தியுள்ள மனிதர்களாக விரும்புவார்களாயின் அவர்கள் இதர மதங்களையும் ஆராய்ச்சி செய்யவேண்டும் என்றும், இதர மதங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது இஸ்லாம் மதத்தைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியம் என்றும் சிபாரிசு செய்கிறேன். ஏனெனில், இஸ்லாம்தான் மனிதனுக்கு வைதீகத்திற்கும் லௌகீகத்திற்கும் வழி காட்டத்தக்க மதமாக இருக்கிறது.

ராபர்ட் ஸைமூர்

இங்கிலாந்திலுள்ள பிரபல நூலாசிரியரான ராபர்ட் ஸைமூர் என்பவர் இஸ்லாத்தைப்பற்றி எழுதி இருப்பது வருமாறு:—

நான் முஹம்மதுர் ரஸூலுல்லாஹி (ஸல்.) அவர்களது வரலாற்றைப் படித்துப் பிரமித்தேன். காட்டு மிராண்டிகளின் தேசத்தில் ஒருவர் பிறந்து, அத்தேசத்தின்நிலைமையைத் தலைகீழாகப்புறட்டிவிட்டார்என்பது எங்ஙனம்என்று என் புத்தியில் எட்டவே இல்லை. அவர் இறைவனிடமிருந்து அளவில்லா மூளைச் சக்தியும் உறுதியும் பெற்று வந்தவர் என்பதிற் சந்தேகமில்லை. பல நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக் கூடாத அருங்காரியங்களை அவர் சில வருஷங்களில் செய்து முடித்துவிட்டார். அவர் தமது

தேசத்தினருக்கு மட்டும் மனிதத்துவத்தைப் போதிக்கவில்லை. ஐரோப்பாவும்கூட அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவர் அழியாத தத்துவத்தை உலகினுக்குச் சமர்ப்பித்தார். அவைகளின் மூலமாக இப்பொழுது உலகம் நன்மை யடைந்துகொண்டிருக்கிறது. ஐரோப்பாவிற்கு அவரது தத்துவத்தை முஸ்லிம் ஜெய சீலர்கள் கொண்டுவந்தனர். அந்த தத்துவத்துடன் ஐரோப்பிய நிலைமையையும் அடியுடன் மாற்றிற்று. அவரது தத்துவம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பரவி நிற்கிறது. மனித வர்க்கத்திற்குத் தேவையான சகல வஸ்துக்களையும் அது கற்பிக்கிறது. தங்களுக்குள் வெட்டுப்பழி செய்துகொண்டிருந்த அறபியர்கள் அவரது தத்துவத்தின்பயனால் ஒரு நூற்றாண்டு செல்வதற்குள் உலகம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டனர். மனித ஒழுக்கத்திற்கு எப்பொழுதும் ஏற்பட்டிராத அவ்வளவு உன்னத நிலைமையை அவர் உண்டுபண்ணினார். ஒரு மனிதன் முன்னேற்றமடைய விரும்பினாலும், அல்லது ஒரு சமூகத்திற்கு வழிகாட்ட விரும்பினாலும் அவர் ஹஜ்றத் முஹம்மது (ஸல்) அவர்களது தத்துவத்தை நன்கு படித்துணர வேண்டும். நான் அவரது தத்துவத்தினால் அதிகம் பிரயோஜனமடைந்தேன். இஸ்லாத்தைத் தழுவாமலிருந்துகொண்டே அதன் தத்துவத்தினால் பிரயோஜனமடைபவர்கள் உலகில் இன்னும் எத்தனை பேரிருக்கின்றனரோ?

டாக்டர் எப். என். பர்க்

இவர் ஜெர்மனியிலுள்ள பிரபல விஞ்ஞான சாஸ்திரி. இவர் இஸ்லாத்தைப்பற்றி எழுதி இருப்பது வருமாறு :—

நான் இருபது வருஷ காலமாக இடைவிடாமல் ஆராய்ச்சி செய்ததன்பலனாக உலகுக்குப் பிரயோஜனமுள்ள மதம் இஸ்லாம்தான் என்ற முடிவுக்கு வந்துளேன். இஸ்லாம்தான் முதல் மதமாகவும் இறுதி மதமாகவுமிருக்கிறது. இது முதலாளித்துவத்தை ஒழித்தது. ஏழைகளை ஆதரிக்கிறது. ஏழையையும் பணக்காரனையும் சரிசமமாக்கி வைத்தது. இஸ்லாம் பொதுவுடமைக் கொள்கையில் நடுத்தரமான கொள்கையாகும் என்பது என் அபிப்பிராயம். பொதுவுடமைக் கொள்கை அளவிற்கு மேற்பட்டது. இஸ்லாமியக் கொள்கை பொறுத்தமானது. இஸ்லாமியப் போதனையைப் படிப்பவர் கடவுள் ஒருவரைத் தவிர வேறு எந்தப் பெரிய சக்தியையும் கண்டஞ்சமாட்டார். இது இஸ்லாத்தின் சக்தியில் பிரதானமானது. தற்போதைய உலகினுக்கு மிகவும் அவசியமாக வேண்டற்பாலது இஸ்லாத்தின் தத்துவம்தான். உலகம் முழுவதும் இஸ்லாத்தின் தத்துவத்தைப் பின்பற்றுமாயின் உலகம் தற்போதைய வீழ்ச்சியிலிருந்து மிகச் சுலபமாக மீட்சி பெறமுடியும்.

மேனாட்டு நாகரீகத்தில் கீழ்நாட்டிற்குள்ள செல்வாக்கு

ஐரோப்பாவின் தற்போதைய நாகரீக முன்னேற்றத்தை மேலெழுந்த வாரியாகப் பார்க்கிற எவரும் இதற்குமுன் நாகரீக மடைந்திருந்த ஸாமி வர்க்கத்தாரை அதாவது அறபி, எகிப்து, யூதவர்க்கத்தாரைப் பார்க்கினும் உயர்ந்தவர் என்பதாகக் கருதுவர். இது ஓரளவு சரியேயாயினும், ஆராய்ச்சியாளருக்கு மேனாட்டினரின் இந்நாகரீக முன்னேற்றத்தினுள் ஸாமி வர்க்கத்தாரது நாகரீகத்தின் நிழலிருப்பது தெரியவரும். ஆகவே, மேனாட்டினரின் நாகரீகத்தினுள் கீழ்நாட்டின் நாகரீகம் எந்த அளவிற்கு சம்மந்தப்பட்டிருக்கிறது என்ற விபரம் இவ்வியாசத்திலிருந்து வெளியாகும்.

முற்காலத்தில் கீழ்நாடும் மேனாடும் கலந்ததற்குரிய காரணங்கள்

கீழ்நாடும் மேனாடும் ஒன்றுடன் ஒன்று கலந்து கொள்வது ஆச்சரியகரமான விஷயமன்று. இவ்விரு நாடுகளும் ஒன்றுக்கொன்று நேர் எதிரிலிருக்கின்றன. இடையில் மத்திய தரைக் கடல் மட்டிலுமே திரையாக இருக்கிறது. இக்கடல் இல்லையென்றால் இவ்விரு நாடுகளும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தே இருக்கும். இவ்விரு நாட்டு ஜனங்களும் நடுவிலுள்ள சமுத்திரத்தைத் தாண்டி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு வந்துகொண்டிருந்தனர். ஐரோப்பா அந்தகாரத்தில் மூழ்கி இருந்த காலத்திலேயே கீழ்நாட்டினர் கப்பலோட்டும் தொழிலில் பிரக்கியாதி பெற்றிருந்தனர். ஆதலின், அவர்களது போக்குவரத்து அக்காலமிருந்தே மேனாட்டுடனிருந்தது. இது எப்பொழுது ஏற்பட்டதென்பதை மட்டிலும் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. ஏனெனில், சரித்திரம் இயற்றப்படுவதற்கு முன்னிருந்தே இப் போக்குவரத்து இருந்துவருவதாகத் தெரிகிறது. மேலும், ஐரோப்பா கண்டத்தை

ஆப்பிரிக்காவாசி ஒருவர் தான் முதல் முதலாக குடியேறி வளப்படுத்தினர் என்று அநேகம் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதனைப்பற்றிய விரிவான தகவல் எதுவும் தெரியவில்லை. . சரித்திரமியற்றப்பட்ட காலத்திற்குப்பின் கீழ்நாட்டிற்கும் மேனாட்டிற்கும் மிடையில் கலப்பு ஏற்படுவதற்கு அடியிற் கண்ட பல காரணங்கள் இருக்கலாம் என்று தெரிய வருகிறது.

1. பென்ஷியன் வர்க்கத்தார் பூர்வகாலத்தில் வியாபாரத்திற்காகவும் குடியேற்றத்திற்காகவும் ஐரோப்பாவிலுள்ள அநேகம் கடற்கரைப் பிரதேசத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்பிரதேசங்களைக் கைப்பற்றி இருந்து விட்டுத் திரும்ப வரும்போது தங்களது அநேகம் தொழில்களையும், ஆசாரங்களையும் அங்கு விட்டு வந்தார்களென்றும் தெரிய வருகிறது.

2. கிரீஸ் தேசத்தைச் சேர்ந்த சில தீவுகளிலுள்ள ஜனங்கள் நாடு பிடிக்கும் எண்ணத்துடனும் வியாபாரம் செய்யும் நோக்கத்துடனும் எகிப்து, ஷாம் முதலிய தேசங்களுக்கு வந்திருக்கிறார்கள்.

3. கிரீஸ் தேசத்திலுள்ள கல்விப் பிரியர்கள் கல்வி கற்கும் நோக்கத்தால் எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிறார்கள்.

4. யூதர்கள் வியாபார நிமித்தமாகவும் மதப்பிரசார நிமித்தமாகவும் ஐரோப்பாவினுக்குச் சென்று கொண்டிருந்தனர்.

5. அறபியர்கள் ஸ்பெயின், பிரான்சு, சிசிலி, இத்தாலி முதலிய தேசங்களைக் கைப்பற்றி வெகுகாலம் வரை ஆட்சி புரிந்திருக்கிறார்கள்.

6. சிலுவை யுத்தகாலத்தில் கீழ்நாடும் மேனாடும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்கிறது.

7. உந்துலுஸ் அரசாங்கம் வீழ்ச்சியடைந்த பின்னர் ஏராளமான அறபியரும் யூதரும் ஐரோப்பாவினுட் சென்று குடியேறி இருக்கின்றனர்.

இத்தியாதி காரணங்களால் கீழ்நாடும் மேனாடும் கலந்துகொண்டே இருந்தன. இதன் பலனைத்தான் ஐரோப்பாவில் தற்போதைய நாகரீகம் உருக்கொண்டு வெளியாயிற்று. ஆகவே, இவ்வியாசத்தில், மதம், சேர்ந்து வாழ்தல், ஒழுக்கம், கல்வி, தொழில், வியாபாரம், இலக்கியம் ஆகியவைகளைப்பற்றி சர்ச்சை செய்யப்படும்.

மேனாட்டினரது மதக்கோள்கையில் கீழ்நாட்டின் சம்பந்தம்

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவியுள்ள மதங்களில் யூத கிறிஸ்துவ மதங்களுக்கு மிகவும் முக்கியாம்சமிருந்து வருகிறது. அங்குள்ள பெரும்பான்மையினர் இவ்விரு மதங்களையும் அனுஷ்டிப்பவரேயாவர். மேலும், இவ்விரு மதங்களுக்கும் அசல் ஸாமி வர்க்கமேயாகும் என்பது தெரிந்த விஷயம். ஐரோப்பாவில் யூத மதம் யூதர்களாலேயே பரவச் செய்யப்பட்டது. இது கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரிருந்தே பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகு கிறிஸ்துவ சகாப்தம் தொடங்கிற்று. கொஞ்ச காலத்திற்குள் ஐரோப்பாவில் மிகத் துரிதமாகப் பரவி உறம் பெற்றுவிட்டது. இன்று அங்கு கிறிஸ்துவர்களது ஜனத்தொகை கோடிக்கணக்கிலிருந்து வருகிறது. தவிரவும், இவர்களனைவரும் கிறிஸ்து மதத்தைப் பலமாக ஆதரிப்பவர்களாகவும் உற்சாகமாகப் பிரசாரம் செய்பவர்களாகவு மிருந்து வருகின்றனர். இம்மதத்திற்காக அவர்கள் தங்கள் உடல் பொருளாவியை அற்பணம் செய்யத் தயாராக எந்நேரமுமிருந்து வருகின்றனர். மதத்தைப் பார்க்கினும் அதிகப் பிரியமாக வேறு எதையும் ஜனங்கள் மதிப்பதில்லை. மதம்தான் ஜனங்களது சகல காரியங்களிலும் அதிகச் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. எனவே, ஐரோப்பாவின் மதம் ஸாமி வர்க்கத்தாரது மதம் என்பதை மேலே கூறி இருக்கிறோமல்லவா? ஆகவே, ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு காரியத்திலும் அதற்கு எவ்வளவு சம்மந்தமிருக்குமென்பதை இதிலிருந்து நீங்கள் நிதானித்தறிந்து கொள்ளலாம்.

கூடி வாழ்தல்

ஜனங்கள் ஒருவருடன் ஒருவர் உறவாடியும், கூடியும் வாழ்வதற்கு முக்கிய சாதனம் மதம் தான் என்பது உங்களுக்குத் தெரியும். ஒன்று சேர்ந்து வாழ்வதற்கான அடிப்படை குடும்பம்-வம்சம் என்பதன்மீதே ஏற்படுத்தப்படுகிறது. குடும்பம்-வம்சம் என்பதற்கான திட்டம் முழுவதும் மதக்கோட்பாட்டின் பேரிலேயே இருக்கிறது. ஆகவே, ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்துவர்களின் சேர்ந்து வாழும் முறையானது, இஞ்ஜீல் அல்லது மாதாகோவிலின் திட்டப்படியே

இருக்கிறது. யூதர்களது கூட்டுறவு வாழ்க்கை தௌராத்—யூத கோவில்களது திட்டமே யாகும். இவ்விரண்டிற்கும் அசல் சாமி வர்க்க மாகும். ஆதலால்தான் விவாகம், விவாக நிச்சயார்த்தம் முதலிய சடங்குகளில் பெரும்பாலும் தௌராத், இஞ்ஜீல் ஆகியவைகளினுடையவும், பாதிரிகளினுடையவும், மதத் தலைவர்களினுடையவும் பழக்க வழக்க ஆசாரங்களை அனுஷ்டிக்கின்றனர். லண்டன், பெர்லின், பாரிஸ் ஆகிய நகரங்களில் நடைபெறும் விவாகச் சபைகளும், லப்னான் முதலிய கீழ் நாடுகளில்நிகழும் விவாகக் காரியங்களும் வெவ்வேறு விதமாக இல்லாமல் ஒன்றை யொன்றனுசரித்தனவாகவே இருப்பதை நீங்கள் காணலாம்.

ஐரோப்பாவிலுள்ள கூட்டுறவு வாழ்க்கை முறையில் தௌராத், இஞ்ஜீல் வேதங்களின் மூலமாக கலப்பற்ற ஸாமிவர்க்கத்தாரின் முறைகள் சம்மந்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஐரோப்பிய கிறிஸ்துவர்களது குடும்பத்தில் நடைபெறும் பழக்க வழக்கங்கள் எகிப்து, ஷாம் ஆகிய தேசங்களிலுள்ள கிறிஸ்துவ குடும்பகளிலும் வித்தியாசமில்லாமலிருப்பதைக் காணமுடியும். என்றாலும், ஐரோப்பியர் கிறிஸ்து மதத்தைத் தழுவுவதற்குமுன் அவர்களுக்கெனச் சொந்தமான சில ஆசாரங்களிருந்தன. ஆனால், அவர்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவியபின் அவைகள் கொஞ்சங் கொஞ்சமாக இல்லா தொழிந்து போயின.

கிறிஸ்துவ சகாப்தம் ஆரம்பமான காலத்தில் ஜெர்மனியர் உரோம அரசாங்கத்தின்மீது படை யெடுத்து வந்தனர். அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே ஸாமி வர்க்கத்தாரது ஆசாரங்கள் அங்குள்ள ஜனங்களிலும், குடும்பங்களிலும், கூட்டுறவு வாழ்க்கையிலும் கலந்துபோய் விட்டன. ஏனெனில், இங்குள்ள வியாபாரம், குடியேற்றம் ஆகியவைகள் மூலமாக பென்ஷியன் வகுப்பினர் மிக அதிகமாக போக்குவரத்துள்ளவர்களாக இருந்தனர். இந்தச் சமூகப் பிரிவின் மூலமாகஸாமி ஆசாரங்களும், பழக்கங்களும் இத்தாலி, கிரீஸ், ஸ்பெய்ன் முதலிய தேசங்களிளெல்லாம் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆகவே, இப்பொழுது அத்தேசங்களில் ஸாமி வர்க்கத்தாரின் ஆசாரங்கள் வேறு, பூர்வ ஜனங்களது ஆசாரங்கள் வேறு என்று பாகு பாடு செய்து காண்பிக்க முடியாதவாறு அவ்வளவு பலமாக அவைகள் கலந்து விட்டன.

இவ்விதமாகவே, அறபியர்கள் ஸ்பெய்ன் தேசத்தை அரசாட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் அறபியரின் தன்மைகள் பல பரங்கியர்களது ஆசாரங்களிலும், பழக்கங்களிலும் ஆழ்ந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. அவர்களது அந்தரங்க வாழ்க்கையிலும், வெளி வாழ்க்கையிலும் அறபியர்களது ஒவ்வொரு காரியமும் மிளிர்ந்து விளங்கின. அங்கு அறபி அரசாங்கம் நீங்கி இத்தனை வருஷங்களாகியும் இன்னுங்கூட அவர்களது ஒழுக்கங்களில் அறபியர்களது ஒழுக்கங்களும் கீழ்நாட்டினது ஆசாரங்களும் மிகைத்திடுகின்றன. ஸ்பெய்ன் தேசத்துப் பாஷையில் சாப்பிடுதல், குடித்தல், முதலிய இதர காரியங்களில் உபயோகிக்கப் படும் பதங்களில் அநேகம் அறபிப் பதங்களை ஒத்தனவாகவே இருக்கின்றன.

சதுரங்கம், சொக்கட்டான் முதலிய ஆட்டங்களெல்லாம் அறபியர் மூலமாக ஐரோப்பாவிற்குப் பரவின. பிரான்சு, இத்தாலி, ஸ்பெய்ன், ஜெர்மனி இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள கதைகள், நாவல்கள் நீல நதிப்பிரதேசத்தினுடையவும், அறபி தீபகல்பத்திலுமிருந்தே தான் அங்கு சென்றிருக்கின்றன. இக்கதைகள் பிரான்சு தேசத்தில் எவ்வளவு உற்சாகமாகச் சொல்லவும், கேட்கவும் படுகின்றனவோ, அவ்வளவு உற்சாகமாக அறபி நாட்டிலும் சொல்லவும் கேட்கவும் படுகின்றன.

ஒழுக்கம்

ஒழுக்கம் பெரும்பாலும் மதத்தைத் தழுவியே இருக்கும். இதனால் தான் ஒரு மதத்தை அனுசரிப்பவரது ஒழுக்கங்கள் பொதுவாக எங்கு பார்த்தாலும் ஒன்று போலவே இருக்கின்றன. ஏனெனில், மத போதனையானது இளம்பிராயத்திலேயே இருதயத்தில் ஊறிவிடுகிறபடியால் அவர்களது கிரியைகளிலும் அவைகள் குணபாடு செய்து கொண்டே இருக்கின்றன. ஆகவே, மதம் ஒன்றாக இருந்தால் ஒழுக்கமும் தன்மையும் ஒன்றாகவே இருக்குமென்பதில் ஆக்ஷேபணை இல்லை.

கிறிஸ்து மதமும் யூதமதமும் ஐரோப்பாவில் பரவுவதற்கு முன் ஐரோப்பாவில் கிரீஸ், ரோம், ஜெர்மனி ஆகிய நாடுகளிலுள்ள விக்கிரக ஆராதனை புரிவோர்களது ஒழுக்கங்களும் பழக்கங்களும்தான் அங்குள்ளவர்களிடம் பரவி இருந்தன. ஆனால், அவர்கள் கிறிஸ்துவ யூத மதங்களில் சேர்ந்த பின்னர் அவ்வாசாரங்கள்

அவர்களை விட்டு நீங்கிவிட்டன. தௌருத், இஞ்ஜீல் வேதங்களின் மூலமாக அவர்களது கூட்டுறவு முறை முற்றிலும் ஸாமி ஒழுக்கங்கள் என்ற உடலத்தில் மாற்றப்பட்டு விட்டன. இன்று முற்காலத்திலுள்ள கிரேக்க, ரோம ஒழுக்கங்களையும் இக்காலத்திலுள்ள கிறிஸ்துவர்களது ஒழுக்கங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வானத்திற்கும் பூமிக்குமுள்ள வித்தியாசத்தைக் காணலாம். இதற்குக் காரணம் மத மாற்றமேயாகும். எனவே, தற்போதுள்ள ஐரோப்பாவின் ஒழுக்கங்கள், பழக்கங்கள், வாழ்க்கைமுறை, முதலியவைகளில் கிறிஸ்துவ மதத்திற்கு மிகுந்த செல்வாக்குண்டு.

கல்வி அறிவு

ஐரோப்பாவில் ஸாமி வர்க்கத்தார் ஏராளமான கல்வி அறிவை விட்டு வந்திருக்கிறார்கள். அறபியரின் கல்வி, கலை ஆகியவைகளில் ஐரோப்பாவுக்கு அதிகம் நன்மை ஏற்பட்டிருக்கிறது. இவர்களுக்கு வெகு காலத்திற்கு முன்பே ஸாமி வர்க்கத்தைச் சேர்ந்த இதர ஜாதியாரும் கல்வி, கலை ஆகியவைகளை அங்கு அதிகம் விட்டு வைத்திருக்கிறார்கள். முக்கியமாக பென்ஷியன் வர்க்கத்தார் அங்கு விட்டு வைத்திருக்கும் கல்விகளும் கலைகளும் என்றும் அழியாதனவாக இருக்கின்றன. இன்று ஐரோப்பியர் எழுதிவரும் அக்ஷரங்கள் உண்மையில் பென்ஷியன் வகுப்பாரின் ஞாபகார்த்த சின்னமேயாகும். இந்த அக்ஷர வடிவத்தை முதல் முதலாக கிரேக்கரும், அப்பால் உரோமரும் கற்றனர். இவர்கள் இதர ஐரோப்பியர் அனைவரிடமும் இதனைப் பரப்பினர். தற்போது கிரேக்கர்களது அக்ஷரம் வெகுவாக மாறுதலடைந்திருக்கிறது. இவைகளை பென்ஷியன் அக்ஷரங்கள் என்று கூறுவதுகூட மிகக் கஷ்டமாக இருக்கிறது. இவ்விதமாக ஐரோப்பாவிலுள்ள இதர தேசங்களின் அக்ஷரங்களது நிலைமையுமிருந்து வருகிறது. ஆனால், கிரேக்க பாஷையில் இந்த அக்ஷரங்களுக்கிருந்து வரும் பெயர்கள் மாத்திரம் இன்னமும் மாறுதலடையாமல் பத்திரமாக இருக்கின்றன. இவைகள் மூலமாகத்தான் இதன் அசல் தெரியவருகிறது. கிரீஸ் தேசத்தில் பூர்வ காலத்திலிருந்து வந்த அக்ஷரங்கள் பென்ஷியன் அக்ஷரங்களை மிகவும் ஒத்தவனவாயிருக்கின்றன.

அக்ஷரங்களையல்லாமல் பூர்வ காலத்து கிரீஸ் தேசமும், அக்காலத்திலிருந்த இதர ஐரோப்பிய ஜாதியினரும் பென்ஷியன் வர்க்கத்தாரிடமிருந்து இன்னும் பல காரியங்களை அடைந்திருக்கிறார்கள். அவைகளனைத்தையும் இச்சிறு வியாசத்தில் வெவ்வேறாகப் பிரித்துக் கூறமுடியாது. இவைகள் எப்பொழுது அங்கு சேர்ந்தன என்ற காலத்தையும் குறிப்பாகக் கூற முடியவில்லை. ஆனால், ஐரோப்பா தனது அந்தகாரத்தின் உச்சஸ்தானத்திலிருந்த சமயம் அதாவது கி. மு. 15-வது நூற்றாண்டில் பென்ஷியன் வர்க்கத்தார் தங்களது முன்னேற்றத்தின் உச்சஸ்தானத்தை அடைந்திருந்தனர், கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலிய எல்லாக் காரியங்களிலும் இதர ஜாதியினரைப் பார்க்கினும் இவர்கள் சிறந்து விளங்கினர். இவர்கள் பெரும்பாலும் கிரீஸ், ரோம், முதலிய ஐரோப்பிய கடற்கரைப் பிரதேசங்களில் போக்குவரத்துள்ளவர்களாகவுமிருந்தனர். ஆகவே, இவர்களிடமிருந்து ஐரோப்பியர் என்னென்ன காரியங்களைப் பெற்றுக்கொண்டனர் என்று குறிப்பாகவும் விபரமாகவும் கூறமுடியாது. ஆனால், இவர்களிடமிருந்து மிகவதிகமாக ஐரோப்பியர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் நிச்சயம். இன்று ஐரோப்பியர்கள் செல்லுமிடங்களில் அவர்களது நாகரீகத்திற்கும் நகர வாழ்க்கைக்கும் மிகுந்த செல்வாக்கேற்படுகிறதல்லவா? இது போல அக்காலத்தில் பென்ஷியன் வர்க்கத்தாருக்கு மிருந்தது. ஆனால், இக்காலமோ அச்சிடும் தொழில் நடக்கும் காலமாக இருந்தும், நமது பூர்வீகமான காரியம் எது என்றும் ஐரோப்பியரிடமிருந்து நாம் கற்றுக் கொண்ட காரியம் எதுவென்றும் பிரித்தறிந்து கொள்ள முடியவில்லையல்லவா? இது போலவே பென்ஷியன் வர்க்கத்தாரிடமிருந்து ஐரோப்பியர் கற்றுக் கொண்டவைகள் இன்னின்னவையென்று விவரமாகப் பிரித்தறிந்து கொள்ள முடியவில்லை.

அஸுரியர்களது கல்வி

ஐரோப்பாவிற்கு பென்ஷியன் வர்க்கத்தார் செய்த பேருபகாரம் மற்றொன்றுளது. இதில் எகிப்தியரும் அஸுரியரும் பங்காளிகள். பென்ஷியன் வர்க்கத்தார் ஐரோப்பாவிற்குத் தங்கள் கல்வி கலைகளை மட்டிலும் உபகாரமாகக்கொடுக்கவில்லை. எகிப்தியரிடமும், அஸுரியரிடமுமிருந்து அவர்கள் கற்ற கல்வி அறிவு ஆகியவைகளையும்கூட அவர்களுக்கு அளித்தனர்.

பாபிலினுள்ளவர்கள் வான சாஸ்திரத்திலும், வைத்திய சாஸ்திரத்திலும் நிகரில்லாதவர்களாயிருந்தனர் என்பது எங்கும் ஒப்புக் கொள்ளப் பட்ட விஷயமாகும். இவ்விரு சாஸ்திரங்களிலும் அவர்கள் உலகம் முழுவதற்குமே குருக்களாகவும் உபாத்தியாயர்களாகவு மிருந்து வருவதாகக் கருதப் படுகிருர்கள். கிரேக்கர்கள் இவ்விரு சாஸ்திரங்களேயும் இவர்களிட மிருந்து நேரடியாகவோ அல்லது பென்ஷியன் வகுப்பினர் மூலமாகவோ கற்றுக் கொண்டிருக்கிருர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. இன்றுங்கூட வான சாஸ்திரத்தில் பென்ஷியன் வகுப்பினரிலுள்ள அல்லது பாபிலுள்ளவர்கள் கூறும் சில பெயர்கள் கிரேக்க பாஷையில் பரிபாஷையாக வழங்கப்பட்டு வருவது காணப் படுகிறது.

சுயமரியாதைக் குழுக்கள் சாதித்த தென்ன?

(சித்தயங்கோட்டை, மௌலவி S. N. ஹுஸைன் முஹம்மது ஸாஹிப் (பாக்கவி) வரைவது)

யாவராலும் அறியாப் பரம்பொருளாய்த் தானுக விருந்து பிறகு தன்னே யறிய வேண்டு மென்ற வுதிப்பெழுந்து நம்மையும் மற்ற ஸ்ருஷ்டிகளேயுந் தோற்றுவித்தான். தன்னே மானிடர், பூதவர்க்கத்தினர் வணங்கவே யவ்விரு குழாத்தினரையு முற்பவிக்கச் செய்தான். அவனே வணங்குவதற்காக வேண்டிய வசதிகளேயும், நம்மவர்க்களித்தான். தன் வழி நம்மவர் செல்வதற்கு நம்மிற் போதிய வகைப்புறக் கல்வியும், ஆன்மார்த்தமு மின்மையாலும் அவ்வழியை நமக்குக் காண்பிக்கத் தகுந்தவுதவி வேண்டியிருந்தமையாலும், அதற்காக எண்ணிறந்த நபிமார்களே இவ்வவனியின் கண்ணனுப்பினன். அவர்கள் நமக்குப் போதிப்பதில் எல்லேயற்ற இன்னல் துன்பங்கட்காளாகினர்.

தண்ணளியின் பயனுகத்தன்திரு மொழியாம் வேதங்களே நம்பாலன்ன பிமார்கள் பொருட்டால் இறக்கினுன். அவ்வேதங்கள் அவ்வக்காலத்திற்கேற்ற விதிகளேயும், ஆசாரங்களேயும், தெய்வ வழிபாடு, மானிடர் பாற் பூணுங் கிரியாம்சம் கலே தொழில் அரசாங்கம் போன்ற சகல துறைகளிலும் நம்மவர்க்கு நன்மை பயக்குமாறு போதித்துள்ளன்.

பதினுன்கு நூற்ருண்டுகளாக நிகழ்ந்து வருங் குர்ஆன் ஷரீபு மக்கட்குப் போதித்துக் காட்டியிருப்பது எட்டிலடங்காத மஹாச் சேவையாகும். மக்கள் அரேபியாவென்ன? அகிலவுலகமே யந்தகாரத்திலகப்பட்டு நன்னெறியறியாது துன்மார்க்கத்திலுழன்று சிசுஹத்தி, கொலே, கொள்ளே, விபசாரம் மதுபானம், களியாட்டம் போன்றனவே தங்கள் தொழிலாய் மதித்து வந்தனர். இக் குர்ஆன் ஷரீபு தோன்றவே கதிரவனேக் கண்ணுற்ற பனிபோலத் துன்மார்க்கங்கள் பறந்தொழிந்து விட்டன.

ராஜரீகம் நாகரீகம் தொழில் வியாபாரம் போன்ற துறைகளிலுமிவ்வகிலம் போதிய ஞானம் படைக்காம லிருந்து வந்ததும் உலகமறியுமுண்மையே. இம்மறை தோன்றி மேற்கூறிய தொழிற் சாதன வாசனுக மிளிர்ந்து வருகிறது. அடிமையை யொழிக்கப் பாடுபட்டது மிஃதொன்றே. பாற்பேதம், வர்ண பேதம், ஜாதிபேதம் தேசவேற்றுமை என்னும் பற்பல பேதங்களே யொழித்துக் காட்டியதும் இத்திரு குர்ஆன் ஒன்றே.

தன்னனுக்ரஹந்தன் ஸ்ருஷ்டிபாற் காட்டுவான் வேண்டியே தனக்கு வணக்கம் புரியும்படி யன்னுரை யேவி வணங்குவோர்க்குச் சுவர்க்கமும் வணங்கார்க்கு நாகமும் வாக்களித்தான்.

தன்னே நம்பித் தன்னுலாக்கப்பட்ட மலக்குகள், தன் வேதங்கள், தன் தூதர்களுடனிறுதித்தினத்தையு முறுதிகொள்ள வேண்டு மென்ருக்யாபித்துத் தவறினுல் மீளாநரகத்தாளாவது நிக்ஷயமென நிர்ணயித்தான்.

தன் பாதச் சரணடையும் அறிஞர்களுக்கு நடக்குங் காலாகவும், பிடிக்குங் கையாகவும், கேட்குங் காதாகவும், பார்க்குங் கண்ணுகவும், ஆவேனென, அறிக்கை வெளியிட்டு அவ்வாறே தன் பாதஞ்சாரும் ஞானிகட்கு அங்ஙனமே யாகித் தஞ்ச மளித்துத் தன் பிரதிநிதிகளாக் கிக் கொள்கிருன்.

ஹே! மானிடர்களே! உலகத்தில் அருவருக்கத் தக்க கிரிகைகள் அநாகரீகம் இவைகளை விட்டொழியுங்கள்; இயற்கையைக் கடைப்பிடியுங்க ளென்ற அறிக்கையை நம்மவர்க்கு வெளியிட்டான்.

அவன் அல்லாஹ், தேவையற்றவன். (யாதொரு மனைவியை மணந்து அவன்) பெறவுமில்லை. (யாதொரு தாய் தகப்பன் அவனைப் பெறவுமில்லை) என்ற சித்தாந்தத்தைத் தன்திருமறையான குர்ஆன் ஷரீபிற் போதித்தான்.

அவன் எப்போதனையைப் போதித்தானே அது நன்மையாகவும் எதை விலக்கினனே, அது தீமையாகவும் இருக்கும். அவனறிந்ததை நீங்களறியீர்கள். அவனுலேவப் பட்ட வெல்லையைக் கடவாதீர்களென்னும் உன்னத லக்ஷியத்தைப் போதித்தான். அவன் குடி, காமம், கொலை, சூது, களவு, போன்ற துற்கருமங்களை விட்டு மக்களை விலக்குகிறவன். இவைகளை இயற்றும் ஈனர்களுக்கு தண்டனை விதிப்பவன். இவ்வின கர்மங்களைச் செய்யாத பரிசுத்தவான்களுக்குத் தண்ணளியின் பயனுகச் சுவர்க்கபதி வாழ்வைத் தருபவன்.

யாவர்க்குங் கிருபா கடாக்ஷ மீய்ந்தாலும் பிரதிப்ரயோஜனம் விரும்பாமற் செய்பவன். பரோபகாரி. க்ருபாமூர்த்தி. உயிர்ப்பிப்பவன். உயிர் போக்குபவன். புற்பூண்டுகளை முளைப்பிப்பவன். மழை பெய்விக்கிறவன். காப்பவன். தெய்வாம்ஸங்கள் ஒருங்கே யமைந்தவன். அவனது போதனைகள் யாவன? அவைகளாவன:— அல்லாஹ் ஒருவன். அவன் பாற்றூது கொண்டு வருந்தூதர்கள், மெய்யர்கள், வேதங்கள் யாவுமுண்மை. இறுதித் தீர்ப்புத் தினம் மெய். இஃது உறுதி. நரகஞ் சுவனம் மெய். இடைவிடாது அவனைத் தொழ வேண்டும். அவனிடஞ் சத்தியமே பிரியம். அசத்தியமோ வெறுப்பு. மக்கள் யாவரும் ஒன்று. யாரும் விசேஷமில்லை. ஆனுல் தவப்பயனடைந்தவர் சர்வ ஜன ஸ்ரேஷ்டரே.

நோன்பு நோற்க வேண்டும். ஏழைகட்கீய வேண்டும். புனித மக்காவின்கண் சென்று தெய்வப் பள்ளியைத் தரிசிக்கவேண்டும். வியபிசாரங் கூடாது, கொலை கூடாது, குடிகூடாது, சூது கூடாது, திருட்டுக் கூடாது, யாரையும் அநீதம் புரிதலாகா தென்பதிலும், கல்வி பயில்வது அவஸ்யமென்பதிலும் ஆடவர்கட்கோர் சட்டமும் பெண்களுக்கோர் நீதியும், சூத்திருக்கோர் நியாயமும், பிராமணர்கட்கோர் ஆக்ஞையும் யளிதான தல்லை.

உதாஹரணமாய், தொழுகை நோன்பு போன்ற சடங்குகளை நோக்கின் கீழ்தேச வாசிளாய ஜப்பான், சீனு, திபேத்போன்ற தேச மக்கள் எக்கிருத்தியங்களை எவ்வழிகளில் அநுஷ்டிக்கின்றனரோ அகில உலக மக்கள் யாவரும் அதே வழிகளில் செல்லுவர் அறிமின்.

குறிப்பு:—தற்காலம் ஒரு சிலர் மதம், கடவுள், என்று வைத்திருப்பதாற்றுன் பலவிதமாக முன்னேற்றமின்றி க்ஷீணித்துக் கொண்டு போகிருர்களென்று மதத்தையுங் கடவுளையும் மறுக்கின்றனர்.

அதற்குப் பலவாருய்க் காரணங்கள் கூறுகின்றனர். அதாவது:—மதங்கள் பஞ்சமாபாதகங்களைப் போதிக்கின்றன. கடவுளே யவ்விதத் தொழில் ஆற்றி யிருக்கின்றனன். இவ்விதக் கடவுளும் மதங்களு மிருந்தால் மக்கள் எங்ஙனம் முன்னேற முடியும்? இதுதான் மதமோ? இதுதான் கடவுளோ? என்கின்றனர். இதுவன்றி மதம் மனிதரை முன்னேறவிடா ஒரு பந்தமா யிருக்கின்றது. இப்பந்தமில்லாது உலக ஒழியாதளவும் உலகம் முன்னேற முடியா தென்பதே.

நாகரீகவாதிகாள்!

சத்தியத்தை விட்டுக் கடந்து எல்லையற்றுநா, தந்தவா ரெல்லாம் உளறி மனம்போன போக்காய்ச் செல்வது நாகரீகமன்று. சத்தியம் அறம், ஈகை, அன்பு பொதுச்சேவை முயற்சி தொழில், என்ற அருங்குணங்களாலேயே நாகரீகம் கிட்டுமென்பது கலாவல்லுனர்களாய பேரறிஞர்களின் பேருரையாகும். இதல்லாது கடவுள் இருப்பதாலோ, மதத்தினுலோ முன்னேற்றமில்லாது மக்கள் க்ஷீணித்து விடுகின்றனரென்றுல் சத்திய சமயம் (இஸ்லாம்) போதிக்கும் கடவுளோ அல்லது அம்மதத்திற்குறிய வேதநூலோ தெய்வ தூதர்களோ நம்மவர் அரும் பொக்கிஷம் (நபி ஸல்) அவர்களோ முன்னேற்றத்தடையன்றென்பதை மேற்கூறப்பட்ட குதர்க்க வாதிகளுக் கெச்சரித்துக் கொள்கிறேன். இத்துடன் இச் சிற்றுரையை தங்கள் (வாசகர்கள்) பால் சமர்ப்பித்துக் கொள்கின்றனம்.

சக்தி எங்கே இருக்கிறது?

தள்ளப்படுவதற்கு சக்தி யென்று கூறமாட்டார்கள், தள்ளுவதற்குத்தான் சக்தி யென்று பெயர். வளைவதற்குச் சக்தி யென்று பெயரல்ல, வளைப்பதற்குத்தான் சக்தி யென்று பெயர். கோழையர்களும், ஆணவமற்றவரும் உலகில் எந்தப் புரட்சியையும் செய்ததில்லை. தங்களுக்கென ஒரு திட்டத்தையும், முறையையும், லக்ஷியத்தையும் ஏற்படுத்திக்கொள்ளாமலும், அதனை அடைவதற்கான முயற்சியைச் செய்யாமலும், சுகமாகக் காலங் கழித்தவர்களது அரிய ஊழியமெதுவும் மனித சரித்திரத்தில் இல்லை. சரித்திரத்தை யுண்டுபண்ணுவது வீரர்களினுடையவும், ஆண்பிள்ளைச் சிங்கங்களினுடையவும் வேலையாகும். இவர்கள்தாம் தங்களது அபார முயற்சியாலும் தியாகத்தாலும் வாழ்க்கைச் சமுத்திரத்தின் முகத்தைத் திருப்பி வைத்தவர்கள்; உலகத்தின் அபிப்பிராயத்தை மாற்றியவர்கள்; காரிய உலகில் புரட்சியைச் செய்தவர்கள்; காலத்தின் போக்குடன் ஐக்கியப்படாமல், காலத்தின் போக்கைத் தங்களுக்கனுசரணையாகத் திருப்பியவர்கள்.

உலகம் எந்தப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்றதோ அதனைவிட்டு மாற்றமுடியாது என்றோ, காலம் எந்தப் போக்கில் சென்றுகொண்டிருக்கிறதோ அதனைப் பின்பற்றாமலிருக்கவே முடியாது என்றோ சாக்குப்போக்குக் கூறுவதற்குப் பதிலாக தனது பலஹீனத்தை ஒப்புக்கொண்டு விடுவதே உத்தமமாகும். பலஹீனருக்கு உலகில் எந்த மதமும் அடங்கி விடாது. எந்தத் திட்டமும் கிடையாது. பலமுள்ள எவரும் பலஹீனனை அடக்கிவிடுவர். ஒவ்வொரு சக்திக்கு முன்னிலையிலும் பலஹீனன் தலை வணங்கவேண்டியதுதான். ஆகவே, இப்படிப்பட்ட பலஹீனருக்காக ஒரு மதம் தனது திட்டத்தை மாற்றுமாயின் அந்த மதம் இறுதியில் இல்லாதொழிந்தே போய்விடும்.

இஸ்லாத்தைவிட்டதுதான் நாசத்திற்குக் காரணம்

இஸ்லாத்தின் வரையறைகள்தான் மனித முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் தடைகளாக இருக்கின்றன என்று கூறுவது வெறும் ஏமாற்றமேயாகும். இஸ்லாம் மதத்தில் சொல்லப்பட்டுள்ள வரையறையில் எதனைத்தான் நீங்கள் விடாமற் பின்பற்றி வருகிறீர்கள் என்பதையும், இஸ்லாத்திற் கூறப்பட்டுள்ள எந்தச் சட்டம் உங்களது சுதந்திரத்தைப் பறித்துக்கொள்கிறதென்பதையும் நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். உங்களது சுயேச்சையை இஸ்லாத்தின் எந்தச் சட்டமும் பறித்துக்கொள்வதில்லை. உங்களது முன்னேற்றத்திற்கு இஸ்லாம் வழி காட்டுகிறதேயன்றி, குறுக்கே நின்று வழி மறிப்பதில்லை. மேலும், இஸ்லாத்தின் சட்ட திட்டங்களை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்களாயின், உங்களது முன்னேற்றத்திற்குத் தடையாகவோ, உங்களுக்குத் தீங்காகவோ இருக்கிற எக்காரியத்தையும் இஸ்லாம் அனுமதிக்கவே இல்லை என்பதை நீங்களுணர்ந்து கொள்வீர்கள். உங்களது வீண் பிரயோஜன மற்ற செலவுகளாலேயே நீங்கள் நாசமடைகின்றீர்கள். உங்களை விட்டு வருடந்தோறும் கோடிக்கணக்கான பணம் வட்டி என்ற முறையில் பிறரிடம் சென்று கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள பூஸ்திதிகள் உங்களாதிக்கத்தை விட்டுச் சென்றுகொண்டே இருக்கின்றன. வீண் செலவு செய்வதையோ, வட்டிக்கு வாங்குவதையோ இஸ்லாம் உங்களுக்கு அனுமதித்திருக்கிறதா? உங்களது கெட்ட பழக்கம் தான் உங்களை அல்லற்படுத்துகிறது. தரித்திர திசையை அடைந்த பிறகும்கூட சினிமாப் படக்காக்ஷி சாலைகளும், டிராமாக் கொட்டகைகளும் உங்களினத்தாரால் தான் நிறம்பி இருக்கின்றன. உங்களில் ஒவ்வொருவரும் உடை, அலங்காரம் முதலியவைகளில் அளவுக்கு மீறிச் செலவு செய்கின்றனர். உங்களது ஜோபிகளிலிருந்து மாதந்தோறும் லக்ஷக்கணக்கான திரவியம் வீண் ஆசாரங்களிலும், வெளிப் பகட்டுகளுக்காகவும் செலவு செய்யப்படுகின்றன. இக்காரியங்களில் எதையேனும் இஸ்லாம் அனுமதித்திருக்கிறதா? உங்களை நாசத்திற்கொண்டு வந்ததற்கு முக்கிய காரியம் நீங்கள் ஜக்காத்

துக் கொடுக்காதிருப்பதும், ஒருவருக்கொருவர் உதவி செய்யாதிருப்பதுமே யாகும். இஸ்லாம் இக்காரியங்களைச் செய்யும்படி உங்களைத் தூண்டவில்லையா ? எனவே, உங்களது கஷ்டத்திற்கு இஸ்லாத்தின் சட்ட திட்டங்களெதுவும் காரணமாயில்லை. அச்சட்ட திட்டங்களை நீங்கள் பின் பற்றாதிருப்பதுவே உங்களது கஷ்டத்திற்கு உண்மைக் காரணமாகும். தொண்ணூற்றைம்பது சதவிகிதமுள்ள முஸ்லிம்கள் நிர்ப்பந்தமான காரணம் எதுவுமில்லாமலே வட்டிக்குக் கடன் வாங்கி இருக்கிறார்கள். முஸ்லிம் தனவந்தர்களில் எவரும் எவ்விதத்திலேனும் வட்டி வாங்காமலில்லை. எனவே, இஸ்லாம் மதம் வட்டியை விலக்கிய சட்டத்தை நீங்கள் பின்பற்றி நடந்து கொள்ளவில்லையே. அப்படி இருக்க, உங்களது சீரழிந்த நிலைமைக்கு இஸ்லாம் மதத்தைப்பற்றிக் குறை கூறலாமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

முஸ்லிம்களது கௌரவமும், சமூக பலமும் செல்வத்தினுள்ளிருக்கிறதென்றும், செல்வம் ஜீவனோபாயத்தின் அபிவிருத்தியினுள் அடங்கி இருக்கிறது என்றும், ஜீவனோபாய அபிவிருத்தி வட்டித் தொழிலுக் குள்ளிருக்கிறதென்றும் சிலர் கூறிக்கொள்ளுகின்றனர்.

கண்ணியம், பலம் என்பது என்ன ? அவை எப்படி வரும் என்ற விஷயம்கூட இவர்களுக்குத் தெரியவில்லை என்பது விளங்குகிறது. ஒரு சமூகத்தை கண்ணியமும் மதிப்பும், பலமும் வாய்ந்ததாக ஆக்குவது செல்வமன்று. உங்களிலொவ்வொருவரும் லக்ஷாதிபதியாகவும் கோடீஸ்வரராகவும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஆனால், உங்களிடம் நடத்தையில்லாதிருப்பின் உங்களுக்கு உலகில் மதிப்புக் கிடைக்காது. இதற்கு நேர் மாறாக, உங்களில் இஸ்லாமிய உணர்ச்சி உண்மையாகவே இருப்பதாக வைத்துக்கொள்வோம். நீங்கள் உண்மையாளர்களாகவும், நம்பத்தகுந்தவர்களாகவும், நாணயஸ்தர்களாகவும், பேராசையற்றவர்களாகவும், உங்களது முறையை உறுதியாகப் பின்பற்றுபவராகவும், தகாததைத் தகாததென்றும், தக்கதைத் தக்கதென்றும் கருதுபவராகவும், நஷ்டம் வந்துவிடுமோ என்ற பயமோ, லாபம் கிடைக்குமென்ற அவாவோ உங்களை நேர்மையை விட்டு அகற்றிவிடாமலு மிருப்பதாக வைத்துக்கொள்வோம். இவ்வம்சங்கள் உங்களிடம் பூரணமாக இருக்கும்பக்ஷத்தில் உலகில் உங்களுக்கு கண்ணியம் ஏற்பட்டுவிடும். மனிதர்களது உள்ளங்கள் உங்களைப் பெருமையாக மதிக்கும். லக்ஷாதிபதியின் சொல்லைப் பார்க்கினும் உங்களது சொல்லுக்கு அதிக மதிப்பு உண்டு. நீங்கள் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு, கந்தல் துணியை அணிந்துகொண்டும் மாளிகைகளில் வசிப்பவர்களைப் பார்க்கினும் அதிகம் செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்க முடியும். இன்னும் உங்களது சமூகத்தை வீழ்த்த முடியாத அவ்வளவு பலம் உங்கள் சமூகத்திற்கு உண்டாகிவிடும்.

ஸஹாபிகளது சக்தி எதிலிருந்தது ?

ஸஹாபிகள் காலத்தைய முஸ்லிம்கள் எவ்வளவு வறுமையுள்ளவர்களாக இருந்தனர் ? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். குடிசைகளிலும் கூடாரங்களிலும் வசிப்பவர்களாகவும் பட்டண வாழ்க்கை என்பதை அறியாதவர்களாகவுமிருந்தனர். அவர்களது உடை சரியாக இருக்கவில்லை. அவர்களது உணவு சரியாயிருக்கவில்லை. அவர்களிடம் ஆயுதங்களும், கம்பீரமான வாகனங்களும் இருக்கவில்லை. ஆனால், அவர்களுக்கு உலகிலிருந்த கண்ணியமும் மதிப்பும், செல்வாக்கும் பனூஉமய்யா வம்சத்தினர் அரசாட்சி புரிந்த காலத்திலிருந்த முஸ்லிம்களுக்கிருக்கவுமில்லை. அப்பாஸியா வம்சத்தினர் காலத்து முஸ்லிம்களுக்கிருக்கவுமில்லை. இவர்களுக்குப் பின்னர் எவருடைய ஆட்சிகாலத்திலு மிருக்கவில்லை. இதற்குக் காரணம், ஸஹாபிகளிடம் செல்வமில்லாவிட்டாலும் ஒழுக்கம், நடத்தை ஆகியவைகள் இருந்தன. இவைகள் தாம் அவர்களைப் பலவான்களாகவும், செல்வாக்குள்ளவர்களாகவும் ஆக்கின. இவர்களுக்குப் பின்னிருந்த முஸ்லிம்களிடம் செல்வமிருந்தது, அரசாங்கமிருந்தது, நாகரீகம் தோன்றியது. ஆனாலுமென்ன, இவர்களிடம் ஒழுக்கம், தன்மை ஆகியவைகள் குறைவாகவே இருந்தனவாதலால் இவர்களை இச்சாதனங்கள் பலவான்களாக மாற்ற முடியவில்லை.

பலம் தியாகத்தினுள்ளிருக்கிறது

நீங்கள் இஸ்லாத்தின் சரித்திரத்தை மறந்து விட்டீர்கள். ஆனால், உலகிலுள்ள வேறு எச்சமூகத்தினருடைய சரித்திரத்தை நீங்கள் படித்துப் பார்த்தாலும் சுகஜீவியாக இருப்பதாலும், சுயநலத்தைக் கருதுவதாலும், கஷ்டப்படாமலும் கண்ணியத்தையும் பலத்தையும் அடைந்ததாக எச் சமூகத்தவரையும் நீங்கள் கண்டு கொள்ள மாட்டீர்கள். குறிப்பிட்ட ஒரு

திட்டத்தையும் ஒழுங்கையும், முறையையும் பெற்றுள்ள சமூகத்தைப் பார்க்க முடியாது. கண்ணியமுள்ள ஒரு சமூகம் ஒரு பெரிய நோக்கத்தை அடைவதற்காக நெருக்கடியையும், நஷ்டத்தையும் துன்பத்தையும், சகித்துக் கொள்ளாமலும், தன்னுடைய கொள்கையை நிலைநிறுத்துவதற்காகத் தனது உயிரையும் தியாகம் செய்யத் துணிவு கொள்ளாமலும், இருப்பதை நீங்கள் பார்க்க முடியாது. உலகத்தில் நீங்கள் எங்கு சென்றாலும் ஏதேனும் ஒரு ஒழுங்கு முறைக்குள் நீங்கள் இருந்தே ஆக வேண்டும். இஸ்லாத்தினுடைய இந்தத் திட்டமில்லாவிடினும், வேறு ஏதேனுமொரு திட்டம் அங்கு அவசியமிருக்கத்தான் செய்யும். அந்தத் திட்டத்தையேனும் நீங்கள் அவசியம் பின்பற்றியே தீரவேண்டும். ஏதேனும் ஒரு விதத்தில் நீங்கள் தியாகம் செய்ய வேண்டியதிருக்கும். ஆதலின், உலக முன்னேற்றத்திற்கு இஸ்லாம் தடையாக இருக்கிறது என்பது சுத்தத் தவறு. இஸ்லாத்தின் சட்டதிட்டங்கள் மனிதனை அடிமைப் படுத்துகின்றன வென்று நினைப்பது வீண் பிரமையேயாகும். இஸ்லாம் மனிதனுக்குக் கண்ணியத்தையும் உயர்வையுமே கொடுக்கிறது என்பதும், அதன் சட்டதிட்டங்களும் ஒழுக்கங்களும் மனிதனை உயர்வு என்ற பாட்டையில் துரிதமாக இட்டுச் செல்கின்றன என்பதும் சிந்தனை சக்தியுள்ள எவருக்கும் விளங்காமற் போகாது.

பத்திரிகைகளும் சமூக துவேஷமும்

[தென்காசி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி வரைவது]

இது காலை இப்பாருலகின்கண் பல திரப்பட்ட கொள்கை யுடையோருக்கும் நோக்குடையோருக்கும் ஒரே எதிரியாகக் காணப்படுவது பரிசுத்த இஸ்லாம் மார்க்கம் ஒன்றே யென்பதை எவரும் மறுக்கமுடியாதென்பது திண்ணம். இஸ்லாத்தின் எதிரிகள், தற்போழ்து இஸ்லாத்தில் இதர மக்களை நுழையவிடாது தடுப்பதற்கும், இஸ்லாத்தினுள் வாசஞ்செய்யும் பல்கோடி மக்களுக்கு தங்கள் தலைவர்கள்மீது வெறுப்பை யுண்டுபண்ணுவதற்கும் தக்க ஆயுதமாக உபயோகிப்பது பத்திரிகைகளே யாகுமென்பது யாவருமறிந்ததே. இத்துறையில் நமது சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் பொய்ப் பிரசாரம் வெகு வேகமாகவே நடைபெறுகிறது. ஏன்? அவைகள் வெளியாக்கும் பொய்க் கதைகளை அவ்வப்போழ்து, மறுத்து உண்மைகளை வெளிப்படுத்த, இதர மதத்தினரைப்போல் நமது சமூகத்தில் தினசரி பத்திரிகைகள் இல்லாததே, அவைகட்கு அதி மிகக் கொண்டாட்டமாக இருக்கிறது.

சென்னையிலிருந்து வெளியாகும் பிரபல தினசரியான "தினமணி"க்கு இந்த துறையில் தக்க பாண்டித்தியம் இருப்பதாகவே கருத வேண்டியதிருக்கிறது. ஏன் எனில், நமது சமூக சம்பந்தமாக ஒரு அற்ப விஷயம் கிடைத்துவிட்டால் போதும்! அதற்கு எத்தனை ஆனந்தம்! தடித்த கொட்டை யெழுத்துகளால் எத்தனை பெரிய தலையங்கங்கள்? உபதலையங்கங்க ளெத்தனை? ஆனால் மதமாற்றம் சம்பந்தமாக அதாவது யாராவது இஸ்லாத்தைத் தழுவி விட்டார்களென்ற விஷயம் வந்து விட்டாலோ சொல்லத் தேவையில்லை. வந்து விடுகிறது கோபம்! ஆத்திரம் பொங்கி விடுகிறது! ஆனால் அதை எப்படி வெளிக்குக் காட்டுவது? இதற்கும் ஒரு தந்திரத்தை கண்டு பிடித்திருப்பதாகத் தெரிகிறது.

எவ்விதமெனில், ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னால் அவரை பெரிய தலைவர் அறிஞர் என்று எத்துணை தூரம் வர்ணித்த போதிலும் அவர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் அவர் தலைவரல்ல, அறிஞரல்ல, மஹா கெட்டவர் என்ற வசைப் புராணங்களை கட்டி விடுவதே அந்த வழியாகும். இஸ்லாம் மார்க்கமானது எந்த மனிதனிடத்திலும் நீ என்னை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் என்று வற்புறுத்திக் கூறவில்லை. ஆனால், மக்கள், தங்

களின் லௌகீக வைதீக முன்னேற்றங் கருதி இதில் தானாகவே வந்து சேருகின்றனர். இவ்வாறு வந்து சேருகிறவர்களை அன்புடன் ஆதரித்து உபசரிப்பது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். இதனால்தான் சமீபத்தில் இஸ்லாத்தை ஏற்ற ஜனாப் ஷேக் அப்துல்லா காந்தியையும் முஸ்லிம்கள் கௌரவிக்கின்றனர். மேலும், அப்துல்லாகாந்தி யென்ன? இவரைவிட ஆயிரமடங்கு அறிவிற் சிறந்த மஹானுபாவரையோ இஸ்லாம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. ஆனால், இதில் சேருவதினால் அவர்கள், தங்கள் முக்திக்குரிய பாட்டையில் வந்து விட்டார்க ளென்ற சந்தோஷம்தான், அவர்களை கண்ணியப் படுத்தும்படி முஸ்லிம்களைத் தூண்டுகிறது. முஸ்லிம்கள் இவ்வாறு தங்கள் கடமையைச் செய்யும்போது, முஸ்லிம்களைக் குறைகூறவோ அல்லது புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களை கேவலப்படுத்தவோ எவருக்கும் எவ்வித உரிமையுமில்லை. வடஇந்தியாவில் இவ்வித உரிமைகளில் தலையிடுவதினால்தான் வகுப்புச் சண்டைகளும் சச்சரவுகளும் ஏற்படுகிறது. நமது மாகாணத்தைப் பொறுத்த வரையில் இவ்வித நிலைமையில்லாதிருந்தது. ஆனால் இது போழ்து நடக்கும் துற்பிரசாரத்தால் அவ்வித வகுப்புக்கலவரம் எங்கு ஏற்பட்டு விடுமோ வென்ற அச்சம் உண்டாகிறது.

முஸ்லிம் சகோதரர்காள்!

தற்காலை இஸ்லாத்தைத் தழுவும் புதிய முஸ்லிம்கள்மீது தற்கால எதிரிகள்தான் இவ்வாறு சூக்ஷி செய்கிறார்களென்று நினைக்க வேண்டாம். ஏனெனில், இஸ்லாம் தோன்றிய அக்காலந் தொட்டே இவ்வித சூக்ஷிப் பிரச்சாரம் நடந்துகொண்டு தான் வருகிறது. உதாரணத்திற்காக ஒரு சம்பவத்தை இவண் ஞாபகமூட்டுவது அவசியமெனக் கருதுகிறேன்.

மதீனா நகரில் அப்துல்லா இப்னுஸலாம் என்ற நாமத்துடன் ஒருவரிருந்தார். இவர் யூதர்களின் தலைவர். இவர், தௌராத் (பழைய ஏற்பாடு) வேதத்தில் இறுதி காலத்தில் ஓர் தீர்க்கத் தரிசி வருவார் என்றும், அவரின் நடை முறைகள் இன்னின்னது என்றும் கூறப்பட்டிருந்ததை படித்திருந்ததினால், அந்த தன்மையுடைய ஒரு நபியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இந்தக் காலத்தில்தான், அகில விருட்சகரும், நபிகளுக்கரசருமான முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் மதீனாநகர் சென்றார்கள். இவர்கள் வந்ததையறிந்த அந்த யூத வகுப்புத் தலைவரான அப்துல்லா இப்னு ஸலாம், நாயகமவர்களிடம் வந்து, அநேக கேள்விகளைக் கேட்டு, தௌராத்தில் வர்ணிக்கப்பட்ட தீர்க்கதரிசி இவர்கள்தாமென பூரணமாக உணர்ந்து, உறுதிகொண்டு அந்தவிடத்திலேயே இஸ்லாத்தைத் தழுவிவிட்டார். அது போழ் தவர், எம்பெருமானவர்களை நோக்கி "நாயகமே! யூதர்கள் பொய்யான விஷயங்களை ஜோடித்து கட்டிவிடுவதில் மஹா நிபுணர்கள் ஆதலால், அவர்கள் நான் இஸ்லாமானதை அறிந்தார்களேயானால் என்னைப்பற்றியும் தங்களிடம் பொய்க் கட்டுகளை ஜோடித்து கூறுவார்கள். தாங்கள் இதுபோழ்து நான் இஸ்லாம் மதத்தைத் தழுவியதை மறைவாக வைத்துக் கொண்டு, அவர்களை அழைத்து, என் விஷயத்தைப்பற்றி விசாரித்துப் பாருங்கள்" என்று கூறினார். நபிகள் நாயகமும் (ஸல்.) இதை யனுசரித்து யூதர்களை அழைத்தனுப்பினார்கள்.

யூதர்களும் நாயகத்தின் அழைப்புக்கிணங்க, நாயகமவர்களின் (ஸல்.) திருச்சபைக்கு வந்து சேர்ந்தனர். நாயகமவர்கள் அவர்களை வரவேற்று, அவர்களுக்கு இஸ்லாத்தைப்பற்றிய உண்மைகளை தெளிவாக எடுத்துக்காட்டி, உங்களுடைய தௌராத் வேதத்திலும் என்னைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் என்னை ஒப்புக்கொண்டு முஸ்லிமாகி விடுங்கள்" என்று கூறினார்கள். இதற்குப் பதிலாக அந்த யூதர்கள் "முஹம்மதே! உங்களைப்பற்றி எங்கள் வேதத்தில் கூறப்பட்டிருப்பதை நாங்களறியோம்" என்றனர். அப்போழ்து நாயகமவர்கள் உங்களில் அப்துல்லா இப்னு ஸலாம் என்பவர் யார்? அவர் உங்களின் தலைவரா?" என்று கேட்டதற்கு அவர்கள் ஏகோபித்து, "அவர் எங்களில் அதிகம் அறிந்தவர்; அதிகமறிந்தவரின் புதல்வருமாவர். அவர் எங்களில் அளவற்ற கியாதியுடைய தலைவர்; மஹா கியாதியுடைய தலைவரின் புதல்வருமாவர்" என்று கூறினர். அதற்கு நாயகமவர்கள் "உங்களில் வேதத்தை அதிகம் அறிந்தவரான அந்த அப்துல்லா இப்னுஸலாம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் நீங்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்க, அவர்கள், "ஆண்டவன் பாதுகாப்பானாக. அவர் ஒருபோதும இஸ்லாத்தைத் தழுவமாட்டார்" என்றனர். இவ்வாக்கியத்தை நாயகமவர்கள் பன்முறையும் திருப்பித் திருப்பிக்

கூறினார்கள். இந்த நேரத்தில் அந்தத் தலைவரான அப்துல்லா இப்னு ஸலாம் அவண் விஜயஞ்செய்து "அல்லாஹூ தஆலா ஒருவனென்றும், அவனின் இறுதித் தீர்க்கதரிசி இந்த முஹம்மது நபியவர்களே என்றும் நான் மனமாற ஒப்புக்கொண்டு உறுதி கூறுகிறேன். ஏ யூதர்களே! இந்த முஹம்மதைப்பற்றித்தான் நமது தௌராத் வேதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின், நீங்கள் யாவரும் என்னைப்போல் இவர்களை ஒப்புக்கொண்டு முஸ்லிமாகி ஆண்டவனின் நல்லடியார்களாய்த் திகழுங்கள்" என்று வெகு கம்பீரமாகக் கூறியதைக் கேட்ட யூதர்களின் ஹிருதயம் பதறியது. கோபமும் ஆத்திரமும் பொங்கியது. உடனே நாயகமவர்களைப் பார்த்து "இவர் எங்களில் மஹா கெட்டவர்; மஹா கெட்டவரின் புதல்வருமாவர். இவர் அறிவற்றவர்; அறிவற்றவரின் புதல்வரும் ஆவர்" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றனர். இச்சம்பவம் "புகாரி ஷரீபில்" பல் வேறிடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது.

சகோதரர்களே!

அந்த அப்துல்லா இப்னு ஸலாம் யூதர்களின் தலைவராகவும், மத குருவாகவும் இருந்தும், அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால், அவரை தூஷித்துப் பகைக்க ஆரம்பித்தனர். இஃதேபோல் இக்கால ஹிந்துக்கள், ஹீராலால் காந்தி, காந்திஜீயின் மூத்த புதல்வராயிருந்தும் அவர் இஸ்லாத்தைத் தழுவி இப்பொழுது அப்துல்லா காந்தியாக மாறிவிட்டதால் இவரையும் தூஷிக்கவும் தாக்கவும், குறை கூறவும், கேவலப்படுத்தவும் முற்பட்டு விட்டனர். இது இவர்களின் ஜென்மத் தொழில். வாழையடி வாழையாக இது நடந்து வருகிறது. இன்னுமோர் விஷயத்தையும் கவனியுங்கள்:

கொச்சியில், டாக்டர் கே. பி. தையில், எம். டி. எச். ஆர். எச். எஸ். என்பவர், சென்ற 30-8-36-ல் இஸ்லாத்தைத் தழுவினார். இவர் இஸ்லாத்தைத் தழுவு முன் இவரை தீயவகுப்பு தலைவரென்று ஹிந்துக்களாலும் மற்றவர்களாலும் கூறப்பட்டது. ஆனால் இவர் இஸ்லாத்தைத் தழுவிய பின்னரோ, இவர் தீய வகுப்பு தலைவரல்ல, ஒரு சாதாரணமானவர்தான் என்றெல்லாம் இப்போழ்து ஹிந்துக்களால் கூறப்படுகிறது. இவ்வாறு ஹிந்துக்கள் காட்டும் மனோ பாவனையைப் பார்க்குமிடத்து, இவர்கள் முஸ்லிம்கள் மாட்டு எத்துணை தூரம் குரோதம் கொண்டுள்ளார்களென்பதை தெற்றெனத் தெரிந்து கொள்ளலாம். இவ்வித நிலைமையில் தாங்கள் தேசிய நோக்கங் கொண்டவர்களென்றும், தேசத்தின் விடுதலை யொன்றே தங்கள் நாட்ட மென்றும் கூறிக்கொண்டு முஸ்லிம்களையும் தங்களுடன் சேர்ந்து ஒத்துழைக்குமாறு சிறிதும் வெட்கமின்றி பிரசாரம் புரிகின்றனர். ஆனால் சிறு பான்மையோரான முஸ்லிம்கள் மட்டும் பெரும்பான்மையோரான ஹிந்துக்களிடம் சில பாதுகாப்பு நிபந்தனைகளைக் கேட்டு விட்டால், முஸ்லிம்கள் வகுப்பு வாதிகளாம்! தேச விடுதலை இவர்களது நோக்கமில்லையாம்! ஆனால் அதே சமயம் ஹிந்துக்கள் தங்கள் மதத்துக்கும் சமூகத்திற்கும் ஆதிக்கம் வேண்டுமென்று எத்துணைப் பிரசாரம் புரிந்தாலும், பட்டினி கிடந்தாலும், இன்னும் எத்துணை முயற்சிகள் செய்தபோதிலும் இவர்கள் வகுப்பு வாதிகளல்லவாம்! தேசிய பக்தர்களாம்! அந்தோ வெட்கம்! இதுதான் உண்மை தேசாபிமானமோ? பரிதாபம்!!

உலக சமாதானத்திற்கு ஆபத்தா?

ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பமாவது சமீபித்துவிட்டது. ஒரு சிறு கனற் பொறி கிளம்பிய மாத்திரத்தில் உலக சமாதானம் சாம்பலாக்கப்பட்டுவிடும்; இரவு பகலாக யுத்த முஸ்திப்புகள் செய்வதில் அரசாங்கங்களீடுபட்டிருக்கின்றன, என்ற அபிப்பிராயம் எங்கும் தோன்றி இருக்கிறது. ஆனால், இவ்வாறான முஸ்திப்புகளுக்குக் காரணம் என்ன? வென்பதை அடியிற்கண்ட வியாசம் விளக்கிக் கூறுகிறது.

ஐரோப்பிய அரசாங்கங்களின் தற்போதைய யுத்த முஸ்திப்புகளைப் பார்த்து இதற்குக்

காரண மென்னவென்ற வினு ஒவ்வொருவருள்ளத்திலும் உண்டாகக்கூடும். இவ்வினுவை எவ்வளவு சுலபமாகக் கூறமுடியுமோ அவ்வளவு சுலபமாக அதற்குரிய பதிலைக் கூறிவிட முடியாது. இவ்வினுவிற்குரிய பதிலைக் கூறுவதற்கு முன் ஐரோப்பிய அரசாங்கங்களின் தற்போதைய நிலைமையைப்பற்றிச் சிறிது கவனிப்பது அவசியமாகும்.

தற்போது ஐரோப்பாவில் மட்டிலும்தான் யுத்த முஸ்திப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதில்லை. உலகம் முழுவதிலுமே யுத்த முஸ்திப்புகள் வெகு மும்முரமாகச் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது ஒவ்வொரு அரசாங்கமும் செல்வ நெருக்கடியிலும், பொருளாதாரக் கஷ்டங்களிலும் அகப்பட்டிருந்தும் தங்களது வருவாயில் பெரும் பகுதியை ஆயுதப்பெருக்கிலேயே செலவு செய்துகொண்டிருக்கின்றன. அநேகம் அரசாங்கங்கள் கடன் வாங்கியோ அல்லது பிரஜைகளுக்கு அதிக வரி விதித்தோ தங்களது வரவு செலவுத் திட்டத்தைச் சரிக்கட்டிக் கொண்டிருக்கின்றன.

பிரான்சு தேசத்தின்மீது பிறர் படையெடுத்துச் செல்லாதவரையில் அது வேறொரு தேசத்தின்மீது படையெடுத்துச் செல்லப் போவதில்லை. படை யெடுத்துச் செல்வதற்கான அறிகுறி எதுவும் அங்கு வெளிப்படையில் தெரியவில்லை. இங்கிலாந்தின் நிலைமையும் இவ்விதமாகவே இருக்கிறது. எத்தகைய யுத்தத்தில் சம்மந்தப்பட்டாலும் அது இங்கிலாந்திற்கு அதிகக் கஷ்டத்தை யுண்டாக்கி விடுதற்குக் காரணமாகிவிடும். இதே நிலைமைதான் ஐரோப்பாவின் இதர தேசங்களினுமிருந்து வருகிறது. ஆகவே, ஒவ்வொரு தேசமும் யுத்தத்தில் மாட்டிக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்ள இயன்றவரை முயற்சி செய்கின்றது. ஏனெனில், சென்ற மகாயுத்தத்தின் அனுபவம் உயிரும் பொருளும் நஷ்டமுண்டாகுவதைத் தவிர வேறு லாபம் ஒன்றுமில்லை என்பதை வெளிப்படுத்திவிட்டது. எனவே, யுத்தம் என்ற பெயரைக் கேட்டு நடுங்கிக்கொண்டிருக்கிற இந்த தேசங்கள் யுத்தக் கருவிகளைச் சேகரிப்பதில் ஏன் இவ்வளவு சிரத்தை காண்பிக்கின்றன என்ற வினு இங்கு உண்டாகின்றது. இதற்குப் பல காரணங்களிருக்கின்றன.

முதலாவது ஒன்றை ஒன்று அஞ்சுவதும் சந்தேகப்படுவதுமாகும். ஜெர்மனி ருஷியாவைப் பார்க்கினும் பலஹீனமாக இருப்பதாகத் தன்னைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தது. ஆதலின், அது உள்ளூற தனது ராணுவ பலத்தை அதிகப்படுத்துவதிலிருந்தது. இப்பொழுது அதற்குப் போதிய பலமேற்பட்டுவிட்டது. ஹர் ஹிட்லரும் அவரது கக்ஷியினரும் அதிகாரத்திற்கு வந்ததுமுதல் ருஷியாவுக்கு ஜெர்மனியின்மீது பயமுண்டாகிவிட்டது. ஜெர்மனிக்கு ஐரோப்பாவிலுள்ள வேறு ஒரு அரசாங்கத்தின் உதவி கிடைக்கிற அன்றைய தினத்திலேயே தனது தேசத்தை விஸ்தீரணப்படுத்திக்கொள்வதற்காக ருஷியாவின்மீது படையெடுத்துவிடும் என்று ருஷியா கருதுகிறது. இந்த பயத்தினுல்தான் ருஷியாத் தனது ராணுவ பலத்தை அதிகப்படுத்திக் கொள்வதில் இரவு பகலாக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, தற்போது ருஷியாவில் 13 லக்ஷம் போர்வீரர்கள் எந்த நேரத்திலும் யுத்தத்திற்குச் செல்லத் தயாராக இருக்கிருர்கள். அவசிய மேற்படுங்கால் 120 லக்ஷம் போர் வீரர்களை யுத்தகளத்திற் கனுப்ப முடியும்.

தவிரவும், ஜெர்மனின் அபாயத்தைத் தடுத்துக்கொள்வதற்காக அது தனது ஆகாயப் படையையும் பலப்படுத்துகிறது. உலகத்திலுள்ள ஆகாயப்படைகள் அனைவற்றிலும் ருஷியாவின் ஆகாயப் படைதான் அதிகப் பலம் பொருந்தியதென பிரஞ்சு வெளி நாட்டு மந்திரி ஒரு முறை கூறி இருக்கிருர். ருஷியா செய்து வரும் இந்த முயற்சிகள் ஜெர்மனிக்குப் பயத்தையுண்டு பண்ணிவிட்டது. ஆதலின், அதுவும் தனது பலத்தை அதிகப்படுத்த முயலுகிறது. எனவே, இம் முயற்சியானது பிரான்ஸையும், இதர அரசாங்கங்களையும் பயப்படச் செய்திருக்கிறது. ஆதலின், அவ்வரசாங்கங்களும் இயன்றவரை தனது பலத்தைப் பெருக்குவதில் முனைந்து நிற்கின்றன.

தவிர, ருஷியாவின் ராணுவபலம் அதிகரிப்பதானது ஜப்பானுக்குப் பீதியாக இருக்கிறது. ஐரோப்பாவின் அரசாங்கங்கள் படை திரட்டுவதைக்கண்டு இங்கிலாந்து சும்மா இருக்கவில்லை. அதுவும் படை திரட்டுகிறது. இவைகளைக்கண்ட அமெரிக்காவும் தனது பலத்தை விஸ்தரித்துக் கொள்ளத் தலைப்பட்டு விட்டது. எனவே, இந்த ஆர்ப்பாட்டங்களுக் கெல்லாம் மூல காரணம் ஜெர்மனியேயாகும். ஆகவே, அவ்வரசாங்கத்தின் முஸ்திப்பைப் பற்றி இங்கு சிறிது கவனிப்போம்.

ஜெர்மன் அரசாங்கம் இப்பொழுது செய்து கொண்டிருக்கும் இம் முஸ்திப்புகளுக்கு மேற் சொன்ன காரணங்களே யல்லாமல் 1918-ம் வருஷத்து உடன்படிக்கையும் ஒன்றாகும். இவ்வுடன்படிக்கையின் மூலமாக ஜெர்மனியை நிராயுதபாணியாகச் செய்யப்பட்டது. பளுவான பீரங்கிகள், குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் அதிகமாக ஆகாய விமானங்கள் முதலியன வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்படவில்லை. இவ்வுடன் படிக்கையால் ஜெர்மனிக்கு உலகில் மிகுந்த அவமான முண்டாகிவிட்டதாக ஜெர்மனி எங்கும் பலமான உணர்ச்சி யுண்டாயிற்று. ஆகவே, ஜெர்மனியர் தங்களது அரசாங்கத்தைப் பலப்படுத்துவதில் முழு மனதுடன் ஒத்துழைத்தனர். இதன் பலனாக ஜெர்மன் அரசாங்கம் 1918-ம் வருஷத்து உடன்படிக்கையைக் காற்றில் பறக்கவிட்டு, ரைன்லான்டில் பிரவேசித்து, இழந்து போன தனது பெருமையைத் திரும்பவும் உண்டாக்கிக் கொண்டது. அன்றியும் அது செய்யும் பலத்த முஸ்திப்புகளைப் பார்த்தால் அது தனது குடியேற்ற நாடுகளை எல்லாம் திரும்ப வாபஸ் கேட்குமோ என்றஞ்சி இதர அரசாங்கங்க ளெல்லாம் ராணுவ பலத்தை அதிகரிப்பதில் முனைந்து நிற்கின்றன.

இவ்வரசாங்கங்கள் பயப்படுவதற்குக் காரணமில்லாமற் போகவுமில்லை. இழந்துபோன தனது குடியேற்ற நாடுகளைத் திரும்பவும் அடைவதற்கு ஜெர்மனி விசாலமான திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஹர் ஹிட்லர் அசல் ஜெர்மனியரைத் தவிர ஜெர்மன் ரத்தக் கலப்புள்ளவர்களையும்கூடத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார். இவ்வண்ணம் தனது பலத்தை அதிகப்படுத்திக் கொண்டபின் ஆசியா ஆப்பிரிக்கா கண்டங்களிலுள்ள குடியேற்ற நாடுகளைத் திரும்ப அடைவதுமல்லாமல், கூடுமானால் ஐரோப்பாவினிற்குள்ளாகவே தனது குடியேற்ற நாட்டை உற்பத்தி செய்துகொள்ள ஹர் ஹிட்லர் விரும்புகிறார். எனவே, இத்திட்டத்தை அமுலில் கொண்டு வருவதற்காகத் தற்போது போலண்டு, ஆஸ்டிரியா, டென்மார்க், ஸாரைன் முதலிய தேசங்களில் இருக்கிற ஜெர்மனியரையல்லாமல் பெல்ஜியம், ஹாலண்டு முதலிய தேசங்களிலுள்ள இருபிறவி ஜெர்மனியரையும்கூடத் தூண்டிவருகிறார். இவ்வியக்கம் ஐரோப்பாவிலுள்ள எல்லா அரசாங்கங்களையும் பயப்படச் செய்துகொண்டிருக்கிறது. ஹர் ஹிட்லரும் அவரது சகாக்களும் காண்கிற இக்கனவு இனியொரு காலத்தில் பயனளித்தாலும் அளிக்கக்கூடும்.

ஜெர்மனி இவ்வியக்கத்தைத் தற்போது பிரசாரத்தின் மூலம் செய்துவந்தாலும் சமயம் வாய்ப்பின் வெளியிலுள்ள ஜெர்மனியரைத் தன்னுடன் சேர்த்துக்கொள்வதற்காக ஆயுதப் பலத்தை உபயோகிக்கவும் பின்வாங்கமாட்டாது என்பதை இதர அரசாங்கங்கள் நன்கு தெரிந்துகொண்டிருக்கின்றன. ஆஸ்டிரியாவில் நிகழ்ந்த சம்பவம் இச்சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்துகிறது. ஜெர்மனியின் இந்தத் திட்டத்தைக் கவனிக்குமிடத்து யுத்தம் வெகு தூரத்திலில்லை யென்றே இதர அரசாங்கங்கள் கருதுவதுடன் அந்த யுத்தத்திற்காக அவைகள் தங்களைத் தயார் செய்து கொண்டுமிருக்கின்றன எனத் தெரிகிறது.

சர்வதேச சங்கத்திற்கு தைரியமுண்டா?

ஜெர்மனியினால் அடுத்த மகா யுத்தம் தோன்றலாம் என்ற இச்சந்தேகம், உருக்கொண்டு காரியத்தில் அமலுக்கு வரும் பக்ஷத்தில் இதனைத் தடுப்பதற்கு ஏதேனும் மார்க்கமிருக்கிறதா? அல்லது சர்வதேச சங்கம் யுத்தத்தை நிறுத்துவதற்குச் சக்தியுள்ளதாக இருக்கிறதா என்பதைக் கவனிப்போம்.

ஜெர்மனியைப் புறக்கணித்துவிட்டு இதர அரசாங்கங்களெல்லாம் சர்வதேச சங்கத்தில் சேர்ந்திருக்கின்றன என்பதிலும், ஆஸ்டிரியாவின் சான்ஸலரான டெல்போஸைக் கொன்ற போது சர்வதேச சங்கத்திலுள்ள இதர அங்கத்தினரின் உதவியை நம்பி இத்தாலி தனது சேனைகளை எல்லைப்புறத்திற்கு அனுப்பி ஹர் ஹிட்லரின் பயங்கரமான ராணுவ முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டது என்பதிலும் சந்தேகமில்லை. இத்தாலியின் இந்தத் தடுக்கினுள் பலமான மகாயுத்தம் தோன்றுவது மறைந்திருந்தது. அதுபோழ்து ஜெர்மனி கொஞ்சம் முரட்டுத்தனமாக நடந்திருக்கும்பக்ஷத்தில் பெரிய மகாயுத்தம் தோன்றி இருக்கும். இதனை யுத்தேசித்து ஜெர்மனி புத்திசாலித்தனமாக நடந்துகொண்டது. என்றாலும், சர்வதேச சங்கத்திற்கு யுத்தங்களைத் தடுக்கச் சக்தியில்லை என்பது பிரத்தியக்ஷம். அதிலும், அபிசினியாவின் வீழ்ச்சிக்கு முன்னர் இதில் சந்தேகம்

கொள்ள இடமிருந்தது. ஆனால், இப்பொழுது அந்தச் சந்தேகத்திற்கும் இடமில்லாதவாறு சர்வதேச சங்கத்தின் சக்தி வெளிப்பட்டுவிட்டது. தவிரவும், தற்போதுள்ள நிலைமையில் ஒரு தேசத்திற்கு நன்மை செய்வதானது இன்னொரு தேசத்திற்குத் தீமை செய்வதாகவே இருப்பதால் இனி வருகிற யுத்தத்தை சர்வதேச சங்கம் தடுக்கமுடியாது என்பது உலகினுக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

இங்கிலாந்தின் யுத்த முஸ்தீப்பு

ஐரோப்பாவிலுள்ள எல்லா அரசாங்கங்களிலும் இங்கிலாந்தின் அரசாங்கம்தான் இனி வரப்போகும் காரியங்களைப்பற்றித் தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்து காரியம் செய்வதென்பது ஐரோப்பாவின் சரித்திரத்தைப் படிப்பவர்களுக்கு நன்குவிளங்கும். ஆகவே, அவ்வரசாங்கத்தின்போக்கிலிருந்து எதிர்காலத்தைப்பற்றி ஓரளவுயூகித்துணர்ந்துகொள்ள்லாம். ஆயுதப்பரிகரணம் செய்யவேண்டும் என்பதிலும், யுத்தத்தை ஒழிக்கவேண்டும் என்பதிலும் அவ்வரசாங்கங்கள் இதுநாள் பரியந்தம் முன்னணியிலிருந்து உழைத்தது. இப்பொழுது அவ்வரசாங்கமும் யுத்தக் கருவிகளைச் சேகரிப்பதற்காகவும், தளவாடங்களைப் பெருக்குவதற்காகவும் கோடிக்கணக்கான திரவியங்களைச் செலவு செய்ய முன் வந்துவிட்டது. ஆகவே, அத்தேசத்திலும்கூட யுத்த பயம் தோன்றிவிட்டது என்பதும், சமாதானத்தின் மூலம் நிலைமையைச் சமாளிக்க முடியாதென உணர்ந்துவிட்டதென்பதும் இதிலிருந்து தெரிந்துவிட்டது. இங்கிலாந்து செய்யும் இம்முயற்சிக்கு அது வெளிக்கு எக்காரணத்தைக் கூறிக்கொண்டாலும் யுத்த பயத்தை அது உணர்கிறது என்பதிற் சந்தேகமில்லை. சர்வதேச சங்கத்திற்குச் சக்தியில்லை. இற்றைக்குச் சில வாண்டுகளுக்கு முன்னர் ஜப்பான் சீனாவிடமிருந்த மஞ்சூரியாவை விழுங்கிய போதும், இப்பொழுது அபிசீனியாவை இத்தாலி விழுங்கியபோதும் சர்வதேச சங்கம் கையைக் கட்டிக்கொண்டிருந்து விட்டது. சர்வதேச சங்கம் பேச்சுச் சங்கமே தவிர காரியச் சங்கமன்று. ஒவ்வொரு அரசாங்கமும் தன் இஷ்டம்போல் நடந்துகொள்ளலாம். அதனைத் தடுக்க சர்வதேச சங்கத்தால் கையாலாகாது என்று பிரிட்டன் சமாதானங் கூறலாம். எவ்வாறாயினும் பிரிடைனுக்கும் யுத்த பயம் உண்டாகிவிட்டது என்பதையே இச்சமாதானமும் அறிவிக்கிறது.

வரப்போகும் யுத்தம் எங்கே நடை பெறும்

ஐரோப்பிய அரசாங்கத்தின் பயங்கரமான இம் முஸ்தீப்புகள் விருதாவாகப் போய்விடமாட்டா. பிரயோஜன மற்றனவாகி விடா இதன் பயன் பயங்கரமான ரத்த சிந்துகையைத்தவிர வேறொன்று மில்லை என்பது தெரிந்த விஷயம். வரப்போகும் யுத்தத்தின் கோரத்தன்மையாதா யிருக்கவேண்டும் என்பதை நினைக்கும்போதே மயிர்ச்சிலிர்க்கின்றது. இவ்வரசாங்கங்களின் முஸ்தீப்புகள் பெரும்பாலும் பீரங்கிகளிலிருந்தாலும், எல்லாவற்றினும் மிகப் பெரிய அபாயம் ஆகாய விமானங்களின் மூலமாகவே இருக்கிறது. யுத்தத்தின் பலம் முழுவதும் அதனையே சார்ந்திருக்கிறது. தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற நவீனக் கருவிகள் அபாயம் விளைவிப்பதில் ஒன்றை ஒன்று மிஞ்சினவாகத் தோன்றிடினும் ஆகாய விமானங்களின் முன் அவைகள் நிற்கமாட்டா. சென்ற மகாயுத்தத்தில் கோடிக்கணக்கானவர் கொல்லப்பட்டனர். ஆகாயவிமானங்களும் உபயோகிக்கப்பட்டன. ஆனால், அக்காலத்தில் விமானங்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருந்தன. இப்பொழுது அவைகளுக்கிருக்கிற சக்தி அக்காலத்தில் அவைகளுக்கு இருக்கவுமில்லை. இனி யொரு மகாயுத்தம் நிகழ்வது நிச்சயம் என்பதை ராஜ தந்திரிகள் ஏக மனதாகக் கூறிடினும் தங்கள் சமூகத்தாரையும் இதரர்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சியை முதன்மையாகக் கொண்டு, பயங்கரமான இக்கருவிகளுக்கு மனிதன் வேட்டைப் பிராணியாகி விடக்கூடாது என்ற விஷயத்தை நிர்த்தாரணயம் செய்து கொள்வார்களாக. அதாவது யுத்தத்தில் ஆகாய விமானங்களை உபயோகிக்கக் கூடாது என்பதாக பெரிய அரசாங்கங்கள் தியாக புத்தியுடன் முன்வந்து உடன்படிக்கைகளைச் செய்துகொள்ள வேண்டும். இனி வரப்போகும் யுத்தத்தில் ஆகாய விமானங்களுக்கிருக்கிற முக்கியாம்சத்தைக் கவனிக்கும் போது நம்முடைய மேற்கண்ட அபிப்பிராயம் வெறும் கனவு என்பதைத் தவிர வேறொன்று மில்லை. ஆயினும், வரும் யுத்தத்தில் மனித சமூகத்திற்கு ஏற்படும் நாசத்தைக் கவனித்து விசனிக்காம லிருக்க முடியவில்லை.

பர்தாவின்மையின் பயன்

அஸ்லம் என்பவர் சிறு பையனாக இருந்த காலத்திலிருந்தே அவரது தாய் மாமன் வீட்டில் வளர்ந்தவர். அவரது தாய் மாமன் பாசன இலாக்காவில் சப் டிவிஷனல்ஆபிசர். அவருக்குத் தாய் தந்தையர் காதிம் ஹுஸைன் என்று பெயரிட்டிருந்தும், அவர் தனது பெயரை ஆங்கில மோஸ்தராவில் K. ஹுஸைன் என்று எழுதிக்கொள்வது வழக்கம். காதிரம் ஹுஸைன் நடுத்தரக் கல்வி பயின்ற காலத்தில் அவரது பழக்கம் இந்திய முறையிலேயே இருந்தது. பின்னர், காலேஜில் பயின்று பட்ட பரீக்ஷை பெற்று விலகும் வரை அவர் இந்திய முறையிலேயே இருந்தார். பட்டம் பெற்று இஞ்ஜினீரிங் காலேஜுக்குச் சென்றபோது மேனாட்டுப் பித்து பிடித்தமாணவர்கள், ஆங்கிலேய ஆசிரியர்களது கூட்டுறவு ஏற்பட்டமையால் அவரிடம் மேனாட்டு மோஸ்தர் கொஞ்சங் கொஞ்சமாக ஊறவாரம்பித்தது. இறுதியாக இஞ்ஜினீரிங் காலேஜை விட்டு வெளியேறும்போது அவரது மூளையிலும் மனத்திலும் ஆங்கிலேயரது வாழ்க்கை என்ற பைசாச உணர்ச்சி வேரூன்றிவிட்டது. ஆகவே, காதிம் ஹுஸைனது இல்லத்தில் மேனாட்டு நாகரீகம் பெரும் அளவிற்குப் பரவி இருந்தது. அலமாரிகளில் ஆங்கில நாவலள் நிரம்பி இருந்தன. சுவர்களில் நிர்வாணம், அரை நிர்வாணப்படங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. ஆங்கில நாகரீகத்திற்கு அத்தியாவசியமான கத்தி, முட்கரண்டி, ஸூட், பட்நூல், பைப், பௌடர், ரேஜர் முதலியவைகளெல்லாமிருந்தன. காதிம் ஹுஸைன் தனதில்லாளை பர்தா வழக்கத்தை விட்டு வெளியிற் கொண்டுவர விரும்பினார். ஆனால், அவள் குணசாலியாயிருந்ததால் அதற்குடன் படவில்லை. என்றாலும், கணவனுடைய வற்புறுத்தலுக்காக வெளியிடங்களில் தூரத்திலுள்ள பட்டணங்களுக்குச் செல்லும்போது மாத்திரம் பர்தாவில்லாமல் பர்த்தாவுடன் பஜார்களுக்குச் செல்வது வழக்கம்.

நமது அஸ்லம் இதே மேனாட்டு மோஸ்தராவில் வளர்க்கப்பட்டாராதலின் ஸ்கூலில் சேர்த்துக்கொள்ளப்பட்ட வுடனேயே தலையிலிருந்து கால்வரை பாதி ஆங்கிலேயராகி விட்டார். அஸ்லமுடைய சிரசில் அகம் பாவமும் தற் பெருமையும் குடி கொண்டிருந்தன. ஸ்கூல் முற்றத்தில் அவர் ஸூட் அணிந்து கொண்டு டப்-டப் என்று நடந்து திரிவதைப்பார்த்தால் அரசாங்கம் இவருக்கு மார்ஷல் லா பிரயோகிக்கும் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டதோ என்று தோன்றும். ஸ்கூல் மாணவர்களை அவர் மிகவும் கேவலமான நோக்குடனே பார்ப்பது வழக்கம். ஆரம்பத்தில் அவர் மற்றைப் பிள்ளைகளுடன் பேசுவதுகூடக் கிடையாது. ஆனாலும், அதே மாணவர்களுடன் அவர் இருந்து படிக்கவேண்டியதிருந்ததால் அவர்களுடன் சங்கோஜ மில்லாமல் பழகவேண்டியதாயிற்று. என்றாலும், அகம்பாவமும் தற் பெருமையும் அவரை விட்டகலவில்லை. அவர் ஏழைப் பிள்ளைகளுடன் பேசும்போது "நீங்கள் சுத்தமான உடையணிந்து வரவேண்டும். உங்களுடைகளில் துர் நாற்றம் வீசுகிறது" என்று கூறுவது முண்டு.

ஆரம்பத்தில் பள்ளி மாணவர்கள் இவரைப் பற்றிக் கவனிக்கவில்லை. ஆனால், புதிதாக வந்த அஸ்லம் வானத்திலிருந்து தொப்பென்று குதித்தவர்போல் பேச்சு வார்த்தைகள்கூடச் செய்யாதிருப்பதை அவர்கள் பார்த்து விளங்கிக் கொண்டனர். பையனின் அகம்பாவத்தை அடக்கவும், அவமானப்படுத்தவும் கூடிப் பேசினர். ஒருநாள் ஸ்கூலில் தேநீர் விருந்து நடைபெற்றதால், ஸ்கூலில் இடைவேளைக்குப் பிறகு விடுமுறை யளிக்கப்பட்டது. அஸ்லம் அன்றைய தினம் நல்ல மோஸ்தராவில் வந்தார். நேர்த்தியான கோட், நெக்டை, பளபளப்பான பூட், கோட் ஜோபியில், வெளியில் தெரியும்படியாக வைக்கப்பட்ட சில்க் ரூமால் ஆகியவைகளணிந்திருந்தார். மாணவர்கள் விருந்து நடைபெறும் மண்டபத்திற்குள் சென்றபோது ஒருமாணவன் "வாலறுந்த குரங்கு" என்பதாக ஒரு சீட்டில் எழுதி அஸ்லமுக்குப் பின்னால் கோட்டின்மீது குண்டூசியால் தைத்துவிட்டான். அஸ்லம் மண்டபத்திற்குள் நுழைந்தவுடன் அக்கடிதத்தைப்

பார்த்தவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரிக்கலானார்கள். "இப்பொழுதுதான் கூட்டிலிருந்து வந்ததோ" "வாலை யாரப்பா அறுத்தது?" "லார்ட் கர்ஸன் வம்சம் போலிருக்கிறது" "கடித்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றெல்லாம் ஆளுக்கொன்றாக அப்பையன்கள் கூறினர்.

அஸ்லமுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கோபம் வருகிறது. ஆனால், வெட்கம் ஒன்றும் பேச விடவில்லை. இதற்குள் தலைமையுபாத்தியாயரிடம் புகார் சொல்லக்கூடாது என்பதற்காக மற்றைப் பையன்கள் சரி பண்ணிவிட்டனர். இந்நிலைமையில் ஒருமுறை எல்லாப் பையன்களும் அஸ்லமைப் பகிஷ்கரித்துவிட்டனர். ஆனாலும், அஸ்லம் இவைகளைக் கண்டஞ்சிவிடவில்லை. தாய் மாமன் வீட்டு ஆங்கில மோஸ்தரா பையன்களது பரிகாசத்தினால் இரங்கிவிடுமா? இவ்வண்ணமாக அஸ்லம் அதே ஸ்கூலில் மெட்ரிக் பாஸ் செய்து காலேஜூக்குச் சென்றார்.

காலேஜில் இவரைப்போன்ற சில பிள்ளைகள் அகப்பட்டுக்கொண்டனர். இந்தப் பயித்தியக்காரனுடன் இன்னும் சில பயித்தியக்காரர்கள் சேர்ந்துகொண்டனர். ஆகவே, மேனாட்டுப் பித்துப் பிடித்த இந்த மாணவர்கள் தங்களுக்கென தனிச் சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டு இங்கிலீஷ் சொஸைட்டி என்றும் பெயர் வைத்துக் கொண்டனர்.

1. இங்கிலிஷில் தவிர வேறு எப்பாஷையிலும் எந்த அங்கத்தினரும் பேசக்கூடாது.

2. ஒவ்வொரு விசேஷ காலத்திலும் கூட்டத்திலும் இச்சபையின் அங்கத்தினர்கள் ஆங்கில உடை அணியவேண்டும்.

3. மத சம்பந்தமான பேச்சுக்களைப் பேசக் கூடாது.

இவைகள்தான் இச்சங்கத்தின் முக்கிய சட்டங்கள். இந்த சொஸைட்டிக்கு காலேஜில் அதிக அபிவிருத்தி ஏற்பட இடம் கிடைக்கவில்லை என்றாலும், கொஞ்சங் கொஞ்சமாகச் செல்வாக்குப் பெற்றது.

நுண்ணிய அறிவும் ஆற்றலுமுள்ளவர்கள் பொதுவாக வேலையில் சோம்பேறிகளாகவே இருப்பது வழக்கம். ஆனால், அஸ்லம் அப்படி இல்லை. நுண்ணிய அறிவும் ஆற்றலும் பெற்றிருந்ததுடன் சளைக்காமலுழைப்பவராயிருந்தார். இரவில் ஒரு மணிக்கு முன்னதாக தூக்கம் பிடிக்காது. காலேஜிலுள்ள புத்தகாலயத்தில் அஸ்லமால் படிக்கப்படாத புத்தகங்கள் மிகச் சிலவே இருக்கக்கூடுமென்னலாம். ஒருமுறை கல்வி இலாக்கா டைரக்டர் காலேஜைப் பார்வையிட வந்தபோது அவருக்கு காலேஜின் சார்பில் மாலை விருந்தளிக்கப்பட்டது. அஸ்லம் நுண்ணிய அறிவும் ஆற்றலுமுள்ள மாணவர்களிலொருவராக இருந்தமையால் காலேஜ் பிரின்சிபால் கல்வி இலாக்கா டைரக்டருக்கு இவரை அறிமுகம் செய்து வைத்தார். டைரக்டர் அவர்கள் சம்பாஷணையின் மத்தியில் பிரபல ஆங்கில வித்துவானைப் பிரஸ்தாபித்துக் கூறினார். அஸ்லம் அவ்வித்துவானின் வாழ்க்கை வரலாறுகளையும் அவரது காவியங்களின் தன்மைகளையும்பற்றி விபரமாகக் கூறினார். எனவே, டைரக்டர் அஸ்லமுடைய கல்வித் திறமையையும், ஆராய்ச்சி வன்மையையும் மெச்சி ஒரு கைக் கடியாரம் வெகுமதியளித்துச் சென்றார்.

பி. ஏ. பரீக்ஷையில் முதல்தரமாக வெற்றி பெறுவோம் என்று அஸ்லம் நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால், காலச்சக்கிரம் விடவில்லை. நோய் வாய்ப்பட்டு, அதிக சிரமத்துடன் பரீக்ஷைக்கு உட்கார வேண்டியதிருந்தது. ஆனாலும், பரீக்ஷை முடிவில் அஸ்லம் சர்வகலாசாலைப் பரீக்ஷையில் இரண்டாந்தரமாக வெற்றி பெற்றார். காலேஜ் பிரின்சிபாலுக்கு இவர்பால் அதிக அன்பிருந்ததால் அவரது சிபாரிசின் பேரில் இன்கம் டாக்ஸ் இன்ஸ்பெக்டர் பதவி கிடைத்தது.

உத்தியோகம் பெற்றபின் அஸ்லமுக்கு விவாகம் செய்விக்க வேண்டும் என்ற பிரச்னை யுண்டாயிற்று. மேனாட்டு நாகரீகப் பழக்கமுள்ள ஒரு ஸ்திரீயை மணம் செய்விக்க வேண்டும் என்பது அஸ்லமின் தாய்மாமனான காதிம் ஹுஸைனின் எண்ணம். ஆனால், அஸ்லமுடைய சிறிய தகப்பனாரும், மாதாவும் இதைப் பலமாக ஆக்ஷேபித்தனர். தனது தாய் மாமனாரது நோக்கப்படி செய்யவேண்டுமென்பதே அஸ்லமுடைய அவாவாக இருந்தாலும், தன்னைப் பெற்ற மாதாவைப் புண்படுத்தக்கூடாதென்ற எண்ணத்தால் அஸ்லம் வாய் மூடி இருந்தார். அஸ்லமுடைய பூப்பா அதாவது அத்தையின் புருஷன் ஜாஹித் ஹுஸைன் என்பவர் டிப்டி கலெக்டர் உத்தியோகம் பார்த்து பென்ஷன் பெற்று விலகியபின் வியாபாரத் துறையிலீடுபட்டு வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வருகிறார். அரசாங்கத்தாரும் அவருக்கு கௌரவ மாஜிஸ்டிரேட் பதவியையும் அளித்திருக்கின்றனர். இறைவன் கிருபையால்

பூஸ்திதி, ரொக்கம் முதலிய செல்வமும் மதிப்பும் இருக்கிறது. ஆனுல் அவரது வயோதிகப் பருவத்தில் அவரது குமாரர்களிருவரும் நல்ல யௌவனப் பருவத்தில் இவ்வுலகை விட்டேகினர். இதனுல் அவர்மனமுடைந்திருந்தார். எனினும், அவருக்கு இனி எஞ்சி இருப்பது ஒரு கன்னிகைப் பெண்ணே யாகும். இப்பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளப் பலரும் முயன்றனர். ஆனுலும், ஜாஹித் ஹுஸைன் இஷ்டப்படவில்லை. இப்பெண்ணும் ஆயிரத்தில் ஒரு ஸ்திரியெனலாம். அழகு, வடிவு, வெட்கம், நாணம், மடமை, பயிற்பு முதலிய ஸ்திரீகளுக்கு வேண்டிய சகல தன்மைகளூம் பொருந்தியவளாயிருந்தனள். ஆகவே, அஸ்லமுடைய அன்னை தனது மைந்தனுக்கு இப்பெண்ணை விவாகம் செய்விக்க வேண்டுமென முயன்றனள். இப்பெண் மேனுட்டு மோஸ்தாவிலில்லாவிட்டாலும் சகலவிதமான அம்சங்களூம் அமையப்பெற்றவராதலின் அஸ்லமும் இதற்கிசைந்தார்.

இறுதியாக மிக வாடம்பரத்துடன் விவாகம் நடைபெற்றது. விவாகத்திற்குப்பின் சிலநாள் தங்கி இருந்துவிட்டு அஸ்லம் தனது மனைவியை வீட்டில் விட்டுவிட்டு உத்தியோக வேலைக்குச் சென்றுவிட்டார். அவ்வணங்கு மறுபடியும் தன் அத்தை இல்லம் வந்திருந்தனள். சில தினங்கள் சென்றபின் அஸ்லம் மறுபடியும் வந்து தனது வாழ்க்கைத் துணைவியை அழைத்துக்கொண்டு புதுக்குடியாயினுர். அப்பெண்மணி புருடன் வீடு வந்தபின் தனது மணுளனிடம் செலவிற்கு அதிக பணம் கேட்காமலே சிக்கனமாகத் தனது குடும்பக் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினள். இவளது சிக்கன முறை, வேலைத்திறமை இவைகளைக்கண்ட அஸ்லம் குடும்ப அலுவல்களனைத்தையும் அவளிடம் ஒப்புவித்துவிட்டார். சொற்ப காலத்திற்குள் அவள் அஸ்லமுடைய வீட்டை ஒரு நவாபுடைய பங்களாவுக்கு நிகரானதாக்கி விட்டனள். தனது வாழ்க்கைத் துணைவி தனதிஷ்டத்திற்கு இசைந்து நடப்பதையும், ஒழுங்கு, சுத்தம், நற்குணம், நன்னடக்கை முதலியவைகள் ஒருங்கே அமையப் பட்டவளாயிருப்பதையும் கண்டு அஸ்லம் அளவற்ற ஆனந்தமுள்ளவராக இருந்தாலும் ஒரு காரியம் மாத்திரம் அவரது உள்ளத்தில் முட்குத்துவதுபோல்குத்திக்கொண்டே இருந்தது. அதாவது, அவ்வணங்கையை ஆங்கில மோஸ்தாவில் ஈடுபடுத்திவிட வேண்டுமென் றெண்ணங்கொண்டு ஆங்கில நாகரீகத்தைப்பற்றி எப்பொழுதும் அவளிடம் சிலாகித்துப் பெருமையுடன் கூறிக்கொண்டிருந்தார். ஆனுல், அவ்வணங்கை அவைகளைச் செவியிலேற்றிக் கொள்வதில்லை. ஒருநாள் அஸ்லமுடைய நண்பர் ஒருவர் வந்தார். அவர் டிப்டிகலெக்டர் உத்தியோகம் பார்ப்பவர். ஆதலின், அஸ்லம் அவரைத் தனதில்லத்திலேயே தங்கி இருக்கும்படிச் செய்திருந்தார். சாப்பாட்டு வேளையாயிற்று. உணவுப் பதார்த்தங்கள் ஒவ்வொன்ருகச் சாப்பாட்டு மேஜைக்குக் கொண்டுவரப்பட்டன. ஆனுல், அஸ்லம் தனதில்லாளிடம், "இவ்விதமாக எத்தனை காலம்தான் மறைத்துக்கொண்டிருப்பாய்?" என்று கூறினுர். அதற்கவள் "மறைத்துக்கொண்டிருப்பாய்" என்றதற்கு உங்கள் கருத்தென்ன? என்று வினவினள்.

"நான் சங்கோஜமின்றிக்கலந் துறவாடும் எனது நண்பர்களது முன் நீயும் வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்பதாக அவளது முகத்தைக் கூர்ந்து பார்த்த வண்ணமாக அஸ்லம் கூறினுர்.

அதற்கவள் கோபமாக "எது? தாங்கள் இன்று உளறுகிறீர்களோ? பிரளயம் வந்தாலும் கூட நான் அன்னிய ஆடவர் முன் வரப் போவதில்லை" என்று கூறினுள்.

"அந்நிய ஆடவர் முன் வந்தாலென்ன நஷ்டமா?" என்ருர் அஸ்லம் புன் முறுவலுடன். அதற்கவள் சுளித்த முகத்துடன் "நஷ்டமில்லை, பாபம்தான். அதிலும் அந்தப்பாபத்திற்கு அளவுமில்லை" என்றனள். அதற்கவர் "பாபமா? மூட நம்பிக்கையா? உலகில் பாபம் என்பதே கிடையாது. ஆனுல் குடும்பம் எதைக் கெட்டதாக நினைக்கிறதோ அதுதான் பாபம்" என்ருர் அஸ்லம்.

அதற்கவள் சிறிது உரத்த சப்தமாக "குடும்பமா? கிடும்பமா? அதெல்லாம் ஒன்றுந் தெரியாது. மதம் எதைக்கெட்டது என்று கூறுகிறதோ அதுதான் பாபமானது என்பது என் அபிப்பிராயம்" என்றனள். இதற்குள் வெளியிற் சென்றிருந்த டிப்டி கலெக்டர் வந்துவிட்டதால் இருவரும் பேச்சை நிறுத்திக் கொண்டனர். அஸ்லம் தனது நண்பரை வரவேற்றுச் சாப்பாட்டறைக் கழைத்துச் சென்ருர். அப் பெண்மணி தனதறையில் குந்தி இருந்தனள். அஸ்லம் தனது நண்பருடனமர்ந்து உணவருந்தினுர். ஆனுல், தனது பத்தினி அளித்த பதில்கள் தனது மூளையைக்

கிறு கிறுக்கச் செய்துகொண்டிருந்தன வாத லால் அதில் சுவை ஏற்படவில்லை.

சில நாட்கள் வரை அஸ்லம் இதனைப்பற்றிப் பேசவில்லை. அப்பால் பர்தா வழக்கத்தை அனுஷ்டியாதிருப்பதால் ஏற்படும் நன்மைகளைப்பற்றிய பிரசுரங்களை அவளிடம் படித்துக் காண்பிக்கவும் சொல்லவும் ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அவள் அவைகளை அலக்ஷியமாகக் கேட்டுக்கொண்டிருந்தாளாயினும், சிறுகச் சிறுக அவளுக்கு அவைகளைப் படிப்பதில் சிரத்தை யுண்டாயிற்று. ஒரு இரவு அஸ்லம் யூனியன் கிளப்பிற்குச் சென்று திரும்பவந்ததும்,

"இன்று யூனியன் கிளப்பிற்கு எல்லோரும் தங்களது மனைவிமார்களுடன் வந்திருந்தனர். நான் மட்டிலும்தான் ஒன்றையாயிருந்தேன். இதனுல் எனக்கு வெட்கமும் ஏற்பட்டது. டிப்டி கலெக்டரும்கூட என்னைப் பார்த்து, "இவ்விஷயத்தில் அஸ்லம் துர்அதிர்ஷ்டவான் போலிருக்கிறது" என்றும் கூறிவிட்டார்,

என்பதாகக் கூறினர். அவள் இவ்வார்த்தைகளைக் கேட்டாளாயினும் பதில் கூறவில்லை. ஆனுல், அவளது செவிகளில் இவ்வார்த்தைகள் ஈயத்தை காய்ச்சி ஊற்றியதுபோலிருந்தன. என்ருலும், என் செய்வது? கணவனல்லவா?

இவ்வண்ணமாக அஸ்லம் பர்தா முறையை விட்டுவிடுவதைப்பற்றிச் சிறுகச் சிறுக பிரசாரம் செய்துகொண்டே இருந்து இறுதியாக தன்னிடம் சங்கோஜமின்றி வருகிற ஸ்திரீகளின் கணவர்கள் முன்னிலை அவளும் வரவேண்டும் என்று சம்மதிக்க வைத்துவிட்டார். ஆகவே, இதற்காக அவர் தமது நண்பர்களையும் அவர்களது பத்தினிகளையும் தமதில்லத்தில் விருந்துக்கழைத்தார். இவ்விருந்தில்தான் அவள் முதல் முதலாக அந்நிய ஆடவர்களுடன் கலந்துட்கார்ந்தனள். அவளது மெய் சிலிர்த்தது. வியர்வை கொட்டியது. வெட்கமும் வருத்தமும் அவளைத் தலைகுனியச் செய்தன. அங்கிருந்து அவளருந்திய ஒவ்வொரு கவாளமும் அவளது பிராணனைக் கவர்வன போலவே தோன்றின. எவ்வாற்ருலும் விருந்து முடிந்தது. நண்பர்கள் தங்கள் தங்களில்லஞ் சென்றனர். அஸ்லம் தனது பாரியாள் பர்தாவில்லாமல் தனது நண்பர்களுடன் வந்துட்கார்ந்த சந்தோஷத்தால் பூரித்துப்போயினர். அதிலும், அங்கு வந்திருந்த ஸ்திரீகளெல்லாம் தனதில்லாளைப் பார்க்கினும் அழகிற் சிறந்தவர்களாயில்லாதிருப்பதைப் பார்த்து இன்னும் அதிகமாக விம்மினர். நண்பர்கள் எல்லோரும் சென்றபின்னர் அஸ்லம் தனதில்லாளின் கரத்தைப் பற்றிக்கொண்டு,

"இன்றுதான் நீ எனக்குப் பூரணமான சந்தோஷத்தை யளித்தனை" இனி நண்பர்கள் என்னை துர் அதிர்ஷ்டவான் என்று குறை கூறமாட்டார்கள்"

என்று கூறினர். அதற்கவள் வெட்கத்தால் தலை குனிந்தவளாக,

"இன்று உங்களது சந்தோஷம் பூர்த்தியானதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்"

என்று முணுமுணுத்துக் கூறினுள்.

இச்சம்பவத்திற்குப் பின்னர் அஸ்லம் தனதில்லாளைத் தன் நண்பர்களிடம் சங்கோஜமற்றவளாக்கி விட்டார். ஆரம்பத்தில் அவள் வெட்கினுலும் நாளடைவில் அவை கொஞ்சங் கொஞ்சமாக மாறி அந்நிய ஆடவர்கள் நிறைந்த சபைகளில் கலகல வென்று சிரிக்கவும் தொடங்கினள். யூனியன் கிளப், சினிமா, டீ பார்ட்டிகள், கூட்டங்கள் முதலிய இடங்களுக் கெல்லாம் தன்னுடன் தனதில்லாளும் வருவது அஸ்லமுக்கு மிகுந்தானந்தத்தைக் கொடுத்தது. சில சமயங்களில் அவள் தனிமையிலும் கூட்டங்களுக்கும் கும்பல்களுக்கும் செல்லத் தொடங்கினள்.

அவ்வூரில் சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற ஹமீது என்ருேரிளவ னிருந்தனன். இவனுக்கு அஸ்லமிடம் சிநேகமில்லை யென்ருலும், யூனியன் கிளப்பிற்கு வரப்போக இருப்பதால் அறிமுகமிருந்தது. அஸ்லம் தனதில்லாளை அழைத்துவரத் தொடங்கியதிலிருந்து அஸ்லமுக்கும் ஹமீதுக்கும் சினேகமு முண்டாகவாரம்பித்தது. ஒருவருக்கொருவர் உபசார விருந்துகள் செய்துகொள்ளத் தொடங்கினர். அஸ்லமுடைய மனைவிக்கு ஹமீது பல முறைகளிலும் சில அபூர்வ சாமன்களை வெகுமதியாகவும் கொடுப்பதுண்டு. அஸ்லம்மேனுட்டு நாகரீகப்பித்துக் கொண்டவராதலின் அதனுடைய தீமைகளை யுணராதவராக யிருந்தார். அவர் ஒவ்வொருவரையும் தன்னைப்போல் களங்கமற்றவரென்றெண்ணிக் கொண்டு இருந்தார். ஹமீது தனது வலையை அதிகம் விரித்துக் கொண்டே இருந்தனன். ஆனுல், ஒன்றுமறியா அஸ்லம் இதன் அந்தரங்கத்தை யுணராதிருந்தார்.

தனதில்லாள் மற்றவர்களைப் பார்க்கினும் ஹமீதிடத்தில் அதிகமாக உரையாடுவதைப் பற்றி ஒறிரண்டு முறைகளில் சிறிது சந்தேகங்கொண்டார். தவிரவும், ஹமீதுடன் அவள் அடிக்கடி காற்றுக் குடிப்பதற்காக காரிலேரிச் செல்லுவதையும் கவனித்தார். ஆனால், இச்சந்தேகம் நீர் குமிழி போலுடன் மறைந்து விட்டது.

ஒரு நாள் யூனியன் கிளப்பிற்கு அவள் செல்லவில்லை. அஸ்லமும் ஹமீதும் பக்கத்திலுட்காருவது வழக்கம். ஹமீது தனது கோட் பாக்கட்டிலிருந்து சிகிரட் கேஸை எடுத்தான். அத்துடன் ஒரு புகைப்படமும் வெளியில் வந்தது. அதனை அவன் கவனிக்கவில்லையாதலால் அது தரையில் விழுந்தது. அதனை அஸ்லம் தனது காலால் எடுத்தார், தனதில்லாளின் புகைப்படமாக இருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தார். அதிலும், அவள் தனது பெயரைத் தன் கையால் எழுதிக் கொடுத்திருப்பதைப் பார்த்துத் திகிலடைந்தார். ரத்தமும் கொதித்தது.

முன்னர் அஸ்லமுக்கு ஏற்பட்ட சந்தேகம் செத்துப்போயல்லவா இருந்தது. இப்போது அது மறுபடியும் உயிர் பெற்றது. அவர் அங்கு கவலையுடன் வீற்றிருந்தார். பிறகு வீட்டிற்கு வரப்புறப்பட்டபோது ஹமீது அஸ்லமிடம் "நாளை சினிமாவிற்குச் செல்லவேண்டும் என்று பேகம் சாகிபாவிடம் சொல்லுங்கள்" என்றும் கூறினான். இது எரிகிற நெருப்பின் எண்ணெய் வார்த்தது போலிருந்தது அஸ்லமுக்கு. அஸ்லமுக்கு யாது செய்வதென்று புலப்படவில்லை. மண்டை கிறுகிறுத்தது. இருவருக்கு மேற்பட்ட இச்சிநேகத்தை எப்படித் தொலைப்பது என்பதற்கு வகையறியவில்லை.

ஒரு நாள் அந்திப் பொழுதில் அஸ்லம் வெளியிடம் சென்று குதிரைச் சவாரியில் திரும்பி வந்து கொண்டிருந்தனர். வழியில் அவரது வேலைக்காரன் துவிச்சக்கர வண்டியில் வேகமாகச் செல்வதைக் கண்டு, அவனை நிறுத்தி "எங்கே செல்கின்றாய் ?" என்று வினவினார். அதற்கவன் பதில் சொல்ல வகை யறியாது, திறுதிறுவென விழித்ததுடன் தனது ஜோபியில் போட்டிருந்த கடிதத்தை எடுத்து நீட்டினான். அக்கடிதத்தை வாங்கி அஸ்லம் பிரித்துப் பார்த்தபோது, அதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் கூறிய அம்பு போலவருள்ளத்தில் பாய்ந்தன.

பிரியமுள்ள காதல! தாங்கள் இரண்டு நாட்களாக ஏன் வரவில்லை. யான் மிகவும் கவலையடைகின்றேன். நேற்று உங்களது புகைப்படத்தைப் பார்த்து மனத்தைச் சாந்தப் படுத்தினேன். அல்லாவுக்காக நாளையேனும் அவசியம் வாருங்கள். உங்கள் நண்பர் அஸ்லம் வெளியிற் சென்றுவிட்டார்.

"தங்கள் அன்பிற்குரிய"
காதலி

என்று அக்கடிதத்தில் எழுதி இருந்தது. கோபத்தால் கண்களில் நெருப்புப்பொறி பறந்தன. நாடி துடித்தது. மிக வேகமாக அக்கடிதத்துடன் குதிரையை வேகமாக இட்டுக்கொண்டு வந்தார். தனதறையினுட் புகுந்து சுழல் துப்பாக்கியை எடுத்தார். தோட்டாக்களை வைத்து நிறப்பினார். சுழல் துப்பாக்கியும் கையுமாக தனதில்லாளின் அறையினுட் புகுந்தார். அங்கு அவள் காணப்படவில்லை. ஏவலாளர்களை அழைத்து விசாரித்ததில் தனதில்லாள் இப்பொழுதுதான் பீட்டனில் ஏறி வெளியிற் சென்றதாக அறிந்தார். அஸ்லமுடைய கண்ணுக்கு உலகமே இருளாகத் தோன்றிற்று. அவர்சாகவும், சாகவைக்கவும் விரும்பினார். ஆயினும் அதற்கு முடியவில்லை. மேஜையின் மீதிருந்த துண்டுக் கடுதாசியில்,

"பர்தா இல்லாததின் பயன். உன் குற்றமல்ல
என் குற்றமேயாகும்"

என்றெழுதி வைத்துவிட்டு தனது மார்புக்கு நேராகத் துப்பாக்கி முனையை வைத்துக் குதிரையைத் தட்டினார். வெடிச் சத்தம் கிளம்பியது. அரையினுள் புகை சூழ்ந்தது. ஏவலாளர்கள் ஓடி வந்தனர். அஸ்லம் ரத்தத்தினுள் பிணமாகிக் கிடக்கக் கண்டனர்.

நண்பர்காள்! பர்த்தா வின்மையினால் நேரிட்ட அபாயத்தைப் பார்த்தீர்களா? இவ்வாறு எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்று வருவதால் அன்பர்கள் ஜாக்கிரதையாக விருந்து கொள்வார்களாக.

மௌலானா ஸித்தீகி

இஸ்லாத்தின் உன்னத இலக்ஷியங்களை உயரிய முறையில் இதர சமூகத்திற்கு இனிதெடுத்துரைக்க கீழ்நாடுசென்ற நமது மௌலானா ஹிஸ் ஹோலினஸ் அல்லாமா ஹாபிஸ் காரீ முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள் ஜப்பான், சைனா, கொச்சின் சைன் முதலிய கீழ் தேசம் சென்று சிங்கை திரும்பி வந்து அங்கிருந்து கோலாலப்பூர், கிள்ளான் பினாங் மார்க்கமாய் S. S. ரஸூலா கப்பலில் நாகை வந்து சேர்ந்தார்கள். அங்கு பிரபலஸ்தர்களால் வரவேற்கப்பட்டு கூத்தானல்லூர் அழைத்துச் செல்லப்பட்டு, அல்ஹாஜ் ஜ. மு. முகம்மது இஸ்மாயீல் ராவுத்தர் அவர்களின் விருந்தினராகத் தங்கியிருந்தார்கள்.

அங்கு பெரியபள்ளியில் ஓர் மகாநாடு நடைபெற்றது. சின்ன பள்ளியில் திரளான ஜனங்களுக்கிடையே குத்பா ஓதி தொழுகை நிறைவேற்றினார்கள். பிறகு கூத்தானல்லூரைச் சேர்ந்த மரக்கடையில் அல்ஹாஜ் ஜ. மு. முகம்மது இஸ்மாயீல்ருவுத்தர் பஹதூர் அவர்களால் கட்டப்படப்போகும் மஸ்ஜிதுக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார்கள். அதுசமயம் மௌலானா அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கின் சாராம்சம் வருமாறு:—

சகோதரர்களே! சிற்ப சாஸ்திரம் நமது மூதாதையரின் சாஸ்திரமாகும. ஹஸ்ரத் இப்ராஹீம்(அலைஹி) அவர்கள் இவ்வுலகின் முதல் தேவாலயமாகிய கஃப்துல்லாவை எடுத்துக் கட்டிய காலத்தில் கட்டிட கொத்துவேலையைச் செய்தார்கள். அவர்களது அருமைப் புதல்வரான ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலைஹி) அவர்கள் அக்கட்டிட வேலையில் சித்தாள் வேலைப் பார்த்துவந்தார்கள். அவ்வமயம் அம்மஸ்ஜிதைப்பற்றி பிரார்த்தனை செய்தார்கள். "எங்கள் நாயனே, இவர்களுக்கு வேதத்தையும் விவேகத்தையும் கற்பித்து இவர்களை சுத்தப்படுத்தும்படியான ஒரு தூதரை இவர்களுக் குள்ளிருந்தே இவர்களிடம் எழுந்தருளச் செய்வாயாக," என்பது அந்தப் பிரார்த்தனைகளில் ஒன்றாகும். இப்பிரார்த்தனைக் கிணங்க அம்மஸ்ஜிதைக் கட்டும் வேலையில் சித்தாள் வேலைசெய்த ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலைஹி) அவர்களது சந்ததியில் நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை இறைவன் உற்பவித்தான். இப் பெருமகர் அவர்களது பொருட்டால் தான் இன்றைய உலகில் ஏக தெய்வ வணக்கத்திற்குறிய ஞான சுடர் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. எனவே ஹஸ்ரத் இப்ராஹீம் (அலைஹி) அவர்களது வம்சத்திலுதித்த எனக்கு இம்மஸ்ஜிதின் அஸ்திவாரமிடும் பாக்கியம் கிடைத்தமைக்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். என்னுடைய இச்சுற்றுப்பிரயாணத்தில் ஷாங்ஹேயில் ஒரு அனாதைச் சாலைக்கும், ஜப்பானிலுள்ள நாகோயாவில் ஒரு மஸ்ஜிதுக்கும் அஸ்திவாரக்கல் நாட்டியிருக்கிறேன். சிலரது சொத்துக்களின் மீது அல்லாஹுத் தஆலாவுக்கு அதிகப் பிரியம் ஏற்பட்டுவிடுகிறபடியால் அவர்களுள்ளத்தில் இப்படிப்பட்ட நற்காரியங்களைச் செய்வதற்கான ஆசையை இறைவன் உண்டாக்கி விடுகின்றான். ஆகவே அவர்கள் மஸ்ஜிது கட்டுவதுபோன்றே தர்மகைங்கரியங்களிலும் தங்களது பொருளை தாராளமாக செலவு செய்ய முன்வந்து விடுகின்றனர். மற்றவர்களுக்கு அப்படிப்பட்ட அருள் ஏற்படுவதில்லை. ஆகவே, இவ்வாறான காரியங்களில் ஈடு படுவது அவ்வல்லோனின் அநுக்கிரஹமேயாகுமென்று கூறி, புதிதாக கட்டப்படுகிற இம்மஸ்ஜிதில் அவனது நல்லடியார்கள் எக்காலமுமிருந்து வணக்கம் புரிய பேரருள் புரிய வேண்டுமென இறைவனிடம் பிரார்த்தனை செய்த பின் அஸ்திவாரக்கல் நாட்டு விழாவை சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

பின்னர், கூத்தாநல்லூரிலிந்து பிரயாணமாகி கொல்லாபுரம், காரைக்கால், நாகூர், நாகப்பட்டணம் முதலிய ஊர்களுக்குச் சென்று ஆங்காங்கு அரிய சொற் பொழிவு நிகழ்த்தி விட்டு சென்னை வந்து சேர்ந்தார்கள். இங்கு பல பிரமுகர்களால் குதூகலமாய் வரவேற்கப்பட்டு நம் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" விருந்தினராய் தங்கி முறையே முத்தியால்பேட்டை வாலாஜா

மஸ்ஜித மஅமூர் ஜும்ஆப்பள்ளியிலும், ஈத்காஹ் மஸ்ஜிதிலும் "ஜப்பானில் இஸ்லாம்" என்ற பொருள்பற்றி இரண்டு அரிய உபந்நியாசம் புரிந்தார்கள். இவ்விரு கூட்டங்களுக்கும் பல ஆயிரக்கணக்கான முஸ்லிம் மகா ஜனங்கள் விஜயஞ் செய்திருந்தனர். இந்தியா சட்டசபை அங்கத்தினரும் பிரபல முஸ்லிம் தலைவருமான ஆலி ஜனுப் மௌலானு மௌலவீ சையித் முர்த்தஜா சாஹிப் பகதூர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தலைவர் மௌலானு மௌலவீ ஸையிது முர்த்தஜா சாகிப் பகதூர் அவர்கள் முன்னுரையாகப் பேசுகையில், இத்தகைய மார்க்க உபன்யாசக் கூட்டங்களுக்கு தலைமை வகிப்பதற்கு ஒருவரைத் தெரிந்தெடுக்க வேண்டிய அவசியமில்லை என்பது தமது அபிப்பிராயமாயினும், தம்முடைய நண்பர்கள் தம்மை இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படியாகப் பன்முறை கேட்டுக்கொண்டதால் தாம் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டதாகவும், மௌலானு அவர்களது பிரசங்கத்தைப்பற்றி போதுமான அளவிற்கு அறிக்கை செய்திருந்தால் சென்னையிலுள்ள முஸ்லிம்கள் இன்னும் அதிகமாக திரண்டு வந்திருப்பார்கள் என்றும் தெரிவித்துக் கொண்டதுடன், நம்மவரில் மௌலவீமார்கள் அதிகமாகஇருக்கிறுர்களாயினும் தன்னடக்கம், பிரசங்க மாற்றல், விஷய ஞானம், நவ நாகரீகத்தைப்பற்றிய அறிவு, முற்போக்கு, பல பாஷையிலும் பாண்டித்துவம், சரித்திர ஞானம் முதலிய சகல விஷயங்களிலும் வேண்டிய அளவிற்கு ஆற்றலுள்ளவர்கள் மிகவும் சுருக்கமென்றும், மௌலானு அவர்கள் அப்படிப்பட்ட ஆற்றல்களை நிறம்பப் பெற்றவர்களென்றும், மௌலானு அவர்களை சென்னை வாசிகள் நன்கு அறிந்திருப்பதால் அவர்களைப் பற்றி அறிமுகம் செய்து வைப்பதில் காலதாமம் செய்ய தாம் விரும்பவில்லைஎன்றும் கூறி மௌலானு அவர்களைப் பிரசங்கம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

மௌலானு அவர்களது பிரசங்கம்

சகோதரர்களே! சுமார் 7 மாதங்களுக்கு முன் உங்களிடை பிரசங்க மாற்றியகால் இஸ்லாமியப் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் நான் ஜப்பான் தேசம் செல்வதாகவும், எனது இந்நோக்கம் சித்தியடைய வேண்டும் என்பதற்காக இறைவனிடம் துஆச் செய்யும்படியாகவும் உங்களை கேட்டுக் கொண்டேன். உங்களது பிரார்த்தனையை இறைவன் அங்கீகரித்துக் கொண்டான். எனது ஸ்தூல நிலைமை ஜப்பான் சென்று வர இடம் கொடுத்தது அந்த வல்லோனின் அனுக்கிரகமே யாகும். 'நபியே நிச்சயமாக நாம் உம்மை ஜனங்கள் அனைவருக்குமாக அனுப்பி இருக்கிறோம்" என்பதாக இறைவன் நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை குறித்துக் கூறி யிருக்கின்றுன்.

இந்த இடத்தில் நான் உங்களுக்கு எவரையும் குறிப்பிடாமல் பொதுவான ஒரு உதாரணம் கூறுகிறேன். ஒரு ஊரில் காலரா அல்லது பிளேக் அல்லது விஷஜுரம் பரவுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அரசாங்கத்தார் அக்குறிப்பிட்ட வியாதிக்குச் சிகிச்சை செய்வதில் கைதேர்ந்த நிபுணரை நியமித்து அந்த வியாதி அதிகமாக பரவவிடாமல் தடுக்க முயலுவதை நாம் பார்க்கிறோம். இதுபோல அல்லாஹுதஆலா தனது சிருஷ்டிகளாகிய மனிதரிடத்தில் ஆத்ம வியாதிகளில் ஏதேனும் ஒன்று அதிகமாகப் பரவும்போது அந்த வியாதிக்குத் தக்க வைத்தியர்களை அங்கு அனுப்பி வைக்கிறுன். உதாரணமாக,

மூஸா (அலை) அவர்களை எடுத்துக் கொள்வோம். பிர்ஔன் என்பவன் தன்னை நாயன் என்று தாவாச் செய்து கொண்டிருந்ததுடன், பனீ இஸ்ருயீல்களை அதிகமாகக் கஷ்டப்படுத்தி வைத்திருந்தான். ஆகவே பிர்ஔனை சீர்திருத்தவும், அவனை அடக்கி பனீஇஸ்ருயீல்களை விடுதலை செய்யவும் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அப்பால் அவர்கள் பிர்ஔனை விட்டு விடுதலை யடைந்து ஷாம் தேசத்தில் ஆட்சி புரியும் ஜனங்களாக மாறிய பின்னர் உலக இன்பத்தில் மூழ்கி இறைவனையே அடியுடன் மறப்பவர்களானுர்கள். ஆகவே, இவ்வுலகத்தில் பற்றுக் கொள்ளலாகாது என்பதைப் போதிப்பதற்காக ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் அனுப்பினுன். இவர்கள் வீடுவாசல்கள் கூட இல்லாதவராகவும் விவாகம் செய்யாதவராகவும் இருந்ததுடன் உலகப் பற்றற்றிருப்பதைப் பற்றியே அதிகம் போதித்தார்கள். ஆகவே ஜனங்களிடம் இருக்கிற வியாதிக்குத் தக்கவாறு அவர்கள் சிகிச்சை செய்தனர். எனவே, இதர நபிமார்கள் குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தாருக்கு நபியாக அனுப்பப்பட்டதால் அவர்கள் குறிப்பிட்ட வியாதிக்கு தக்க சிகிச்சை செய்வதில் நிபுணர்

களாக இருந்தனர். ஆனால், நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் குறிப்பிட்ட ஒரு தேசத்தாருக்கோ சமூகத்தாருக்கோ மட்டிலும் நபியாக இல்லாமல் உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் நபியாக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் ஆத்ம வியாதிகள் எல்லாவற்றிற்கும் தக்க சிகிச்சை செய்வதில் நிபுணராக இருக்கிறார்கள்.

மேலும் முற்காலத்தில் ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் போக்கு வரத்துச் சம்பந்தமிருக்கவில்லை. ஒவ்வொரு தேசமும் தனித்தனி நாடாகவே இருந்தது. ஆதலின் அக்காலத்தில் தனித்தனியே ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு நபி அவசியமாக இருந்தது. அப்பால் ஒவ்வொரு தேசமும் பிறநாடுகளுடன் சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டு அப்படியான சம்பந்தமுமேற்பட்டுக் கொண்டிருந்ததால் ஒரு நாட்டில் நிகழும் காரியம் மற்றைய நாடுகளுக்கும் எட்டுவதற்கு ஹேதுக்களிருந்ததால் உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் பொதுவான ஒரு நபி இருந்ததே போதுமானதாகிவிட்டது. ஆதலின், இறைவன் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உலக மகாஜனங்களுக்குப் பொது நபியாக அனுப்பியுள்ளான். தவிரவும், இக்காலத்தில் ரேடியோ வசதிகளெல்லாம் ஏற்பட்டு விட்டமையால் இங்கிருந்து பேசும் செய்திகள் எல்லாம் உலகமெங்கும் மிகவும் சீக்கிரத்தில் பரவிவிடக் காரணமாக இருக்கிறது. ஆகவே, இது போழ்து ஒவ்வொரு தேசத்திற்கும் தனித்தனியே வெவ்வேறு நபிமார்கள் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. தவிர நாம் மோட்டார் தொழிலை எடுத்துக் கொள்வோம். மோட்டார்கார் ஒன்றை நாம் வாங்குவோமாயின் அதனை எப்படி ஓட்டவேண்டும் என்ற விஷயம் நமக்குத் தெரிவதில்லை. ஆதலால், அம்மோட்டாரைச் செய்தவர்களே அதனை ஓட்டுவதற்கும், ரிபேர் செய்வதற்குமான முறைகளைப் பற்றிய குறிப்புகள் எழுதப்பட்ட புத்தகத்தைப் பிரசுரிக்கின்றனர். அதுவும் போதாதென்று அப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளபடி நம்மிடம் பிரத்தியக்ஷமாக ஓட்டி காண்பிப்பதற்காகவும் இஞ்ஜினீர்களையும் அனுப்பி வைக்கிறார்கள். இதனால்தான் நாம், மோட்டார் டிரைவர்கள் எங்கேனும் பயிற்சி பெற்றிருக்கிறார்களா என்பதை உணர்ந்து கொள்வதற்காக அவர்கள் சர்ட்டிபிகேட் பெற்றிருக்கின்றனரா வென்பதை கவனிக்கிறோம். சர்ட்டிபிகேட் பெற்றவர்களை யல்லாமல் மற்றவர்களை நாம் நியமிப்பதில்லை. எனெனில், 4000 அல்லது 5000 ரூபாய் செலவு செய்து வாங்கிய மோட்டார் இஞ்ஜினை அவர்கள் கெடுத்து விடுவார்கள் என்றஞ்சுகிறோமல்லவா? இது போலவே இறைவன் சிருஷ்டித்துள்ள இஞ்ஜினாகிய மனிதன் கெட்டுப்போவதை அவன் விரும்புவதில்லை. ஆகவே இஞ்ஜினை நடத்துவதற்காக இஞ்ஜனீர்களான நபிமார்களையும் அதனை நடத்தும் முறை எழுதப்பட்ட புத்தகங்களாகிய வேதங்களையும் இறைவன் நமக்கருளியுள்ளான்.

ஆகவே, மனிதன் என்ற இஞ்ஜினை ஓட்டும் முறையைக் கற்பிக்கவந்த இன்ஜினீயரான நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களாகிய நம்மை தங்களது ஏஜெண்டுகளாக உலகமெங்கும் நியமித்துள்ளார்கள். தவிரவும் இறைவனும் தனது திருமறையில், "நீங்கள் சிறந்த வர்க்கத்தினராவீர்கள். மனிதர்களுக்காக நீங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள். (ஜனங்களை) நீங்கள் நன்மையைக்கொண்டு ஏவித் தீமையை விட்டு விலக்கும்படியான கூட்டத்தினர்" என்று கூறி எல்லா ஜனங்களுக்கும் நன்மை தீமையைப் பற்றி அறிவிக்கும்படியான பொறுப்பை நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உம்மத்துகளாகிய நம்மீது சுமத்தியிருக்கிறான். ஆகவே நாம் அல்லாஹ் தஆலாவின் பட்டாளத்தார்களாவோம். அவனது பட்டாளத்தார்கள் தான் மிகைத்தவர்கள். ஆதலின் நம் இஸ்லாமியப் பிரசாரவேலையில் எங்குசென்றாலும் நிச்சயம் வெற்றியடைவோம். இக்காலத்திலுள்ள அரசாங்கத்துப் பட்டாளத்தாருக்கு கவாத்துச் செய்தல், ஒரே விதமான உடை யணிதல் போன்ற சில முக்கிய விதிகளிருப்பதுபோல அல்லாஹ்வின் பட்டாளத்தாராகிய நமக்கும் தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு ஈமான் போன்ற முக்கிய கிரியைகளும் கொள்கைகளும் அவசியமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, நமது முக்கிய லக்ஷியம் தொழுகை முதலிய இக்கிரியைகளுக்குள் மட்டிலுமில்லாமல் ஜனங்களிடம் இஸ்லாமியப் பிரசாரத்தைச் செய்து மனித இன்ஜினை கெட்டுப்போகாமல் எவ்விதம் ஓட்டவேண்டும் என்ற முறையை அவர்களுக்குக் கற்பிப்பதுதான். எனவே, நாம் இவ்வைந்து கிரியைகளைமட்டிலும் செய்துகொண்டு வாளாவிருந்து விடுவோமாயின் நாளை கியாமத்தில் நம்மை இறைவன் அவசியம் கேள்வி கேட்பான்,

அதற்காக நாம் தண்டிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, அவ்வித கடமையைக் கருதியே யான் இஸ்லாமியப் பிரசாரம் செய்து வருகிறேன். அல்லாஹுத ஆலாவினது கட்டளைகள் எங்கெங்கு சரியாக அறிவிக்கப்படவில்லையோ அங்கெல்லாம் சென்று என்னாலானவரை அக்கடமையைச் செய்து வருகிறேன்.

ஆகவே, யான் சிறு வயது முதலாகவே, இக்காரியத்தில் கண்ணும்கருத்துமாக ஈடுபட்டு வருவதால் இந்த இடத்தில் ஒரு சம்பவத்தைக் கூற விருப்புகிறேன். என்னுடன் காலேஜில் வாசித்த ஒரு நண்பர் ஹைதராபாதில் உத்தியோகம் வகித்து வருகிறார். மற்றொருவர் சீமைக்குப் படிக்கச் சென்றார். யான் இஷாஅத்தே இஸ்லாம் நிமித்தமாக வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தேன். இவ்வித நிலைமையில் சீமைக்குச் சென்ற நண்பர் படிப்பை முடித்துக்கொண்டு திரும்பி வந்த சமயம் ஹைதராபாத்தில் உத்தியோகம் பார்க்கும் நண்பரைக் கண்டு பேசும் சந்தர்ப்பம் வாய்த்தது. அதுபோழ்து அவ்விருவரும் என்னைப்பற்றி பேசிக்கொண்டபோது சீமைக்குப்போய் வந்தவர் ஹைதராபாத் உத்தியோகஸ்தரிடம் 'அந்த மீரட் முல்லா எங்கே தெரியுமா? என்று வினவினார். அதற்கவர் "அவர் அந்தப் பழைய சங்கதியிலேயே எங்கேயோ சென்றுவிட்டார் தெரியவில்லை" என்பதாகப் பதில் கூறினார். அதற்கவர் "பைத்தியம் பிடித்த ஆசாமி" என்பதாக என்னைக்குறித்துச் சொன்னார். பிறகு தற்செயலாக யானும் ஹைதராபாத் செல்ல நேர்ந்தபோது, அங்கு எனது நண்பரான அந்த உத்தியோகஸ்தரைச் சந்தித்தேன். அப்பொழுது அவர் எனக்கு மேற்கண்ட சம்பாஷணையைக்கூறி சீமைபோனவர் திரும்பி வந்திருப்பதாக அறிவித்தார். ஆகவே நாங்களிருவரும் அவரைப் பார்க்கச் சென்றபோது அவர் எங்களை வரவேற்று உபசரித்து முகமன் கூறி எனது க்ஷேமலாபத்தை விசாரித்தார். அதற்கு நான் "பைத்தியக்காரனிடம் க்ஷேமலாபம் விசாரிப்பானேன்" என்றேன்.

அப்பொழுது அவர் என்னுடைய மற்றொரு நண்பரைக் கோபித்துக் கொண்டதுடன் "நாமிருவரும் பேசிக்கொண்டதை அவரிடம் கூறலாமா? அவர் பைத்தியக்காரர் என்று நான் கூறியதற்கு வருத்தப்படுகிறாரே" என்று என்னைக் குறித்துக் கூறினார். அதற்கு நான், "எனக்கு வருத்தமே இல்லை, இப்படிப்பட்ட வார்த்தை கூறுவதை நான் வரவேற்கிறேன். உலகம் முழுவதும் என்னுடைய இப்பிரசார வேலையைக் குறித்து என்னை பைத்தியக்காரன் என்று கூறினாலும் எனக்கு இன்னும் அதிகச் சந்தோஷமாகும். ஏனெனில் "உன்னைக் குறித்து பைத்தியக்காரன் என்று சொல்லப்படும்படியாக நீ உனது றப்பை ஞாபகம் செய்" என்பதாக வள்ளல் ஹபீப்(ஸல்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள்" என்று பதில் கூறினேன்.

எனவே, இப்படிப்பட்ட எனது ஆர்வத்தின் மேலீட்டால் இஸ்லாமியப் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் யான் ஜப்பான் சென்று வருகிறேன். அங்கு யான் எனது வேலையை எப்படி ஆரம்பித்தேன்? எப்படிச்செய்தேன்? என்பதைப்பற்றிக் கூறுவதற்கு முன் அங்கு போய்ச் சேருவதற்கு முந்தி யான் சீனாவில் கண்ட விஷயங்களைக் கூறுகிறேன்.

தென் சீனாவின் தலை நகரான கான்டனில் இறங்கியபோது அங்கு பஞ்சாப் முஸ்லிம்களைத்தான் முஸ்லிம் என்ற அடையாளத்தில் பார்த்தேன். மற்றைய சீன முஸ்லிம்களுக்கு மார்க்க அறிவோ, மார்க்க அனுஷ்டானமோ ஒன்றும் தெரியாது. அங்குள்ள ஒரு குன்றின் மீது ஸஅதுப்னு அபீவக்காஸ் (றலி.) அவர்களது கப்று இருப்பதாகக்கேள்விப்பட்டு யான் ஆச்சரியமடைந்து அங்கு சென்றேன். ஏனெனில், இவர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு மாமு முறையிலுள்ள பந்துவாகவும், "அஷரத்துல் முபஷ்ஷரா"வில் ஒருவராகவும், பாரசீக ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதற்கு சென்ற வீரர்களின் பிரதம தளபதியாகவு முள்ளவர். "இவர் இங்கே எப்படி வந்தார்? இது பெரும் பொய்யாகவன்றோ இருக்கிறது?" என்று நினைத்து அங்கு சென்றபோது அந்த கப்ரில் "இது ஒரு ஸஹாபியின் கப்று" என்பதாக எழுதப்பட்டிருந்தது. அங்கு ஒரு மஸ்ஜிதும், மத்ரஸாவு மிருக்கிறது. அம்மஸ்ஜிது கட்டிடத்தை கவனிக்கும்போது சுமார் 400, 500 வருஷங்களுக்கு முன் இக்கட்டிடம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று தெரியவந்தது. ஆகவே, அங்கு அடக்கப்பட்டிருப்பவர் ஸஹாபியன்று; வலிமார்களில் எவரேனும் ஒருவராக இருக்கலாம் என்று கருதுகிறேன்.

பிறகு மத்ரஸாவைப் பார்க்கபோனால் அங்கு "தீனிய்யாத்" என்பது கிடையாது. சீனப் பாஷை மட்டிலும் 4-வது வகுப்பு வரை

போதிக்கப்படுகிறது. அதுவும் சீன அரசாங்கம் கட்டாயக் கல்வியை ஏற்படுத்தி விட்டதால் அதனை முஸ்லிம்கள் கற்கின்றனர். தொழுவதற்கு யாரும் வருவதில்லை. அங்குள்ள மௌலவீ சாஹிபைப்பற்றி விசாரிக்கும்போது அவர் அர்பயீன்ஹதீது ஓதியவராக தெரிந்தது. இதற்குமேல் அதிகம் ஓதவில்லை. அங்குள்ள முஸ்லிம்களில் 50 சத விகிதம் கலிமா ஓதத் தெரியாதவர்கள். அவர்களுடைய இஸ்லாமியப் பெயர் யாது என்று விசாரித்தால் ஞாபகமில்லை, தாயாரைக் கேட்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஷாங்ஹேய் என்ற இடத்தில் ஒரு முஸ்லிம் பத்திராதிபர் $1\frac{1}{2}$-மைல் நீளமுள்ள ஊர்வலத்துடன் என்னை ஆடம்பரமாக வரவேற்றார். அவருக்கும்கூட அவரது மாதா பிதாக்கள் வைத்த இஸ்லாமியப் பெயர் தெரியவில்லை. இவ்வித நிலைமை தென் சீனாவிலும், மத்திய சீனாவிலுமிருந்து வருகிறது. வடசீனாவில் சில தாத்தாரியர்கள் இருப்பதால் அவர்களுக்கு மார்க்கக் கல்வி புகட்டுவதற்காக மிஸ்ரிலிருந்து 2-ஆலிம்கள் அனுப்பிவைக்கப்பட்டனர். இப்படிப்பட்ட முஸ்லிம்களிடம் இந்த ஆலிம்கள் யாது செய்ய முடியும்? இதனால்தான் சீனாவில் 7-8 கோடி முஸ்லிம்களிருந்தும் ஜப்பானில் இஸ்லாமியப் பிரசாரம் செய்ய தகுதியற்றிருக்கின்றனர்.

ஆகவே, எனது ஜப்பானியப் பிரசாரத்தில் சீன முஸ்லிம்களைக் கொண்டு எவ்வித உதவியையும் அடைவதற்கில்லை என்ற மன வருத்தத்துடன் ஜப்பான் சென்றேன். ஜப்பான் தேசத்தில் 180-வருஷங்களுக்கு முன் ஒரு சத விகிதம்கூடப் படித்தவர்களில்லை. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் அங்கு படிக்கமுடியும். மற்றவர்களுக்கு அந்த உரிமை இல்லை. ஜப்பான் பாஷைக்கு ஆதியில் அக்ஷரம்கூடக் கிடையாது. சீன பாஷைக்குள்ள அக்ஷரத்தையே அவர்கள் தங்கள் பாஷைக்கு அக்ஷரமாக எடுத்துக்கொண்டு இரண்டொரு சிறிய மாறுதலைத் தங்கள் பதத்திற்கேற்றவாறு மாற்றிக்கொண்டிருக்கின்றனர். பின்னர் யாவருக்கும் கல்வியில் அனுமதி கொடுக்கப்பட்டது. இவ்வித அனுமதி கிடைத்து இற்றைக்கு 80 வருஷங்களுக்கு அதிகமில்லை. ஆனால் இப்பொழுதோ அவர்களது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. என்னை கோபிலுள்ள ஒரு காலேஜில் பிரசங்கம் செய்வதற்கு மாலை 6-மணிக்கு அழைத்திருந்தனர். அங்கு சென்று நான் பார்த்தபோது 3-அல்லது 4-ஆயிரம் பேர்களுக்குக் குறையாமலிருந்தனர். இவர்களில் வயோதிகர்களும் இளைஞர்களும்கூட இருந்தனர். இதனைப் பார்த்து நான் பொதுக்கூட்டம் என்றுதான் நினைத்திருந்தேன். பின்னர் அக்காலேஜ் அதிகாரிகளை விசாரித்தபோது அது ஒரு இரவு கலாசாலை என்றும், பகலில் தொழில்களுக்குச் சென்றவர்கள் படிப்பதற்காக இரவில் கல்வி போதிக்கப்படுவதாகவும் அங்கு குழுமி இருந்தவர்களனைவரும் மாணவர்களென்றும், படிப்பிக்கும் நேரத்தில் பாடத்தை நிறுத்திவிட்டு அவர்கள் எல்லோரையும் காலேஜ் ஹாலில் ஒன்று சேர்த்து வைத்ததாகவும் கூறினார்கள். இந்த இராக் கல்லூரியில் விஞ்ஞான சாஸ்திரம் ரசாயன சாஸ்திரம் பௌதிக சாஸ்திரம் முதலியவைகளில் ஆராய்ச்சி செய்யும் வேலையும் நடைபெற்று வருகிறது. எனவே, அங்கு இப்பொழுது எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் ஒருவர்கூட இல்லை. தவிர அங்குள்ள ஜனங்களிடம் போட்டி கிடையாது. நாம் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி வெளியில் வரும்போது குதிரை வண்டிக்காரர்களும் மற்ற கூலிகளும் ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு முந்திவருவதுபோல் அவர்கள் அப்படி வருவதில்லை. நாம் ஒருவரிடம் சென்று வண்டி விசாரித்தால் அதனைப் பார்த்துக்கொண்டே மற்றவர்கள் சும்மா இருந்துவிடுவர். எனவே, சிறிய கூலிக்காரர் முதல் பெரிய கம்பெனி முதலாளிகள்வரை எவ்விதப் போட்டியும் சச்சரவுமில்லை. அங்குள் சிறு குழந்தைகள்கூட ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதில்லை. அங்குள்ள ஆடவர்களெல்லோரும் ராணுவ சேவை செய்பவர்கள். ராணுவச் சேவைக்குப் பிறகு தொழில் செய்பவர்கள். ஸ்திரீகள் எல்லோரும் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். ஒருநாளில் ஒரு முறையே சமயல் செய்யப்படுகிறது. அதுவும் சாமான்ய உணவே யாகும். காலையில் புருஷனும் மனைவியும் அதனை உண்டு விட்டுக் கொஞ்சம் உணவை எடுத்துக்கொண்டு இருவரும் அவரவர் அலுவல் பார்க்கச் செல்கின்றனர்.

இடைவேளைக்கு அவரவர் தொழிற்சாலையிலேயே தாங்கள் கொண்டுபோன உணவை உட்கொள்ளுகின்றனர். மாலையில் வந்ததும் வீட்டில் எஞ்சியுள்ளதை அருந்திக் கொள்ளுகின்றனர். இதனால் அவர்களுக்கு வேலை செய்வதற்கு அதிக நேரம் கிடைப்பதுடன் அதிகமான வேலை செய்யவும் வசதியாக இருக்கிறது. செல

வும் மிகக் குறைவு. மேலும், ஜப்பான் போட்டியைத் தாங்க முடியாமல் ஐரோப்பியரும் கூடத் திணறுவதை நாம் நமது தேசத்திலும் அறிந்திருக்கிறோம். இதனைக் குறித்து விசாரித்தமட்டில் அங்குள்ளவர்கள் லாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகம், தொழில் முதலியவைகளைச் செய்யவில்லை. வேலைசெய்யாமல் சோம்பேறியாக இருக்கக் கூடாது என்பதற்காக தொழில் செய்கின்றனர். மற்றவர்களோ திரண்ட செல்வத்தை சம்பாதிக்கவே வியாபாரம் செய்கின்றனர். இதனால்தான் அவர்களது போட்டியைச் சமாளிப்பது நமக்கு மிகக் கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் பொய் பேசுவதில்லை. மோசம் செய்வதில்லை. ஏமாற்றுவதில்லை.

முதல் முதலாக உண்டாக்கப்பட்ட பூமி தங்கள் தேசம் என்பதும் அங்குள்ள ஜனங்களை கவனிப்பதற்காக சூரியன் தனது புதல்வனை அனுப்பியிருப்பதாகவும், அந்தச் சூரியனின் சந்ததியிலேயே அவர்களது அரசர் தோன்றி யிருப்பதாகவும் அவர்கள் கருதிக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, அவர்களுக்கு அவர்களது அரசன் முதல் முன்னோர்களில் சென்று போனவர்கள் ஒவ்வொருவரும் தேவதைகளாகவும், கடவுள்களாகவும் இருக்கிறார்கள். தாய்க்கு ஒரு கடவுள், மகளுக்கு ஒரு கடவுள் என்றும், நடப்பதற்கு ஒரு கடவுள் உட்காருவதற்கு ஒரு கடவுள் என்பதாக அவர்கள் ஒவ்வொருவருக்கு 150, 200 கடவுள்களுக்குக் குறைவில்லாமல் இருக்கின்றனர். இப்படிப்பட்ட கொள்கையுள்ளவர்கள் அங்கு 70 சதவிகிதம் இருக்கிறார்கள். இவர்களது மதத்திற்கு "ஷின்டோயிஷம்" என்று பெயர். பாக்கியுள்ளது புத்தமதம். ஆனால் அசல் புத்தமதமன்று. அங்குள்ள புத்தர்கள் ஷிண்டோ மதக்கோவிலுக்குச் சென்று வணங்குவார்கள். ஷிண்டோ மதக்காரர்கள் புத்த மதக் கோவிலுக்குச் சென்று வணங்குவார்கள். ஆனால் வெளியில் மாத்திரம் புத்த மதம், ஷிண்டோ மதம் என்று கூறிக் கொள்வார்கள்.

எனவே, இவர்களிடம் வேறு மதத்தைப்பற்றிப் பிரசாரம் செய்வதானது ராஜதுரோக குற்றத்திற்கு ஒப்பாகவே இருக்கிறது. ஏனெனில் அவர்கள் தங்கள் அரசரைக் கடவுளின் புதல்வரென்றும் தெய்வம் என்றும் கொண்டாடுகின்றனர். அந்த மதத்தைவிட்டு வேறு மதம் சேர்ந்தால் அரசரைத் தெய்வமெனக் கொண்டாட முடியாது. இதனால்தான் போர்த்துக்கீசியர் 500-வருஷங்களுக்குமுன் அங்கு சென்று கிறிஸ்துவப் பிரசாரத்தை செய்து சிலரைக் கிறிஸ்துவராக்கியபோது அந்தக் கிறிஸ்துவர்களனைவரையும் அவ்வரசாங்கம் தேசப் பிரஷ்டம் செய்து ஒரு தீவில் பாதுகாப்பில் வைத்து விட்டது. இப்பொழுது அந்த வம்சத்தில் பிறந்தவர்கள் இருந்தாலும் அவர்கள் தங்களை கிறிஸ்துவர்களின் சந்ததியினர் என்று கூறிக்கொள்வார்களேயன்றி அம்மதத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. எனவே, அமெரிக்கர் அங்கு மதப்பிரசாரம் என்று பெயர் சொல்லாமல் கல்லூரி கட்டுவதாகவும், ஆஸ்பத்திரி வைப்பதாகவும் கூறிக்கொண்டு சிறுகச் சிறுக கிறிஸ்துவப் பிரசாரத்தைச் செய்கின்றனர். நூற்றுக்கணக்கான கோடித் திரவியத்தை அவர்கள் இதுவரை செலவு செய்தும் 500 பேர்களை உண்மைக் கிறிஸ்தவர்களாக்கிவிட முடியவில்லை. இவ்வித நிலைமையில் எந்தக் கடவுளையும் கும்பிடக்கூடாது. அல்லாஹ் ஒருவனைத்தான் வணங்கவேண்டும் என்ற வாக்கியத்தை நாம் கூறியவுடனேயே இது அராஜகம், இரகசியப் போலீசார் பிடித்துக்கொள்வர் என்று ஜப்பானியர் பயப்படுகின்றனர் என்றாலும் யான் இவர்களில் பல பிரபலஸ்தர்களை இஸ்லாத்தில் சேர்ந்து வெற்றி பெற்றேன்.

இதனை யல்லாமல், ஜப்பான் சக்கிரவர்த்தி இஸ்லாத்தைத் தழுவப் போகிறார். அங்கு வெகு முறுக்காக இஸ்லாம் பரவி வருறகிது. அரசாங்கம் இஸ்லாம் மதத்தை அங்கீகரித்திருக்கிறது என்றெல்லாம் பத்திரிகைகளில் வரும் செய்தி சுத்த ஹம்பக்கே யாகும். பணம் சம்பாதிப்பதற்காகச் சில சூழ்ச்சிக்காரார்கள் இதனைக் கயிறு திரித்து விடுகின்றனர். இங்குள்ளவர்கள் வியாபாரத்தின் நிமித்தமாக அங்கு வசிக்கிறார்கள். அவர்கள் "இன்டியன் கிளப்" என்பதாக கோபில் ஒரு சங்கத்தை வைத்திருக்கிறார்கள். அங்கு ஈதுப் பெருநாள்களில் அவர்கள் கூடுவதும் நாஷ்தாச் செய்வதும்தான் அவர்களது வேலை. பிறகு போல்ஷ்விக் இயக்கத்திற்குப் பயந்து சென்ற சில தார்த்தாரி முஸ்லிம்கள் மார்க்க பக்திகொண்டு டோகியோவில் ஒரு மஸ்ஜிதுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதிலும் 5-வேளை பாங்கு, இகாமத்து இல்லை. ஜும்ஆவில் தொழுகை நடைபெறுகிறது. இதனைதவிர ஒரு ஆரம்ப பாடசாலையும் இருக்கிறது. அம்மஸ்ஜிதுக்கு பேஷ் இமாமாக இருப்பவர் தொழுக

வைக்கும் சமயம் தலைப்பாகை அல்லது தொப்பி அணிந்து கொள்வார். மற்றைய சமயம் ஹேட் அணிந்து கொள்வார். அவரை முஸ்லிம் என்று கூட அடையாளம் கண்டு பிடிக்க முடியாது,''

என்று கூறி மௌலானா அவர்கள் இரவு 12-மணிக்கு துஆ ஓதி தமது பிரசங்கத்தை முடித்தார்கள்.

ஈதுகாஹ் மஸ்ஜித் பிரசங்கம்

கூட்டத் தலைவர் அவர்கள் இஷாஅத்தே இஸ்லாத்தின் அவசியத்தை வற்புறுத்திப் பேசுகையில் மௌலானா அவர்கள் இஸ்லாம் பிரசாரம் செய்யும் விஷயமாக வெளிநாடு சென்று அரும்பாடு படுவதைப் பாராட்டிவிட்டு நமது தமிழ் நாட்டிலும் விமரிசையாக இஸ்லாம் பிரசாரம் செய்யவேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டுப் பேசுகையில், சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் இஸ்லாத்தின் பாதுகாப்புக்காக அருந்தொண்டு செய்து வருவது பிரத்தியக்ஷம். அத்துடன் அச்சபையால் கம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தினர், 2000-பேர்களுக்கு அதிகமானவர்களை இஸ்லாத்தில் சேர்த்திருப்பதாகவும், அவர்களை இஸ்லாத்தில் சேர்த்ததுடன் நில்லாமல் அவர்களது கல்வி முதலிய சகல காரியங்களையும் கவனித்து வருவதாகவும், அச்சங்கத்தின் முதலாவது மகாநாடு ஆலீ ஜனுப் சௌக்கார் C. அப்துல் ஹக்கீம் சாகிப் பகதூர் அவர்களது தலைமையில் நடந்தபோது இரண்டாவது நாள் கூட்டத்திற்கு தாம் தலைமைவகிக்க நேர்ந்ததென்றும், அதுபோழ்து அங்குள்ள புதிய முஸ்லிம்களின் குழந்தைகள் ஓதிய கிராஅத்தைக் கேட்டுத் தமது உள்ளம் பரவசமடைந்ததாகவும் கூறி, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் இஸ்லாம் பாதுகாப்பைச் செய்வதுடன் இஸ்லாம் அபிவிருத்தியையும் செய்துவருவதாகக் கூறி, அச்சங்கத்தின் பொருளாதார நிலை சரியாக இல்லாததால் கூடிய சீக்கிரம் அந்நிய நாட்டிற்கு அதன் தூதுவக் கூட்டம் புறப்படப் போவதாகவும், உள்ளூரிலுள்ளவர்களும் அதில் ஏராளமாகச் சேர்ந்து அதன் பொருளாதார நிலைமையைப் பலப்படுத்தி ஆதரவு செய்ய வேண்டியதையும் வற்புறுத்திக் கூறினார்கள்.

மௌலானாவின் பிரசங்கம்

பிறகு, மௌலானா அப்துல் அலீம் சித்தீக்கி அவர்கள் உருதுவில் பேசுகையில் "நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளிடத்திலிருந்து அவர்களது உயிர்களையும் அவர்களது பொருள்களையும் அவர்களுக்குச் சுவர்க்க லோகத்திற்குப் பதிலாக விலைக்கு வாங்கிக்கொண்டான்'' என்பதாக திரு குர்ஆனில் இறைவன் கூறியுள்ளான்.

மானிட வர்க்கத்தினராகிய நாம் இந்த வசனத்தில் இறைவன் கூறி இருப்பதை நன்கு கவனிக்க வேண்டும். எனவே பூலோக வாழ்க்கை தான் நமக்கிருக்கிறதா அல்லது வேறுவிதமான வாழ்க்கையும் நமக்கிருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய இவ்வுலக வாழ்க்கையைத்தான் நாம் அனுபவப்பூர்வமாக அறிந்துகொண்டிருக்கிறோம். அவ்வுலக வாழ்க்கையை நாம் அனுபவத்தில் தெரிந்து கொள்ள இப்பொழுது முடியவில்லை. என்றாலும், அவ்வாழ்க்கையினைப்பற்றி வேத வசனங்களிலும், ஹதீது ஷரீபுகளிலுமிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. நமது இவ்வுலக வாழ்க்கையினை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இளமை, முதுமை, வயோதிகம் ஆகியவைகளாகும். இளமைப் பருவத்தில் நமது ஜீவியம் பெற்றோர்களாலும் மற்றோர்களாலும் அன்பு பாராட்டப் படுவதிலேயே கழிந்து விடுகிறது. இளமைப் பருவம் தீர்ந்த பிறகு நமக்குச் சுயப் பொறுப்புகள் ஏற்படுகின்றன. பணம் சம்பாதிருக்கிறோம். மற்றவர்களுடன் சேர்ந்து இதர கிரியைகளையும் செய்கிறோம். இக்காலத்தில் நாம் செய்யும் காரியங்களின் பலனையும், சேமித்து வைக்கும் பொருளையும் நாம் வயோதிகப்பருவத்தில் அடைகின்றோம். இக்காலத்தில் நாம் முன் எச்சரிக்கையாக இருந்து நமது வயோதிகப் பருவத்திற்கான விஷயங்களைச் செய்து கொள்ள வில்லையானால் வயோதிகப் பருவத்தில் நோய், சஞ்சலம், வறுமை முதலியவைகளிலகப்பட்டுக் கஷ்டமடைய நேரிடுகிறது. இது நம்மில் யாவருக்கும் நன்கு தெரிந்த விஷயம். ஆகவே, இவ்வுலக வாழ்க்கையிலுள்ள இம்மூன்று அம்சங்களும் நமது ஸ்தூல வாழ்க்கையில் சேர்ந்தவை. இதுபோல நமது ஆத்மாவிற்கும் மூன்று வகையான வாழ்க்கை இருந்து வருகிறது. இளமை, முதுமை, வயோதிகம் என்று அவைகளை நீங்கள் சொல்லுங்கள். அல்லது அதற்கு வேறு பெயர் கூறுங்கள். எவ்வாறாயினும் அதற்கு மூன்றுவிதமான நிலைமையிருந்து வருகிறது. நாம் உலகில் மனிதராகப் பிறப்பதற்கு முன் நாம் இருந்த நிலைமையானது நமது ஆன்மாவிற்கு இளமைப் பருவமாகும். இவ்வுலகில் பிறந்து இறக்கும் வரை

யுள்ள ஸ்தூல ஜீவியமானது நமது ஆன்மாவிற்கு முதுமைப் பருவமாகும். இதற்கடுத்த வாழ்க்கை வயோதிகப் பருவமாகும். ஆகவே, நமது ஆத்மாவின் வயோதிகப் பருவத்தில் அது சுகமாக இருப்பதற்காக அதனுடைய முதுமைப் பருவமாகிய இவ்வுலக வாழ்க்கையிலேயே நாம் வேண்டிய நற்கிரியைகளைச் செய்துகொள்ள வேண்டும். இல்லையேல் வயோதிகப் பருவத்தில் கஷ்டம் வருவது திண்ணம். இதனைக் குறித்துத்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "இவ்வுலகம் மறு உலகத்தின் விவசாயப் பூமி" என்பதாகக் கூறி மறு உலக வாழ்க்கைக்கான சாதனங்களை இவ்வுலகிலேயே முற்கூட்டிச் செய்து கொள்ளும்படி நமக்கு எச்சரிக்கை செய்துள்ளார்கள். மறு உலகினுக்கு நாம் செய்து கொள்ளவேண்டிய சாதனம் என்னவென்பதை இறைவன் திருகுர் ஆனில் "விசுவாசங் கொண்டவர்களே! உங்களை நரக வேதனையைவிட்டு ரக்ஷிக்கும் படியான ஒரு வியாபாரத்தை உங்களுக்கு அறிவிக்கட்டுமா? (அவ்வியாபாரம்) நீங்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் விசுவாசித்து, அவனுடைய பாதையில் உங்களது உயிர்களையும், பொருள்களையும் கொண்டு முஜாஹதாச் செய்வதுதான்" என்பதாகக் கூறி இருக்கிறான். மேலும், நான் முதலில் கூறிய ஆயத்தின்படி நமது உயிர்களையும் பொருள்களையும் நாம் அவனிடம் விலைக்குக் கொடுத்து விட்டோம். அவைகள் நமக்குச் சொந்தமல்ல. நமக்கு அவ்வுலக வாழ்க்கைதான் சொந்தமானது. ஆகவே, நாம் நமக்குச் சொந்தமான மறு உலகவாழ்க்கையை மறந்துவிட்டு, நமக்கு உரிமையும் பாத்தியதையு மில்லாத நமது உயிரையும் பொருளையும் நாம் விடாப் பிடியாகக் கொண்டிருப்பது மிகவும் தவறேயாகும். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஸஹாபிகள் இவ்வுண்மையை உணர்ந்திருந்தபடியால் தங்களது உயிர்களையும் பொருள்களையும் அவனது சன்மார்க்கத்திற்கு ஊழியம் செய்வதிலேயே ஈடுபடுத்தித் தங்களுக்கென எதனையும், இங்கு தேடாமல் இருந்து வந்தனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சிறிய தந்தையரும், பால்குடி சகோதரருமான ஸெய்யிதுஷ் ஹுஹதா அமீர் ஹம்ஜா (றலி) அவர்கள் வாள் வீச்சிலும் வில் வித்தையிலும் அம்பெய்வதிலும், மல்யுத்தத்திலும் நிகரற்ற வீரர் என்பதாகக் கியாதிபெற்றவர்கள். இவர்கள் இஸ்லாத்தைத் தழுவுதற்கு முன் எங்கேனும் யுத்தத்திற்குச் சென்றால் உருக்குச் சட்டைகளையும், கவசகுண்டலங்களையும் அணிந்து செல்லுவதுடன் பின்னணியிலேயே நின்று கொள்வார்கள். தம்மாலானவரை யுத்தம் செய்யாமல், எதிரியுடன் மல்லாடாமலிருக்கவே முயலுவார்கள். ஆனால், இஸ்லாத்தைத் தழுவிய பின் சென்ற யுத்தங்களில் உறுக்குச் சட்டையையும், உறுதியான ஆயுதங்களையும், வாள்களையும் எடுத்துக் கொள்ளாமல் வெறும் துணியைப் போர்த்திக் கொண்டு உடைந்த வாளைக் கையிலெடுத்துக் கொண்டு எல்லோருக்கும் முன்னால், முன்னணியில் செல்வது வழக்கம். இவர்களது இப்போக்கைக் குறித்து ஒருவர் வினவியபோது ஹஜ்றத் ஹம்ஜா (றலி) அவர்கள் "நான் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் எனது உடலத்தையும உயிரையும் என்னுடையனவென்றும், எனக்குச் சொந்தமானவைகளென்றும், நினைத்திருந்தேன். ஆனால், யான் ஈருலகிற்கும் ஸர்தாரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது திருக்கரத்தைப் பிடித்து யான் கலிமாச் சொன்ன பின்னர்தான் எனது உயிரும் உடலும் என்னுடையன வல்லவென்பது வெளியாயிற்று. ஆகவே, யான் போர் முனைக்குச் செல்லும்போதெல்லாம் சுவர்க்கத்து 'ஹூருல் ஈன்' "கள் இதோ வந்துவிடுங்கள்" என்பதாக என்னை அழைக்கின்றனர். ஆதலின் யான் போர் முனையில் முன்னணியில் செல்லுகின்றேன். எனது உயிரும் உடலும் இறைவனுக்கு விற்கப்பட்டிருப்பதால் அவைகளுக்குச் சொந்தக்காரனாகிய அல்லாஹு சுப்ஹான ஹுவத ஆலா அவைகளைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்வான். ஆகவே, யான் அவைகளைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லை" என்பதாகப் பதில் கூறினர்கள்.

பிறகு, மௌலானா அவர்கள் இஷாஅத்தே இஸ்லாம் வேலையைப்பற்றிப் பேசுகையில் தம்முடைய மதப்பிரசார வேலையில் சென்னை 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' பெரும்பான்மையான பங்கை எடுத்துக் கொண்டு தமக்கு பேருக்கத்தைக்கொடுத்து வருவதைப் பாராட்டியதுடன் தமிழ் நாட்டிலும் இஷா அத்து வேலையில் அதிகம் சிரத்தை காட்டி வருவதையும் குறிப்பிட்டு அச்சங்கத்திற்கு ஒவ்வொருவரும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து அதன் நிர்வாகிகளுக்கு இன்னும் அதிகமான உற்சாகத்தை அளித்து அவர்களுக்குப் பக்க பலமாக

இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

பிறகு தலைவர் முடிவுரையாகப் பேசும்போது வெளிநாடுகளில் இஸ்லாம் பிரசாரம் செய்து ஜெயப்பேரிகை முழக்கும் நமது மௌலானா அவர்களை இச் சென்னைமாகாண வாசிகளுக்குப் பொதுவாகவும், சிறப்பாகச் சென்னை வாசிகளுக்கும் முதல் முதலாக அறிமுகப்படுத்தி வைத்ததும், அவர்களைக் கொண்டு சென்னையிலும் வெளியிடங்களிலும் பிரசங்கங்கள் புரியும்படிச் செய்ததும் இதே ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்தான் என்றும், இச்சங்கத்தினர் இல்லாவிடில் மௌலானா அவர்களை நம்மில் பெரும்பாலர் இன்னார் என்றுகூட அறிந்துகொள்ள முடியாது என்றுங் கூறி சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து அதற்கு உதவி புரியும்படி வேண்டிக்கொண்டார்கள். அச்சபையிலேயே பலர் தங்களை சங்கத்தின் அங்கத்தினராகப் பதிவு செய்துகொண்ட பின் இரவு 12-மணிக்குக் கூட்டம் கலைந்தது.

காதியானிகளும் சுன்னத்து ஜமா அத்தும்

மௌலானா ஸித்தீகியும், காஜா கமாலுத்தினும்

முஸ்லிம் மதப்பிரசாரக் என்ற முறையில் காஜா கமாலுத்தீனின் பெயர் இஸ்லாமிய உலகில் விசேஷமாகப் பிரக்கியாதி பெற்றிருக்கிறது. கஜா கமாலுத்தீன் முஸ்லிம் மதப் பிரசாரகரா? அல்லது மிர்ஜாயி மதப்பிரசாரகரா? என்பதைப்பற்றி நமக்கு இப்பொழுது விவாதம் இல்லை. இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம் என்னவெனில், ஒருபக்கத்தில் காஜா கமாலுத்தீனும் அவருடைய வோக்கிங் மிஷனுமிருக்கிறது; மற்றொரு பக்கத்தில் சுன்னத்து ஜமா அத்தைச் சேர்ந்த உலமாக்களில் மிகவும் பலஹீனரும், மெலிந்தவரும், நோயாளியுமான ஹிஸ்ஹோலினஸ் மௌலானா மௌலவி முஹம்மது அப்துல் அலீம் ஸித்தீக்கியும் இருக்கின்றனர். இவ்விருசாராரில் எவருடைய பிரசாரம் முஸ்லிம்களுக்குப் பயன்றரத்தக்கதாகவும், இஸ்லாத்தை அபிவிருத்தி செய்வதாகவும் இருக்கிறது என்ற விஷயமேயாகும்.

காஜா கமாலுத்தீன் முஸ்லிம்களிடம் சந்தா வசூல் செய்தார். லக்ஷக்கணக்கான ரூபாய்களைச் சேகரித்தார். ஹைதராபாத்தில் உபகாரச் சம்பளம் பெற்றார். மிர்ஜாயி ஜமா அத்தைச் சேர்ந்தவர்கள் அவருக்குப்பின் பலமாக உபகாரம் செய்கின்றனர்.

முஹம்மது அப்துல் அலீம் ஸித்திக்கியினி டத்திலோ எவ்வித நிதியுமில்லை. மிஷனுமில்லை. அவர் சந்தா வசூல் செய்வதுமில்லை. எந்த அரசாங்கமும் அவருக்கு எவ்வித உதவியும் புரிவதில்லை.

இங்கிலைமையில் காஜா சாகிப் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று 6 மாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்தார். ஆயிரக்கணக்கான ரூபாய்களை சந்தாவாகத் திரட்டினர். தனது ஜோபிகளை நிறப்பிக் கொண்டு தென்னாப் பிரிக்காவிலிருந்து வாப்பஸ் வந்தார். அவர் தென் ஆப்பிரிக்காவில் இஷாஅத்தே இஸ்லாம் சம்மந்தமாகச் செய்த வேலை என்ன வென்பதை யாராவது கூறமுடியுமா? அவரது பிரசங்கத்தைக் கேட்க ஐரோப்பியர் மிகவும் கொஞ்சமாக விரல் விட்டெண்ணக் கூடியவாறு பிரசன்னமானார்கள். காஜாவின் பிரசங்கத்தில் தற்போதை கிறிஸ்துவ மதத்தைப்பற்றி மனத்தைப் புண்படுத்தக்கூடிய வாக்கியங்கள் நிறைந்திருந்தன. இதனைத் தவிர வேறொன்றும் இல்லை. எனவே அவர் தென் ஆப்பிரிக்காவிலுள்ள முஸ்லிம்களில் இரண்டு கக்ஷியை உண்டாக்கினர். அவைகளில் ஒன்று மிர்ஜாயிய்யத்தின் பால் அபிமானமும் சார்பு முள்ளது. மற்றொன்று அதனை வெறுக்கிறது. தென்னாப் பிரிக்காவில் அவரது பிரசங்கத்தைக் கேட்டு, ஒரு ஐரோப்பியராவது மனந்திரும்பி அவரது கையில் இஸ்லாம் மதத்தைத் தழுவினரா? தென் ஆப்பிரிக்காவில்

முஸ்லிம் மதப் பிரசார சபையை ஏற்படுத்துவ தற்கு ஏதேனும் ஏற்பாடு செய்தாரா? இவை கள் ஒன்றும் செய்யப்படவே இல்லை.

முஹம்மது அப்துல்அலீம் ஸித்தீக்கி 1934-ல் தென் ஆப்பிரிக்காவில் மூன்று மாதங்கள் மாத் திரமே சுற்றுப் பிரயாணம் செய்தார். டர்பன் நெட்டால் சென்றதும் மூன்று வாரத்திற்குள் அவரது பிரசங்கங்களைக் கேட்டு மூன்று ஆங் கிலேயர்கள் மனந்திரும்பி இஸ்லாம் மதத்தில் சேர்ந்தார்கள். பிரசங்கம் செய்யும் வேலை நின் றது. பல இடங்களிலும் ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும் முஸ்லிம்களாகிக் கொண்டே இருந்தனர். அவரது பிரசங்கத்தைக் கேட்க ஒவ்வொரு இடத்திலும் ஐரோப்பியர்கள் ஏராள மாக விஜயம் செய்தனர். ஏனெனில், அவர் மதத் தலைவர்களில் எவரையும் தாக்கிப் பேசுவ தில்லை. அன்பின் மூலம் இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்தார். அவர் அங்கு சென்று இஸ் லாம் பிரசார சபை ஏற்படுத்துவதற்கான காரி யங்களைச் செய்தார். அனாதைச் சாலை ஒன்றை நிருவினார். முஸ்லிம்கள் தாங்களாகவே மன முவந்து அவருக்குப் பணமுடிப்பளித்தனர். ஆனால், அவர் அங்கிருந்து சென்றபோது முஸ்லிம் களளித்த அந்தப் பணமுடிப்பை ஹஜ்ஜுக்குச் செல்கின்ற ஒருவரிடம் கொடுத்து மதீனாமுனவ்வராவிலுள்ள அனாதைச் சாலைக் குக் கொடுக்கும்படியாக முஸ்லிம்கள் நிறம் பவுள்ள சபையில் பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டார்.

காஜா கமாலுத்தீன் சிங்கப்பூர் ஜாவா முத லிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஆயிரக்கணக்கான டாலர்களைச் சந்தாவாகச் சேர்த்தார். ஜாவா மலாயா பிரதேசங்களில் அவரது பிரசங்கத்தின் பயனாக முஸ்லிம் அல்லாதாரில் எத்தனைபேர் இஸ்லாத்தைத் தழுவினார்கள் என்பதை எவரேனும் அறிவிக்க முடியுமா? ஆனால், அவரது விஜயத்தின் காரணமாக ஜாவாவில் மிர்ஜாயியத்தின் விதை விதைக்கப்பட்டது. முஸ்லிம்களுக்குள் பிளவு உண்டாயிற்று. இவ்விரு காரியங்களும் நிகழ்ந்தது நிச்சயம். இதில் சந்தேகமே இல்லை.

முஹம்மது அப்துல் அலீம் ஸித்திக்கியும் சிங்கப்பூர் ஜாவா ஆகிய இடங்களுக்குச் சென் றார். இன்றுவரை அவர் எவ்விதச் சந்தாவும் வாங்கவே இல்லை. ஆனால், சில வாரகாலம் அங்கு தங்கி இருந்ததால் டஜன் கணக்கான மக்கள் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள் என்பதை சிங்கப்பூர் ஜாவா மலாயா ஆகிய நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் நன்கு அறிவார்கள். அவரது பிரசங்கத்தைக் கேட்பதற்காக மண்டபம் முழு வதும் ஜாதிமத பேதமின்றி ஜனக்கூட்டம் நிரம்பி இருக்கிறது. ஜாவாவில் இஸ்லாம் பிர சாரம் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட் டது. அகில மலாயா முஸ்லிம் மிஷனரி ஸ்தா பனம் ஏற்பட்டது. அதற்குக் கிளை ஸ்தாப னங்களும் ஏற்பட்டன. இவை எல்லாம் இவரது முயற்சியின் பயனே யாகும்.

இப்பொழுது சமீபகாலத்தில் காஜா கமாலுத் தீன் இவ்வுலகின் மேற்குக் கடைசியான இங் கிலாந்தில் பல வருஷங்கள் தங்கி இருந்து மிஷ னரி சம்மந்தமான பல புத்தகங்கள் எழுதினார். லக்ஷக் கணக்கான ரூபாய்களை தனது நண்பர் களுடையவும், தன்னுடையவும் சுகத்திற்காகச் செலவு செய்தார். இவ்விஷயத்தை மௌலவீ பஜ்லே கரீம் துர்ரானி என்பவர் வோக்கிங் மிஷன் சம்மந்தமாக எழுதிய வியாசத்தில் அதன் வண்டவாளங்களைத் துலக்கி வைத்திருக் கிறார்.

ஆனால், முஹம்மது அப்துல் அலீம் ஸித் தீக்கி உலகத்தின் கிழக்குக் கோடியான ஜப் பானுக்குச் சென்றார். அந்த தேசத்திலுள்ள ஜப்பானிய பாஷையையுங்கூட அவர் அறிந் திருக்கவில்லை. அவரிடம் இஸ்லாம் பிரசாரத் திற்காக நிதியும் இருக்கவில்லை. அதற்காகச் சந்தா வசூலும் செய்யவில்லை. ஜப்பானிலுள்ள முஸ்லிம்கள் அவருடன் ஒத்துழைக்கவும் ஆரம் பத்தில் தயாராக இருக்கவில்லை. இவ்வித நிலை மையில் அவர் அங்கு பத்து வாரங்கள் தான் தங்கி இருந்தார். இதற்குள்ளாக 22-பேர்களை இஸ்லாத்தில் சேர்த்தார். இவர்களில் காலேஜ் புரொபஸர்களும், சர்வகலாசாலைப் பட்டதாரி களும், தனம் படைத்த வியாபாரிகளும், இத ரர்களு மிருக்கின்றனர். இவர்கள் பகிரங்கமாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள். இவர்களை அல்லாமல் நூற்றுக் கணக்கான ஜனங்கள் தங்கள் மனத்திற்குள் இஸ்லாத்தைப் பற்றி நன்கு விசுவாசித்துக்கொண்டு பகிரங்கமாக அறிக்கை செய்யாம லிருக்கின்றனர்.

மிர்ஜாயி வோக்கிங் மிஷனைச் சேர்ந்தவர்கள் கண்விழித்துப் பார்ப்பார்களா? முன்னோர் களான பாரவான்களும் வலிமார்களும் இஸ்லாத் தைப் பிரசாரம் செய்வதில் பெயரையும் கீர்த்தி யையும் சம்பாதிப்பதற்காகத் தங்களைப் பற்றிப்

படாடோபமாக விளம்பரம் செய்யவில்லை. ஆனால், மிர்ஜாயிகளோ எவ்விதப் பிரயோஜனத்தையும் செய்யாமல் தங்களைப் பற்றிப் பறை யறை விப்பதுடன் பொதுஜனங்களது பணத்தை வாங்கி ஏப்பம் விடுகின்றனர். உண்மையான இஸ்லாமியப் பிரசாரம் எது வென்பதை முஸ்லிம்கள் உய்த்துணரும் பொருட்டு இவ் வியாசம் எழுதப்பட்டது.

"முஸ்லிம் யூத்" தின் அறியாமை

(P. K. அக்பர் அலி சாகிப்)

சோதரீர்! சில தினங்களுக்கு முன் இராய வேலூர் பாக்கியாத் ஸாலிஹாத் அறபிக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது யாவருக்கும் தெரிந்த விஷயம். அம்மத்ரஸாவை எதற்காக ஏற்படுத்தினர்கள்? அதற்கேற்படும் செலவுத் தொகையை எந்த நோக்கத்தின் பேரில் பொது ஜனங்கள் கொடுக்கிறார்கள்? என்ற விஷயம் யாவரும் அறிந்ததே. பொது ஜனங்கள் அளிக்கும் பணத்தை அதன் நிர்வாகிகள் கொஞ்சமும் விரயம் செய்யாமல் மிகவும் சிக்கனத்துடன் செலவு செய்து எதிர்பார்த்ததை விட அதிகமான ஊழியத்தைச் செய்து வருகிறார்கள் என்பதும் நம்மவருக்குத் தெரியாத விஷயமன்று. ஆனால், சென்னையிலுள்ள ஒரு பத்திரிகையின் கூற்றுகளைப் பார்க்கும் போது நமக்கு விந்தை ஏற்படுகிறது. அப்பத்திரிகை வேலூர் அறபிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவைக் குறித்து எழுதியுள்ள உபதலையங்கத்தில் "வருஷம் ஒன்றுக்கு அக்கல்லூரி இருபதாயிரம் ரூபாய்களைச் செலவு செய்வதாகவும், பத்து வருஷ காலத்தில் இரண்டு லக்ஷம் ரூபாய்களைச் செலவு செய்திருப்பதாகவும், இவ்விரண்டு லக்ஷம் ரூபாயைச் செலவு செய்து 39 ஆலிம்களைத்தான் தயார் செய்திருப்பதாகவும், இவ்வாலிம்கள் மஸ்ஜிதுகளில் இமாம் வேலை பார்க்கவும், விசாலமான புத்தியுள்ளவர்களைக் காபிர் என்று பத்வாக் கொடுக்கவும் தான் உதவுவார்கள்; மற்ற காரியங்களுக்கு இவர்களால் ஒன்றும் இயலாது" என்பதாகவும் கூறி இருக்கிறது.

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்றபடி சென்ற பத்து வருஷகாலமாக அம்மத்ரசா செலவு செய்த இரண்டு லக்ஷம் ரூபாய்களில் 39 ஆலிம்களை மட்டிலும் தயார் செய்ததா? அல்லது அதனைப் பார்க்கினும் அதிகமாக நூற்றுக்கணக்கான ஆலிம்களைத் தயார் செய்ததா என்பதைக் கூட உணர்ந்து கொள்ளவில்லை. பொறாமைக் கண் கொண்டு பார்த்தால் உண்மை புலப்படாதல்லவா? அதுபோல் இப் பத்திரிகைக்கும் பொறாமை அதிகமிருந்ததால் தான் இராயவேலூர் அறபி மத்ரஸா, சென்ற பத்துவருஷகாலமாகத் தயார் செய்த மௌலவிகள் எத்தனைபேர் என்று கூட உணர்ந்து கொள்ளவில்லை.

மௌலவிகள் மஸ்ஜிதுகளில் இமாம்களாக இருக்கிறார்கள் என்பது அப்பத்திரிகை கூறும் குறைகளிலொன்று. மஸ்ஜிதுகளில் இமாம்களாக இருப்பதற்கு மௌலவிகளை நியமிக்காமல் வேறு யாரை நியமிப்பது. மௌலவிகள் இமாம்களாக மட்டிலும் தானிருக்கிறார்களா அல்லது வேறு பல உபயோகமான காரியங்களையும் செய்கிறார்களா என்பதை இப்பத்திரிகை உணராமற்போனதற்கு ஆச்சரிய மடைகின்றேன். தென்னாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான மௌலவிகள் பிரசங்கிகளாகவும், பத்திராசிரியர்களாகவும், நூலாசிரியர்களாகவும், பிற மதத்தாரை இஸ்லாத்தில் சேர்ப்பவர்களாகவும், மார்க்கக் கல்விச் சாலைகளில் ஆசிரியர்களாகவும், தலைவர்களாகவும், கவர்ன்மென்ட் ஸ்கூல்களில் உருது ஆசிரியர்களாகவும், மத போதகர்களாகவும் இருந்து முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிவரும் தொண்டுகளை இந்த "முஸ்லிம் யூத்" தெரிந்து கொள்ளாதது அதன் அறியாமையேயாகும்.

பாக்கியாத் ஸாலிஹாத் மத்ரஸாவை ஆதியில் ஸ்தாபிக்கும் போதே தென்னாட்டில் மார்க்கக் கல்வியை அபிவிருத்தி செய்து, முஸ்லிம்களுக்கு மார்க்கத்திலுள்ள சத்தியத் தன்மையை விளக்குவதற்கான அறிஞர்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதேயாகும். இந்த நோக்கத்திற்கான கல்வியையே அம்மத்ரஸா அன்று முதல் இன்றுவரை பரவச்செய்து வருகிறது. அங்கு பயிற்சி பெற்றுத் தேர்ந்த அறிஞர்கள் அம்மத்ரஸாவின் நோக்கத்தை இனிது நிறைவேற்றி வருகிறார்கள். ஆதலால், அவர்கள் செய்யும் அரிய தொண்டைப் பொதுஜனங்கள் பாராட்டி அம்மத்ரஸாவை நாளுக்குநாள் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று அதற்கு வேண்டிய தன சகாயத்தையும் செய்து வருகிறார்கள்.

இனி, மௌலவிகள் விசால நோக்க முள்ளவர்களைக் காபிர்களென்று பத்வாக் கொடுக்கிறார்களா அல்லது காபிர்கள் தங்களை விசால நோக்க முள்ளவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்களா என்பதைக் கவனிப்போம். இதனைப்பற்றி நாம் ஆராய்வதற்கு முன் ஒரு சிறு சமாசாரத்தை நண்பர்கள் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தார் திருடர்களை, கொள்ளைக்காரர்களை, அயோக்கியத்தனம் செய்பவர்களை, கட் குடியர்களை, சூதாடிகளை, குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடித்து நீதிஸ்தலத்திற் கனுப்புவதற்காகவும், சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காகவும் போலீஸ் இலாக்காவை ஏற்படுத்தி இருக்கின்றனர். இவ்விலாக்காவைச் சேர்ந்தவர்களை திருடர்கள், கட் குடியர்கள், சூதாடிகள், கொள்ளைக்காரர்கள் குற்றச் செய்கையைச் செய்கிற மற்றவர்கள் விரும்புவதில்லை. அவர்களைத் தூஷணை செய்வர். சமயம் வாய்ப்பின் தடி கொண்டு தாக்கவும் செய்வர். இதற்குக் காரணம் என்ன? தங்கள் இஷ்டம்போல் செய்யும் காரியத்தைப் போலீஸ்காரர்கள் தடை செய்கின்றனர். இதனால் தங்கள் மனோபீஷ்டம் நிறைவேறுவதில்லை என்பதேயாகும். ஆனால், சட்டத்தை மீறாமலும், யோக்கியமாகவும் இருப்பவர்கள் போலிஸ்காரர்கள் சமாதானத்தைக் குலையவிடாமல் காப்பதையும், இதனைக் குலைக்க முயலுபவர்களைப் பிடித்து நீதிஸ்தலம் அனுப்புவதையும் போற்றி, அவர்களைப் பாராட்டுவர். அவர்கள் பால் அபிமானம் கொண்டு இத்தகைய காரியங்களுக்குப் பக்கபலமாக இருந்து உதவிபுரிவர். இதுபோல, உலமாக்கள் அல்லாஹுதஆலாவினால் ஏற்படுத்தப்பட்ட ஆத்ம அரசாங்கத்தில் போலீஸ் இலாக்காவில் வேலை பார்ப்பவர்கள். அவ்வாத்ம அரசாங்கத்தில் குற்றச் செயலென முடிவு செய்யப்பட்டிருக்கும் காரியங்களைச் செய்பவர்களைக் குற்றம் செய்பவர்கள் என்று கூறி அவர்களை அக் காரியத்தைச் செய்ய விடாமல் தடுப்பவர்கள். ஆத்ம அரசாங்கத்தின் அமைதியைச் சீர்குலைய விடாமற் காப்பவர்கள். ஆகவே, ஆத்ம அரசாங்கத்தில் யோக்கியர்களாக இருப்பவர்கள் உலமாக்களை நேசித்து அவர்களது காரியங்களில் அவர்களுக்கு உதவி புரிகின்றனர். ஆனால், ஆத்ம அரசாங்கத்தின் நீதிஸ்தலத்தில் கட் குடியராகவும், திருடராகவும், கொள்ளைக்காரராகவும், கொலைகாரராகவும், குற்றச் செய்கைகளைச் செய்பவர்களாகவும் கருதப்படுபவர்கள் உலமாக்களைத் தங்கள் யமன் போல் பாவிக்கின்றனர், பகைக்கின்றனர், வெறுக்கின்றனர், தூஷிக்கின்றனர். அவர்களுக்குப் பிறர் உதவி செய்வதையும்கூடச் சகிக்கின்றனரில்லை. இதுதான் இதுபோழ்து இவ்வுலகில் நிகழ்ந்துவரும் உண்மை நிலை.

ஆகவே, "முஸ்லிம் யூத்" என்னும் பத்திரிகை உலமாக்களைப்பற்றி "அவர்கள் விலாச நோக்க முள்ளவர்களைக் காபிர்கள் என்று பத்வாக் கொடுப்பவர்கள்" என்று சர்ட்டிபிகேட் செய்திருப்பதானது ஆத்மீக அரசாங்கத்தில் குற்றச் செய்கையாக மதிக்கப் படுவனவற்றைச் செய்யும் பேர்வழிகளைத் தடுத்து நிறுத்துகிறார்கள் என்று கூறுவதாகவே இருக்கிறது. வேலூர் மத்ரஸாவிற்கு வருஷந்தோறும் 20 ஆயிரம் ரூபாய் தர்மமாகக் கொடுப்பதைச் சகிக்க முடியாமல் அங்கிருந்து வெளி யேறும் மௌலவிகளைக் குறை கூறி மத்ரஸாவிற்குக் கொடுக்கும் பணம் உபயோகமற்றது என்று நினைக்கும்படி செய்திருப்பதானது அப்பத்திரிகையின் விசால நோக்கத்தைக் காட்டாமல் குறுகிய நோக்கத்தையே காண்பிக்கிறது. உலமாக்கள் எவரையும் காபிர்கள் என்று கூறுவதில்லை. அல்லாஹுதஆலாவினது ஆத்மிக அரசாங்கமாகிய இஸ்லாத்தின் சட்டங்களை மீறுகிறவர்களையே காபிர்கள் என்று கூறுவார்கள். அச்சட்டத்தை மீறாதவர்களை அவர்கள் அப்படிச் சொல்வதில்லை என்பதை "முஸ்லிம் யூத்" அறியுமாக.

நமது நன்றி உரித்தாகுக!

நமது மாசிகைக்குள்ள சந்தா சொற்பமே யாயினும் அநேக நண்பர்கள் அசட்டையாலோ, அல்லது தூண்டுகோலின்மையாலோ ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாவை அப்போதைக் கப்போது அனுப்பிக் கொடுக்காமல் பாக்கிகள் நின்று கொண்டே வந்தது. இதனை ஆங்காங்குள்ள நமது நண்பர்கட்கு தெரிவித்தும் அன்னோரும் பற்பல வேலைத் தொந்திரவால் கவனிக்க முடியாதிருந்து வருகிறது. இவ்வாறு பினங்கில் அநேக சந்தா தாரர்களிடமிருந்து சந்தா வசூலாகாதிருக்கும் நிலைமையில், ஹிஸ் ஹோலினஸ் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் முகம்மது அப்துல் அலீம் சாஹிப் ஸித்தீகி அவர்கள் இந்தியா பிரயாணஞ் செல்வதை வழியனுப்புவதற்காக பினங் வந்திருந்த ஆலிம்களின் அன்பரும் பரோபகாரியும் பொது நலப் பிரியருமான ஆலி ஜனாப் கோ. அ. பகீர் முகம்மது சாஹிப் அவர்கள் அரும் பிரயாசையுடன் ஜனாப்களான **N. K.** முகம்மது கௌஸ் சாஹிப், நூறுத்தீன் ஹாஜியார், ஆர். குத்துபுத்தீன் இவர்களுடன் சந்தா வசூலுக்குச் சென்று பினங் பாக்கிகளை கவனித்துக்கொண்டு அங்கிருந்து மோட்டாரில் ஈப்போ வந்து கனம். ம. மு. அப்துற்றஹீம், **V. O.** ஹஸன் முகம்மது முதலிய அன்பர்களின் உதவியினால் அவ்விடத்திலும் மற்ற விடங்களிலும் ஏற்பாடு செய்துவந்த கனம். கோ. அ. பகீர்முகம்மது சாஹிபுக்கும் அவர்களுடன் வந்த இஞ்சே. எம்.ஒ. ஹஸன்முகம்மது நாட்டாமை, நண்பர்களான ஜனாப்களான **N. K.** முகம்மது கௌஸ் சாஹிப், நூருத்தீன் ஹாஜியார், **R.** குத்துபுத்தீன், ம. மு. அப்துற்றஹீம், **V. O.** ஹஸன் முகம்மது முதலிய கனவான்களுக்கும், நன்றி யறிதலான வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அல்லாஹ் தஆலா அன்னவர்களின் முயற்சிக்கு நற்கூலி அளிப்பானாக.

சந்தா நேயர்கட்கு!

அன்பீர் !

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1935—1936-ம் ஆண்டுகளுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பாக்கிகளை தாமதமின்றி 30-11-36 திகதிக்குள் அனுப்பிவைப்பார்களென எதிர் பார்க்கிறோம். இல்லையேல் நாளது டிசம்பர் மாதம் முதல் தேதி வெளியாகும் மாசிகையை வி. பி. செய்து அனுப்பிவைக்கப்படுமென்பதை அன்பர்கட்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

N. B.—வி. பி. -யில் அனுப்புவதுகொண்டு வீண் செலவு ஏற்படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனுப் மு. முகம்மதுஷரீப் சாஹிப் அவர்கள்,

(208, ஸிலிங்கி ரோட்) இடமும்

பினங் வாசிகள்

ஜனுப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்,

(113 A சோலியா ஸ்டீட்) இடமும்

மலாக்கா & மலாய் நாட்டு வாசிகள்.

ஜனுப் K. A. பகீர் முகம்மது சாஹிப்,

(P. O. Box No. 60, கிள்ளான்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனுப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்கு தெருவு, கொழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

சென்னை-600 008

Printed by V. Sundaram Iyer at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T., Madras.